# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 28
விலை - 30ரூபா

சுடர் 34 கதிர் 329 ஐப்பசி 07 ஆம் நாள் வியாழக்கிழமை 24 ஒக்ரோபர் 2019 வள்ளுவர் ஆண்டு 2050


# ஆட்சிக்கு யார் வந்தாலும் அழுத்தம் கொடுப்போம்!

## அமெரிக்கா உறுதிபடத் தெரிவிப்பு

**வொஷிங்ரன், ஒக்ரோபர் 24**

**இலங்கையில் அடுத்த மாதம் தெரிவு செய்யப்படும் புதிய அரசுக்கு மனித உரிமைகள் விவகாரம் குறித்து தொடர்ந்து அழுத்தங்கள் கொடுக்கப்படும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.** 23

13 அம்சக் கோரிக்கைகளை

## முக்கிய வேட்பாளர்கள் ஏற்றால் போட்டியில் இருந்து விலகுவேன்

*சிவாஜிலிங்கம் அறிவிப்பு*

கொழும்பு, ஒக். 24

ஐந்து முதன்மைக் கட்சிகளால் முன்வைக்கப்பட்டிருக்கும் 13 அம்சக் கோரிக்கைகளை முக்கிய வேட்பாளர்களான சஜித் பிரேமதாச அல்லது கோத்தபாய ராஜபக்ச ஏற்றுக் கொண்டால் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து விலகத் தயார் என்று முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார். 23

## வாசிப்பை ஊக்குவிக்கும் பேரணி நாளை

கொடிகாமம், ஒக். 24

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் முகமாக சாவகச்சேரி பிரதேச சபையின் பொது நூலகத்தினரால் நாளை வெள்ளிக்கிழமை விழிப்புணர்வுப் பேரணி இடம்பெறவுள்ளது.

சாவகச்சேரி பிரதேச சபையின் உபதவிசாளர் க.வாமதேவன் 04



## இராணுவத்தை ஏமாற்றியோரே ராஜபக்சாக்கள்

*மங்கள சபையில் சாட்டை*

கொழும்பு, ஒக். 24

இராணுவத்தை பாதுகாப்பதாகக் கூறி தமது அரசியல் செல்வாக்கை நிலை நாட்டிய ராஜபக்ச குடும்பத்தினர் இன்று என்ன செய்வது என்று தெரியாமல் நிலை குலைந்து நிற்கின்றனர் என்று நிதியமைச்சர் மங்கள சமரவீர நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தொடர்ச்சியாக பத்து வருடங்கள் போர் வெற்றியை விற்று உண்டவர்களே ராஜபக்ஸ குடும்பத்தினர். தற்பொழுது நாட்டிற்கு உண்மை வெளி வந்து விட்டது. யார் போரை வெற்றிகொண்டார்கள் என்பதை கோத்தபாய ராஜபக்சவே வெளிப்படுத்தி விட்டார். நாட்டைப் பாதுகாப்பதற்காக செயற்பட்ட இராணுவத் தளபதிக்கு இவர்கள் என்ன செய்தார்கள்?. நடுவீதியில் 23

சவேந்திர சில்வாவால்

## பாதுகாப்பு ஒத்துழைப்பை குறைக்கிறது அமெரிக்கா

வொஷிங்ரன், ஒக். 24

மோசமான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான வரை, இராணுவத் தளபதியாக நியமித்திருப்பது, இலங்கையுடனான அமெரிக்காவின் பாதுகாப்பு ஒத்துழைப்பைக் கணிசமாகக் குறைக்கும் என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின், மனித உரிமை விவகாரங்களுக்குப் பொறுப்பான அதிகாரியான றொபேர்ட் டெஸ்ரோ தெரிவித்துள்ளார்.

இராஜாங்கத் திணைக்களத்தின், ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள், தொழிலாளர் விவகாரங்களுக்கான உதவிச் செயலரான றொபேர்ட் டெஸ்ரோ, அமெரிக்க நாடாளுமன்றத்தின் அயலுறவுத்துறைக் குழு முன்பாக நேற்றுமுன்தினம் உரையாற்றிய 23

## அரசியல் கைதிகளை விடுவிப்பார் கோத்தா

### தன்னிடம் உறுதியளித்தார் என்கிறார் பிரபாகணேசன்

கொழும்பு, ஒக். 24

அரசியல் கைதிகள் விடுதலை உடனடியாக இடம்பெறும் என்று கோத்தபாய தெரிவித்தார் என்று ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் பிரதி அமைச்சருமான பிரபா கணேசன் குறிப்பிட்டார்.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச, அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச ஆகியோரை அண்மையில், ஜனநாயக 04

அரச தலைவர் தேர்தல் தொடர்பில்

## ஐந்து தமிழ் கட்சிகளுடைய முதலாவது சந்திப்பு இன்று!

யாழ்ப்பாணம், ஒக். 24

அரச தலைவர் தேர்தல் தொடர்பில் ஐந்து தமிழ்க் கட்சிகளின் முதலாவது சந்திப்பு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான இரா. சம்பந்தனது கொழும்பு இல்லத்தில் இன்று இடம்பெறவுள்ளது.

அரச தலைவர் தேர்தல் நவம்பர் மாதம் 16ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இந்தத் தேர்தலில் தமிழர் தரப்பில் 23

நீராவியடிப் பிக்குவின் இறுதிச் சடங்கை

## தமிழ்ச் சகோதரர்கள் எதிர்க்கவில்லை கூட்டமைப்பினர்தான் எதிர்க்கின்றனர்

### இப்படிச் சொல்கின்றார் ஞானசாரர்



கொழும்பு, ஒக். 24

குருகந்த விகாராதிபதியின் இறுதி கிரியைகளை தமிழ் தேசிய கூட்டமைப்பின் சில அரசியல்வாதிகளே குழப்பியடித்தனர். அங்கிருந்த தமிழ் சகோதர்கள் இதற்கு எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை இவ்வாறு தெரிவித்தார் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கில் தற்போது தனி அரசே காணப்படுகிறது. பிரிவினை வாதத்தை வளர்க்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் செயற்பாடுகளுக்கு அடிபணிய வேண்டிய தேவை எமக்கில்லை. தனிநாடுபற்றி பேசி சட்டத்தை தங்கள் இஷ்டத்துக்கு அவர்கள் நடைமுறைப்படுத்துவதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது.

குருகந்த விகாராதிபதியின் இறுதி கிரியைகளை தமிழ் தேசிய 23

## நாடாளுமன்ற தெரிவுக்குழுவினது இறுதி அறிக்கை நேற்றுச் சமர்ப்பிப்பு

கொழும்பு, ஒக். 24

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை தடுப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறிய சில தரப்பினர் தொடர்பில் கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் இறுதி அறிக்கை நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த அறிக்கையில் தாக்குதலை தடுப்பதற்கு தவறியவர்களின் பெயர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது. அரச புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர், கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ள பொலிஸ்மா அதிபர், பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலர் ஆகியோர் இதில் இடம்பெற்றிருப்பதாக தெரிவுக்குழு குறிப்பிட்டுள்ளது.

தெரிவுக்குழுவினர் தமது இறுதி அறிக்கை தொடர்பில் ஊடகங்களுக்கு தெளிவுபடுத்துவதற்காக நாடாளுமன்ற கட்டிட தொகுதியில் செய்தியாளர் மாநாட்டை நடத்தினர். இதன்போது பொறுப்பை தட்டிக்களிக்கும் தரப்பினராக தனிநபரை பெயரிட முடியாது என்றும் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

தேவைப்படும் பட்சத்தில் இந்த அறிக்கையை சபாநாயகர் 23

## தெரிவுக்குழுவை தவறாக வழிநடத்தினார் மைத்திரி

### நேற்றைய அறிக்கையில் தகவல்

கொழும்பு, ஒக். 24

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட நாடாளுமன்ற தெரிவுக் குழு தனது அறிக்கையில், 'அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன முரண்பாடான கூற்றை முன்வைத்து தெரிவுக்குழுவை வேண்டுமென்றே தவறாக வழிநடத்தியுள்ளார்' என்று தெரிவித்துள்ளது.

மூடப்பட்ட அறைக்குள் அரச தலைவர் வாக்குமூலம் வழங்கியிருந்தார். சிங்கப்பூரிலிருந்து இலங்கை வந்த வானூர்திகள் அனைத்தி 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழிவுகரமான அரசியலின் முடிவு... இரக்கமுள்ள தேசத்தின் ஆரம்பம்

## எனது பத்து உறுதிமொழிகள்

1
செயல்திறன் மற்றும் சிறந்த முடிவுகளை எடுக்கும் தகுதிவாய்ந்த சமூகத்தை நிலைநாட்டல்.

2
ஏற்றுமதி அடிப்படையிலான நிலையான அபிவிருத்தி செயல்முறை, தேசிய வளங்களை அதிகப்படுத்துதல், விவசாயம் மற்றும் உள்ளூர் உற்பத்தியை வலுப்படுத்துதல்.

3
நாட்டின் அனைத்து பகுதிகளையும் சமூகத்தின் அனைத்து பிரிவுகளையும் சென்றடையும் சமமான பொருளாதார வளர்ச்சியின் மூலம் வறுமையை குறைத்தல்.

4
அச்சமின்றிய, ஒரு ஒழுக்கமான, பாதுகாப்பான மற்றும் ஒன்றிணைந்த இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கான தேசிய வேலைத்திட்டம்.

5
முழு நாட்டிற்கும் ஒரே மற்றும் சமமான சட்டம்.

6
உலகளாவிய மற்றும் புதுமையான கல்வி முறை மூலம் இளைஞர்களுக்கு அதிகாரமளிக்கும் மற்றும் தொழில்முனைவோரை ஊக்குவிக்கும் சூழல்.

7
இலங்கைத் தாயின் அடையாளமான பெண்களை மதிக்கும் மற்றும் சமத்துவ அதிகாரம் அளிக்கும் ஒரு சமூகத்தை உருவாக்குவோம்.

8
குழந்தைகள், முதியோர் மற்றும் சிறப்புத் தேவையுடையோரின் நலன்களில் முக்கிய கவனம் செலுத்துதல் மற்றும் உரிமைகளை உறுதி செய்தல்.

9
புதிய தொழில்நுட்பத்தால் இயக்கப்படும் அதிகாரம் பெற்ற, திறமையான, ஊழல் இல்லாத பொது சேவை.

10
நமது தேசத்தின் பாதுகாப்பு, பொருளாதார மற்றும் பிற நலன்களின் அடிப்படையில் ஒரு அணிசேரா சர்வதேச வெளியுறவுக் கொள்கை.



இந்த மாற்றங்களைச் செய்யத் தேவையான அரசியலமைப்பு மற்றும் சட்டமன்ற மாற்றங்களை உருவாக்குவதற்கான எனது முழு அர்ப்பணிப்பு மற்றும் பொறுப்பை ஏற்பதாக உறுதியளிக்கிறேன்.

அரசியலின் சேவைக்கு என்னை நான் முழுமையாக அர்ப்பணிக்கிறேன்.

**நம் நாட்டின் திசையை மாற்ற நீங்கள் உறுதியாக இருந்தால் எங்களுடன் கைசேருங்கள்!**

அழிவுகரமான அரசியலின் முடிவு.
இரக்கமுள்ள தேசத்தின் ஆரம்பம்

மக்கள் தலைவர் **மகேஷ் சேனநாயக்க**


தேசிய மக்கள் கட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலசாலி முயல்

அடர்ந்த காட்டு வழியே நடந்து கொண்டிருந்த முயல், மூங்கில்குருத்துகளை உடைத்துச் சாப்பிட்டுக்கொண்டிருந்த யானையைப் பார்த்தது. "வணக்கம் யானை அண்ணா. இன்றைக்கு நாள் நல்லா இருக்கு" என்றது. தன் காலடியில் நின்ற முயல்குட்டியை அலட்சியமாகப் பார்த்தது யானை. "என் கால் நகம் அளவுகூட இல்லாத நீ எல்லாம் என்னிடம் பேசும் அளவு வளர்ந்துட்டியா?" என்று கடுமையாகக் கேட்டது. முயல் குட்டியின் முகம் வாடிப்போனது.

ஏன் யானை அண்ணன் தன்னிடம் இப்படி பேசியது என்று யோசித்தபடியே நடந்தது. காட்டையொட்டி இருக்கிற கடலில் வாழும் திமிங்கலம் அக்காவிடம் கேட்கலாமே என்று கடற்கரைக்கு ஓடியது.



"திமிங்கலம் அக்கா..."முயலின் சத்தம் கேட்டு, தண்ணீருக்கு வெளியே எட்டிப் பார்த்தது திமிங்கலம். கடற்கரையில் இருந்த முயலைப் பார்த்து, "நீயா? என்னைக் கூப்பிட்டாயா?" என்றது.

'ஆமாம்' எனத் தலையாட்டியது முயல். அது அடுத்த வார்த்தை பேசுவதற்குள், "என் கண்ணைவிட சின்னதா இருக்கிற உன்னிடம் பேசுறதுக்கு எனக்கு நேரம் இல்லை" என்று யானையை விடக் கடுமையாகப் பேசிவிட்டுத் தண்ணீருக்குள் சென்றது திமிங்கலம்.

முயலின் சோகம் அதிகமானது. மீண்டும் திமிங்கலத்தை அழைத்தது. "நான் உருவத்துல சின்னதா இருந்தாலும் பலத்துல உங்களைவிட பெரியவன். வேணும்னா ரெண்டு பேரும் நேருக்கு நேர் மோதிப் பார்க்கலாமா?" என்று கேட்டது.

திமிங்கலத்துக்குச் சிரிப்பு தாங்க முடியவில்லை. இருந்தாலும் போட்டிக்கு ஒப்புக்கொண்டது.

நீளமான கயிறைக் கொண்டுவந்து திமிங்க லத்திடம் கொடுத்தது. "அக்கா, இந்தக் கயிற்றின் இன்னொரு முனையை நான் பிடித்துக்கொள்வேன். நான் இழு என்று சொன்னதும் நீங்கள் இழுக்க வேண்டும்" என்று சொல்லிவிட்டு, கயிறுடன் காட்டுக்குள் ஓடியது.

அங்கே இருந்த யானையையும் இதேபோல போட்டிக்கு அழைத்தது. "இதென்ன பெரிய விடயம்? நான் ஒரு இழு இழுத்தால் நீ காணாமல் போய்விடுவாய்" என்று சொல்லிக்கொண்டே கயிறைத் தன் தும்பிக்கையில் கெட்டியாகப் பிடித்துக்கொண்டது யானை.

"நீங்கள் கொஞ்சம் பொறுங்கள் அண்ணா. நான் அந்தப் பக்கம் சென்று, கயிற்றின் இன்னொரு முனையைப் பிடித்துக்கொள்கிறேன். இழு என்று சொன்னதும் போட்டி தொடங்கும்" என்று சொல்லிவிட்டு, யானையின் கண்ணுக்குத் தெரியாமல் ஒரு புதரில் மறைந்துகொண்டது.

திமிங்கலத்துக்கும் யானைக்கும் கேட்பதுபோல் சத்தமாக, "இழுக்கலாம்" என்று கத்தியது. உடனே அடுத்த முனையில் முயல் குட்டி இருப்பதாக நினைத்து இரண்டு விலங்குகளும் கயிறை வேகமாக இழுத்தன. இரண்டுக்கும் ஆச்சரியம் தாங்க முடியவில்லை. முயலுக்கா இத்தனை வலிமை இருக்கிறது என்று நம்ப முடியாமல் கயிறை வேகமாக இழுத்தன.

கொஞ்சம் விட்டால் திமிங்கலம் தண்ணீரைவிட்டு வெளியே வந்துவிடும் போல இருந்தது. யானைக்கும் அப்படித்தான். தும்பிக்கையே உடைந்துவிடும் போல வலித்தது. இருந்தாலும் இரண்டும் தங்கள் முழு சக்தியையும் பயன்படுத்தி இழுத்தன.

பட்டென இரண்டாக அறுந்தது கயிறு. அந்த வேகத்தில் அருகில் இருந்த மரத்தில் மோதி மண்டை வீங்கியது யானைக்கு. திமிங்கலம் கடலில் இருந்த பவளப்பாறையில் மோதி சிராய்த்துக்கொண்டது. முயலின் திட்டம் புரியாமல், உருவத்தை வைத்து திறமையை எடைபோட்டுவிட்டோமே என்று நொந்தபடி யானையும் திமிங்கலமும் அதனதன் வேலையைப் பார்க்கக் கிளம்பின.

அன்று முதல் முயல் குட்டியை எங்கே பார்த்தாலும் புன்னகைத்தபடியே வணக்கம் சொன்னது யானை. திமிங்கலமும் முயல் குட்டியிடம் மரியாதை

# வர்ணம் தீட்டுவோம்



# பொம்மை பார்



பொம்மை பொம்மை பொம்மை பார்
புதிய புதிய பொம்மை பார்

தலையை ஆட்டும் பொம்மை பார்
தாளம் போடும் பொம்மை பார்

கையை வீசும் பொம்மை பார்
கண்ணை சிமிட்டும் பொம்மை பார்

எனக்குக் கிடைத்த பொம்மை போல்
எதுவும் இல்லை உலகிலே.

# வயோதிபப் பெண் விபத்தில் இறப்பு

யாழ்ப்பாணம், ஒக். 24

சிறுப்பிட்டி மேற்கு நீர்வேலியைச் சேர்ந்த கதிரவேலு இராசமணி என்ற வயோதிபப் பெண் உந்துருளி விபத்தில் சிக்கி நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்தார். அவருக்கு வயது 75.

கடந்த 21ஆம் திகதி மாலை அருகிலுள்ள காணியொன்றைப் பார்வையிடச் சென்றபோது உந்துருளியில் இருந்து சென்றபோது கீழே விழுந்து அவர் விபத்துக்கு உள்ளானார் என்று தெரிவிக்கப்படுகின்றது. படுகாயமடைந்து தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் அன்றையதினமே யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். சிகிச்சை பயனளிக்காத நிலையில் மறுநாள் மாலை (நேற்று முன்தினம்) உயிரிழந்தார்.

இவருடைய இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாண மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-26)

*2020ஆம் ஆண்டுக்கான*

# முதல் நான்கு மாத பட்ஜட் நிறைவேற்றம்

கொழும்பு, ஒக். 24

2020ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 4 மாத காலங்களுக்கான அரச செலவீனங்கள் நாடாளுமன்றில் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு ஜனவரி முதல் ஏப்ரல் வரை மாகாண செலவினங்களுக்கு நிதியளிக்க 1,474 பில்லியனைப் பெற நாடாளுமன்ற ஒப்புதலை நிதியமைச்சு கோரியிருந்தது. வாக்கெடுப்பு இடம்பெறவில்லை யாயினும், ஜேவிபி தனது எதிர்ப்பை பதிவு செய்தது. (ம)

## விடுகதைகள்

1. முத்து வீட்டுக்குள்ளே தட்டுப் பலகை. அது என்ன?
2. மண்ணுக்குள் கிடப்பவன். மங்களகரமானவன். அவன் யார்?
3. தலையைச் சீவினால் தாகம் தீர்ப்பான். அவன் யார்?
4. அழுவேன். சிரிப்பேன்; அனைத்தும் செய்வேன்; நான் யார் ?
5. ஊரெல்லாம் ஒரே விளக்கு. அதற்கு ஒரு நாள் ஓய்வு. அது என்ன?
6. நாலு காலுண்டு. வீச வாலில்லை. அது என்ன?
7. கடல் நீரில் வளர்ந்து, மழை நீரில் மடிவது என்ன?
8. கறுப்புச் சட்டைக்காரன் சட்டையைக் கழற்றினால் வெள்ளைக்காரன். அவன் யார்?
9. இந்த மானால் நடக்க முடியாது. எந்த மான்?
10. ஊர் முழுக்க ஒரே பந்தல். அது என்ன?

## விடைகள்

1.நாக்கு
2. மஞ்சள்
3. இளநீர் / நொங்கு
4. முகம்பார்க்கும் கண்ணாடி
5. நிலா
6. நாற்காலி
7. உப்பு
8. உளுந்து
9. அந்தமான்
10. வானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராசி அதிர்ஷ்டம்
திகதி 23.10.2019 | வெற்றி வாரம் 2656 | வர்ணம் பச்சை
மேடம்
வெற்றி இலக்கங்கள் 04 05 21 53
வியாழக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3,005, 274/=
24.10.2019ம் திகதி வியாழக் கிழமை கபிலம் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

கோடிபதி கப்ருக
N 12 23 29 30
வாசி தகஸ 1 0 0 6 9
சீட்டிழுப்பு வாரம்: 511 | திகதி: 2019 ஒக். 22
வர்ணம்: இளஞ்சிவப்பு | செவ்வாய்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 144,729,208/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

සංවර්ධන වාසනාව
அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் ▶ 290
சீட்டிழுப்பு திகதி ▶ 23.10.2019 நீலம்
ஆங்கில எழுத்து E | வெற்றி இலக்கங்கள் 57 65 70 | விதி எண் 05
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 45, 814, 980/=
25.10.2019ம் திகதி வியாழக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.த சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk

அத கோடிபதி
අද කෝටිපති ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 770
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2019.10.23
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 57,242,740/-
வெற்றி இலக்கங்கள் 01 02 10 75 Y
விசேட வெற்றி இல. 4797

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3252 | திகதி: 2019.10.23 | புதன்கிழமை | ஊதா
SATURDAY FORTUNE
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து 02 10 29 75 Q | போனஸ் இலக்கம் 69 | அடுத்த சனிக்கிழமைக்கான ஜக்பொட் 66,324,515/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

JAFFNA COLLEGE
Cordially invite you to its
PRIMARY SCHOOL PRIZE GIVING
On Friday 25 th October, 2019
at 3.00 pm
in the Ottley Hall
Chief Guest
Dr (Miss).C.V.Selliah
Principal Emeritus Uduvil Girls' College
Vaddukoddai. Principal

துயர் பகிர்கின்றோம்



இந்து அமைப்புக்களின் ஒன்றியத்தின் கௌரவ பொருளாளராகப் பணியாற்றிய
க.ம.இராஜேந்திரன்
ச.நீ (ஓய்வுநிலை அரச கணக்காளர்)
அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தவரின் துயரில் நாமும் பங்குகொண்டு அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
ஒன்றியத்தின் கௌரவ தலைவரும்
நிர்வாகசபை உறுப்பினர்களும், நல்லை ஆதீனம்.
(CS 28888) (11.17)

## வாசிப்பை...

தலைமையில் காலை 8.30 மணிக்கு பேரணி இடம்பெறவுள்ளது.

மிருசுவில் பொது நூலகத்தில் இருந்து மிருசுவில் றோ.க.த.க பாடசாலை வரை பேரணி இடம் பெற்று, தொடர்ச்சியாக பாடசாலையில் வாசிப்பு பழக்கத்தை ஊக்குவித்தல் தொடர்பான கருத்தரங்கும் புத்தக கண்காட்சியும் இடம்பெறவுள்ளது. (ம-9,159)

## அரசியல்...

மக்கள் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் பிரதி அமைச்சருமான பிரபா கணேசன் சந்தித்ததாகவும், இதன்போது பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் அவரது ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாம் வெறுமனே அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவுக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை. மாறாக எமது 20 அம்சக் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டதாலேயே ஆதரிக்கின்றோம். கிராமங்களில் உள்ளக பாதைகள் செப்பனிடப்படல் வேண்டும், வீடமைப்பு அமைச்சின் ஊடாக வழங்கப்படும் 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபா கடன் தொகை, 15 லட்சமாக உயர்த்தப்பட வேண்டும். முழுமையாக கட்டப்படாத வீடுகளுக்கும் கட்டி முடிப்பதற்கான நிதி உதவி வழங்கப்படுதல்.

கொழும்பு அரசால் கிடைக்கப் பெறும் வேலைவாய்ப்புகள் வடமாகாணம் என்றில்லாமல் விகிதாசார அடிப்படையில் யாழ் மாவட்டம், வன்னி மாவட்டம் என்று பிரித்து வழங்கப்படல், மறுவாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளின் வாழ்வாதாரத்துக்கு வேண்டிய உதவிகளும், சுய தொழில் செய்வதற்கான அரச வங்கிக் கடன் வசதிகள் வழங்கப்படுதல், அரசியல் சிறைக் கைதிகளின் விடுதலையை உடனடியாக துரிதப்படுத்துதல், காணாமல் போனவர்களின் விடயத்தில் மனிதாபிமான முறையில் தீர்வு காணப்படல் அவசியம்.

இராணுவத்தினரால் சுவீகரிக்கப்பட்ட தனியார் காணிகள் உடனடியாக விடுவித்தல் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படல், குறிப்பாக கேப்பாப்பிலவு சம்பந்தமாக கவனம் செலுத்தப்படல், போர் காரணமாக கணவனை இழந்த பெண் தலைமைத்துவம் கொண்ட குடும்பங்களுக்கு மாதாந்தம் உதவிகள் வழங்கல், போரினால் பாதிக்கப்பட்டசிறப்புத் தேவையுடையோர்க்கு வாழ்நாள் முழுவதுமான வாழ்வாதார உதவிகள், வீடுகளை கட்டுவதற்காக நுண்கடன் பிரச்சினைகளில் சிக்கி தவிக்கும் தாய்மார்களை இப்பிரச்சினையிலிருந்து விடுவித்தல், கிராமத்துக்குள் இருக்கும் முன்பள்ளி பாடசாலைகள் அபிவிருத்தி செய்தல், பாடசாலைகளில் உள்ள ஆசிரியர் பற்றாக் குறைகளை தீர்ப்பதோடு தகுந்த பாடத்திற்குரிய ஆசிரியர்கள் நியமித்தல், கிராமங்களுக்கு அருகாமையில் வசிக்கும் ஆசிரியர்களுக்கு கிராம மட்டத்திலான நியமனங்கள் வழங்கப்படல் மற்றும் சிற்றூழியர்கள் நியமனமும் வழங்கப்பட வேண்டும், நகர்ப்புறத்திலிருந்து அனைத்து கிராமங்களையும் தொடர்பு படுத்தக்கூடிய வகையில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து வசதிகள் ஏற்படுத்தி கொடுக்கப்பட வேண்டும், குடிநீர் பிரச்சினையால் அல்லலுறும் கிராம மக்களுக்கு நிரந்தர குடிநீர் பிரச்சினையை தீர்ப்பதற்கான வேலைத்திட்டத்தை முன்னெடுத்தல், குடிநீர் பிரச்சினை காரணமாக வன்னி மாவட்டத்தல் சிறுநீரக நேயால் பாதிக்கப்படுபவர்களுக்கு சிறப்பு மருத்துவ முகாம்கள் கிராம மட்டத்தில் அமைக்கப்பட வேண்டும், விவசாயிகளின் நீர்ப்பாசன பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் முகமாக சிதைவடைந்திருக்கும் குளங்கள் மீள் நிர்மாணம் செய்யப்பட வேண்டும். அதே நேரம் குளங்கள் அற்ற பகுதிகளுக்கு அரச நீர்ப்பாசன திட்டங்கள் ஏற்படுத்துதல், விவசாயிகளின் உற்பத்திகளை இலகுவாக சந்தைப்படுத்துவதற்காக விற்பனை கேந்திர நிலையங் களை அண்மித்த நகரங்களில் உருவாக்குதல், முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் கடற்தொழில் செய்யும் மீனவர்களின் பல பிரச்சினைளுக்கு சிறப்பு மீனவ திட்டங்கள் முன்னெடுக்கப் படல், இப்பகுதிகளின் கடல் அரிப்பை தடுப்பதற்காக வேலைத்திட்டங்கள் முன்னெடுத்தல், மாற்று மதத்தவர்களின் வழிபாட்டுத்தலங்களை வடமாகாணத்தில் பலவந்தமாக ஏற்படுத்துவதை தடை செய்வதற்கான சட்ட திட்டங்களை முன்னெடுத்தல், அமைச்சு பதவிகளை வைத்து கொண்டு கடந்த காலங்களில் திட்டமிட்ட முறையில் குடிய மர்த்தப்பட்ட முஸ்லிம் குடியேற்றங்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுத்தல் என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

இவ்வாறான கோரிக்கைக்கு முழுமையான முறையிலே ஏற்றுக்கொள்ளவதாக தெரிவித்திருந்தார். இருப்பினும் கேப்பாப்பிளவு காணி விடுவிப்பு சம்பந்தமாக தான் ஆராய்ந்து செயல்பட விருப்பதாகவும் தெரிவித்திருந்தார். இதன் அடிப்படையில் வன்னி மாவட்ட தமிழ் மக்கள் முழுமையான முறையில் கோத்தாபய ராஜபக்சவுக்கு ஆதரவு தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

எவ்வித நிபந்தனைகளுக்கும் அடிப்பணிய மாட்டேன் என்று தெரிவிக்கும் வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு வன்னி மாவட்ட தமிழ் மக்கள் ஆதரவு தெரிவிப்பதனால் எவ்வித பிரயோசனமும் இல்லை. அதே நேரம் மலையக தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விவகாரத்தில் அவர்கள் எவ்வளவு தினசரி ஊதியம் பெற்றுக் கொள்கின்றார்கள் என்று கூட தெரியாத சஜித் பிரேமதாசவால் ஆயிரத்து 500 ரூபா தினசரி ஊதியம் வழங்கப்படும் என்ற வாக்குறுதி வேடிக்கையாகவே இருக்கின்றது. சுமார் 700 ரூபா தினசரி பெற்றுக் கொள்ளும் தோட்டத் தொழிலாளர்களுக்கு வெறும் 50 ரூபாவை கூட வழங்க முடியாத ஐக்கிய தேசிய முன்னணி அரசு எவ்வாறு மேலதிகமாக தினசரி 800 ரூபாவை வழங்கப் போகின்றார் என்பதை அவர் தெளிவுபடுத்த வேண்டும். கடந்த நாடாளுமன்ற தேர்தலின் போது ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலவாக்கலை கூட்டத்தில் ஆயிரம் ரூபா வழங்குவேன் என்று உறுதியளித்ததை மக்கள் மறக்கவில்லை.

ஆனால் கடந்த நான்கு வருட காலத்தில் இதனை இந்த அரசு நிறைவேற்றாத நிலையில் இப்பொழுது சஜித் பிரேமதாச ஆயிரத்து 500 ரூபா கொடுக்கப்படும் என்பதை எவ்வாறு நம்புவார்கள்.

எமது வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச தோட்டத்தொழிலாளர்களின் தினசரி சம்பளத்தை ஆயிரம் ரூபாவாக அதிகரிப்பேன் என்று கூறியதுதான் யதார்த்தத்திற்குரியதாகும். எது எப்படியிருப்பினும் வாக்குறுதிகள் தவறப்படுமேயாயின் இன்றைய அரசில் ஒட்டிக் கொண்டிருக்கும் அமைச்சர்களைப் போலன்றி நாம் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம் என்பதனையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின் றேன். எழுத்து மூலமான ஒப்பந்தங்கள் கடந்த காலத்தில் பண்டா செல்வா ஒப்பந்தம், டட்லி செல்வா ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட் டன. இன்றைய வாக்குறுதிகள் நிச்சயம் நிறை வேற்றப்படும் என்ற நம்பிக்கை உள்ளது. நாட்டின் சுபீட்ச த்திற்கமைய, அபிவிருத்திக்கும், உரிமைக்கும் அமைய தமிழ் மக்களின் வாக்குகள் கோத்தாவுக்கு கிடைக்க வேண்டும். அதுவே எமது நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் - என்றுள்ளது. (ஒ.5)

வீடு வாடகைக்கு
யா/கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு அண்மையில் அமைந்துள்ள வீடு வாடகைக்குண்டு.
077 744 3682

மணமகள் தேவை
யாழ்.இந்து கௌரவ 40 வயது சொந்தமாக தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.
சீதனம் எதிர்பார்ப்பில்லை.
077 905 8615 (வைபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



### கந்தையா கிருஸ்ணபிள்ளை

கடந்த 16.10.2019 அன்று இறைபதம் அடைந்த எமது திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் **திரு. க.கவிரதரன்** கரவெட்டி பிரதேச செயலகம். அவர்களின் அன்புத் தந்தையாரின் ஆத்மா சாந்தி அடைவதற்காக இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவர்தம் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஆணையாளரும், உத்தியோகத்தர்களும், உத்தியோகத்தர் நலன்புரிசங்கம், மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம், வடமாகாணம்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 21 - 01 - 1957



உதிர்வு 03 - 11 - 2018

### அமரர் இராசரட்ணம் நவரட்ணராஜா

(ஓய்வுபெற்ற தபால் திணைக்கள உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்)

அல்லும் பகலும் எமக்காக வாழ்ந்த
தெய்வமே எந்தநேரமும் மதுக்குட்டி
என்று அழைப்பீங்களே அப்பா
எங்களை விட்டு எங்கே போனீர்கள்?
உயிர் உள்ளவரை உங்களை
மறக்க முடியாது அப்பா

(CS 28880)

உங்கள் பிரிவால் துயருறும்
**அன்பு மனைவி, மகன் (மதுசயன்)**

## கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்

### பொன்னர் இராசநாயகம்



மண்டைதீவு, 4 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பொன்னர் இராச நாயகம் நேற்று (23.10.2019) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னர் - மாரிமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஆனந்தராசா, அற்புதராசா, மற்றும் செல்வநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் பாசமிகு சிறியமக்கள், மருமக்கள் , பேரமக்களும் ஆவார்.

அன்னாரின் இறுதிஆராதனை இன்று (24.10.2019) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு மண்டைதீவு இல்லத்தில் இடம்பெற்று யாழ்ப்பாணம் கொட்டடி சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**4 ஆம் வட்டாரம், மண்டைதீவு கிழக்கு.**

**தகவல்: குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்



### பாலசிங்கம் நடேசகுமார் (குமார்)

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் நடேசகுமார் (குமார்) நேற்று (23.10.2019) புதன்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் புனிதராணி, தம்பதிகளின் அன்பு மகனும் கணேசன் செல்வமலர் தம்பதிகளின் அன்பு மருமகனும் அனுசியாவின் அன்புக்கணவரும் நிவேதிகா, சங்கவிதன் (யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி) , பிரியங்கன் (யா/ யாழ்.இந்துக் கல்லூரி) ஆகியோரின் தந்தையும் சிறிகுமார், சங்கீதா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் நிதர்சன் (இத்தாலி) அவர்களின் மாமனாரும், வரதன் (சுவிஸ்), வனஜா (இத்தாலி), துஷ்யந்தன் (கனடா) அருந்ததி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.10.2019) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 1.00 மணியளவில் குச்சப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 083 8287**

**தகவல் : குடும்பத்தினர்**

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

யாழ். வலி வடக்கு பிரதேசசபைக்கு உட்பட்ட மல்லாகம் பங்களா ஒழுங்கையில் வீட்டுடன் சேர்ந்த காணி விற்பனைக்கு உண்டு. மொத்தம் 9 பரப்புக்காணி வீட்டுடன் உடனடி விற்பனைக்கு **Hotel/ office/ Building Construction** இற்கு உகந்தது. தரகர் தேவையில்லை.

தொடர்புகளுக்கு
**கொழும்பு - 077 230 6642 , மல்லாகம் - 076 495 6480**
நேரடியாகவந்து பார்வையிடலாம்.

உ
சிவமயம்

தச்சன்தோப்பு

## சிந்தாமணிப் பிள்ளையார் ஆலயம்

**கரவெட்டி**

### கந்தபுராண படன பூர்த்தி


கந்தபுராண படன பூர்த்தியும் உற்சவமும் **நாளை (25.10.2019) வெள்ளிக்கிழமை** இடம்பெற திருவருள் பாலித்துள்ளது. **அன்று காலை 6.30 மணிக்கு** காலைப் பூசையைத் தொடர்ந்து **வள்ளியம்மை திருமணப் படல படனம்** ஆரம்பமாகி மாலையில் நிறைவுபெறும். தொடர்ந்து **பூர்த்தி உற்சவமும்** நிகழும். அடியார்கள் கலந்துகொண்டு திருவருள் பெற்றுய்யும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

(00996)

**ஆலய நிர்வாக சபை.**

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 09 - 09 - 1925



மறைவு 19 - 10 - 2014

### அமரர் சுப்பையா திருநாவுக்கரசு

(ஓய்வுபெற்ற இ.போ.ச.சாரதி)

**திதி: ஏகாதசி**

தந்தையே இப்பூவுலகிலிருந்து விண்ணுலகம் சென்று
ஐந்து ஆண்டுகள் ஆனதுவோ!
உயிருக்கு உயிராக இருந்து எமைக்காத்த அப்பா!
காலமெல்லாம் நீங்காது உங்கள் நினைவுகள்
வெல்வில் முருகன் பாதமதில் இருத்தி வணங்குகின்றோம்.
ஓம் சாந்தி

**"மூர்த்தி வாசம்"**
முருகமூர்த்தி வீதி,
சங்கானை.
(cs.28851) (13,17)

என்றும் உங்கள் நினைவில்
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டி.**

## மரண அறிவித்தல்



### அருட்சகோதரி மரிய கிளாறா மிராண்டா தி.கு

வங்காலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி மரிய கிளாறா மிராண்டா தி.கு

(22.10.2019) செவ்வாய்கிழமை இறைபதம் இணைந்துவிட்டார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி (24.10.2019) வியாழக்கிழமை மு.ப.10 மணிக்கு இளவாலை கன்னியர் மடத்தில் ஒப்புக்கொடுக்கப் பட்ட பின்னர், இளவாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
**அருட்சகோதரி தியோவ்வின் குரூஸ்**
**மாகாணத் தலைவி.**
**121.பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**

## வீடு வாடகைக்கு

ஈச்சமோட்டை சுண்டுக்குளியில் 3அறைகள், 1குளியலறை, 1ஹோல், 1களஞ்சியஅறை கொண்டமைந்த சகல வசதிகளையும் கொண்ட வீடு வாடகைக்கு விடப்படும்.

(CS 28881)(14,17)

**077 462 9433**

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ் பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் பழம் வீதியில் 3 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை.

(CS 28879)(14,17)

**072 692 1877**

## தவறிவிட்டது

EPCAM-7336 இலக்கமுடைய வாகன பதிவு பத்திரம், Tax,Insurance ஆகியவற்றை கொண்ட கோவை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும்.

**077 009 1323, 077 966 9439**

## பெயர் மாற்றம்

டச்சு வீதி, மானிப்பாயை சேர்ந்த திருநாவுக்கரசு றஜினு ஆகிய நான். (பிறப்பு அத்தாட்சி பத்திர இல.3824) இனிவரும் காலங்களில் றஜீனா என எனது பெயரை மாற்றி உள்ளேன் என்பதனை சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

**றஜீனா**

## தவறிவிட்டது

சிவன் வீதி, ஆவரங்கால், புத்தூரினைச் சேர்ந்த லாவண்ய தங்கராச என்பவரின் NO. 898450392V NIC யாழ்ப்பாணத்திற்கும் கொக்குவிலுக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் 0779229188 இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

## வீடு வாடகைக்கு

யாழ். நகர்ப்பகுதி பிரதான வீதியில் எதிர்வரும் தைமாதம் தொடக்கம் புதிய மாடி வீட்டில் சகல வசதிகளும் கொண்ட வாகன தரிப்பிடம் உட்பட கீழ்பகுதி வாடகைக்கு உண்டு. அரச உத்தியோகத்தர் விரும்பத்தக்கது.

**077 131 4054**

## வேலையாட்கள் தேவை

திருநெல்வேலியில் அமைந்துள்ள எலக்ரிக்கல் கடைக்கு வேலையாட்கள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் நேரில் வரவும்.

**நியூரோன் எலக்ரிக்கல்**
**இல.169, சேர்.பொன் இராமநாதன் வீதி, திருநெல்வேலி.**

## இலவச ஆங்கில, கணினி வகுப்புக்கள் - பிரிவு 22

- **Diploma in English**
- **Diploma in Spoken English**
- **Diploma in Ms-Office**

காலம் : 3 மாதங்கள்
அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்
O/L,A/L உத்தியோகத்தர்களுக்கானது

### புதிய பிரிவு 1

**Diploma in Teaching English**

- O/L தகைமை
- ஆங்கில ஆசிரியர்களுக்கான
- ஆர்வமுடையோர்
- 6 மாத ஆங்கில பயிற்சி சம்பளத்துடன்


**அனைத்து பிரிவுகளும்**
**ஆரம்பம் 26,27/10/2019 10 am**

**IPS** to your future

யாழ் பல்கலைக்கழகத்திற்கு அண்மையில்
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
021 434 0229
077 602 1794

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
24 . 08 . 1957

இறைவன் அடியில்
20 . 10 . 2014

## அமரர் கந்தையா இராஜேந்திரம் (சந்திரன்)

சிராத்த திதி – 24.10.2019


எங்கள் வாழ்விற்கும் வளர்ச்சிக்கும் நல்வழிகாட்டி
நானிலம் போற்ற வைத்த எங்கள் அன்புத் தெய்வமே
நீங்கள் இறைபதமடைந்து ஐந்தாண்டுகள் ஓடி மறைந்தனவே
ஆறவில்லை எம்துயரம் காயவில்லை கண்களில் ஈரம் !
நீங்கள் இல்லா இவ்வுலக வாழ்வை நினைக்கும் போதெல்லாம்
வெம்பி மனம் வெடிக்குதையா வேதனையில் !
நித்தம் உங்களை நினைத்தே நிம்மதி இழந்து தவிக்கின்றோம்
மண்ணிலிருந்து நீங்கள் மறைந்தாலும் எங்கள் மனதிலிருந்து என்றும் மறையமாட்டீர்கள்
உங்கள் மகத்துவத்தை அனுபவித்து உணர்ந்தவர்கள் நாங்கள்
அதனால் தானோ நித்தம் எம் உள்ளத்தின் உள்ளே வாழும்
ஓர் உன்னத தெய்வமாகி விட்டீர்கள்
ஆண்டுகள் எத்தனை ஆனாலும் எங்கள் உயிருள்ளவரை
நித்தம் நினைத்திருப்போம் உங்கள் நினைவுகளை
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கனடா,
வரணி

(IN 11516) (14,17)

குடும்பத்தினர்.
416 292 8592

# மரண அறிவித்தல்கள்



பிறப்பு
05 . 05 . 1934

இறப்பு
22 . 10 . 2019

## செல்லையா சிவசுப்பிரமணியம்

யாழ். வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்லையா சிவசுப்பிரமணியம் நேற்றுமுன்னதினம் (22.10.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், வேலுப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கமலாதேவி அவர்களின் அன்புக் கணவரும், ஜெகதீசன் (பரிஸ்), ஜெகரூபன் (லண்டன்), ஜெகதாசன் (பரிஸ்),ஜெகபவானி (சுவிஸ்), ஜெகசீலன் (சுவிஸ்), ஜெககௌரி (கனடா), சர்மிலா (வல்வெட்டி), ஜெகதாஸ் (வல்வெட்டி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், செல்வநந்தினி (பரிஸ்), சாந்தினி (லண்டன்), சுகந்தினி (பரிஸ்), மணிவண்ணன் (சுவிஸ்), பத்மரஜனி (சுவிஸ்), பாலேந்திரன் (கனடா), சுதாகர் (வல்வெட்டி), கவிதா (வல்வெட்டி) ஆகியோரின் அன்பு .மாமனும், காலஞ்சென்ற பறுவதம் (வல்வெட்டி), கந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரரும், அஸ்வினி, மிலானி, திவ்வியா, ரூசாந், தமிழ்ச்செல்வன், தனுசன். துவாரகா.நிசாந், ஆகாஷ், அனுஷ்கா, நிதர்சன், விதுஷன், சயிதன். பர்மிசன், காரூண்ஜன், கபீசன். மயூசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.10.2019) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக வல்வை ஊறணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


இந்து பாடசாலை வீதி,
வல்வெட்டித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.

077 218 3674

(cs.28890) (13.17)

# மரண அறிவித்தல்



## கதிரிப்பிள்ளை இரத்தினம்

மயிலிட்டி வடக்கு கொழுவியன் கலட்டியைப் பிறப்பிடமாகவும் ஊரெழு மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரிப்பிள்ளை இரத்தினம் கடந்த 20.10.2019 காலமானார்.


அன்னார் கதிரிப்பிள்ளை மீனாட்சி தம்பதிகளின் அன்பு மகனும் சின்னத்தம்பி பிள்ளையர் தம்பதிகளின் அன்பு மருமகனும் சரஸ்வதியின் பாசமிகு கணவரும் சந்திரலேகா (ராதிகா). சிறீகாந் (சிறீ).சந்திரிக்கா (ரேணுகா-பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அருணகிரிநாதர். சுபாஜினி. செந்தூரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கதிர் வேந்தன். பவித்திரா. கனிஸ்ரன். மிருஷ். திவ்யபைரவி. அக்ஷயா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.10.2019) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஊரெழுமேற்கு, ஊரெழு.

தகவல்:
குடும்பத்தினர்.



## செல்லப்பா செல்வராஜா (JP)

(ஓய்வு பெற்ற மக்கள் வங்கி உத்தியோகத்தர்)

யாழ் அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட S.C செல்வராஜா 23.10.2019 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - பூரணம் தம்பதிகளின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான நமசிவாயம் - லீலாவதி தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற வசந்தகுமாரியின் ஆருயிர்க்கணவரும் பாதுஷா. சஞ்சீவன் (RDA. யாழ்ப்பாணம்). சங்கீரணி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஸ்ரீகரன் (Metropolitan Office (Pvt) ltd). கிருஷ்ணஜெயந்தினி (மாவட்ட நீதிமன்றம். மல்லாகம்). அரவிந்தன் (சரவணன் Hardware) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் கமலாதேவி. தியாகராசா (ஓய்வு பெற்ற மின்சாரசபை உத்தியோகத்தர்). சோதிராசா (பிரான்ஸ்). சத்தியசீலன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற துரைரட்ணம். பிரணவநாதன். இலங்கேஸ்வரி மற்றும் அன்னலட்சுமி (கமலேஸ்). செல்வராஜா (லண்டன்). தேம்பாமலர். பாசுபதன் (பத்மா). வனஜா. உருத்திரேஸ்வரன் (லண்டன்). சந்திரபவானி (சாந்தி). சுகுணவதி ஆகியோரின் மைத்துனரும் ஜகிர்த்தன். அவந்திக்கா. டிலக்ஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.10.2019) வியாழக்கிழமை காலை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

[illegible] நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(CS 28894) (14,17)

தகவல் :
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HAPPY DEEPAVALI OFFER



BIGGEST DIWALI SALE

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தீபாவளிநல்வாழ்த்துக்கள்.

Sugar 88/=

Red Naadu 88/=

Samba 85/=

Reddhall 115/=

V.Oil 1L 355/=

Annai Naga Food City

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு நூற்றுக்கு மேற்பட்ட அத்தியாவசிய பொருட்களுக்கு

விலைக்கழிவு

Bill above 2500/=

MAX 2kg

Valid 26.10.2019



யாழில் ஆங்கிலக்கல்விக்கு No.1 பயிற்சி மையம்



A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு

DIPLOMA IN ENGLISH
SPOKEN ENGLISH

Reading Writing Listening Speaking

Foundation ENGLISH | Diploma in Fluent English Part-I | Diploma in Fluent English Part-II

புதிய பிரிவுகள் ஆரம்பம் — உங்கள் முழுமையான ஆங்கிலப்புலமைக்கு

யாழ்ப்பாணம்: Mon,Wed,Fri- 8:30 a.m. / Mon,Wed,Fri- 3:00 p.m. / Sat,Sun - 2:00 p.m.
நெல்லியடி: Tue,Thu - 3:30 p.m. / Sat,Sun - 2:30 p.m.
சுன்னாகம்: Mon,Wed,Fri- 11:30 a.m. / Sat,Sun - 11:30 a.m.
கிளிநொச்சி: Sat,Sun - 8:00 a.m.
சாவகச்சேரி: Tue,Thu - 7:30 a.m.
சண்டிலிப்பாய்: Mon,Wed,Fri- 2 p.m.

DMI , British Council இன் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்

IELTS
# Unique Test Tips
# 40 hrs with free 4mock exam
# Latest course Material ( Book 12)

IELTS Life Skills
திருமணம் செய்து UK செல்வோருக்கானது

DMI COMPUTER EDUCATION

யாழ்ப்பாணம் No.113, கன்னாதிட்டி வீதி (சயன்ஸ்ஹோல் அருகாமை) 021 222 4403

M.M.V. வீதி, நெல்லியடி 021 226 2470
கண்டி வீதி, (HNB வங்கி அருகாமை) சாவகச்சேரி 021 227 0775
No.130, கே.கே.எஸ் வீதி, (NSB வங்கி அருகாமை) சுன்னாகம் 021 224 1970
சீரணிச்சந்தி சண்டிலிப்பாய் 021 225 6665
A9 வீதி, ஆனந்தபுரம் (மத்திய கல்லூரி முன்பாக) கிளிநொச்சி 021 228 5655


## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 14 - 05 - 1944 | 22 - 10 - 2019 |

### திருமதி இராசமணி கதிரவேலு

சிறுப்பிட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும், ஈவினையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசமணி கதிரவேலு 22.10.2019 அன்று இறைவனடி எய்தியுள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை சவுந்தரம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கதிரவேலுவின் அன்பு மனைவியும் விமலாதேவி, சத்தியபாலா, மல்லிகாதேவி, சகுந்தலாதேவி, சத்தியதாஸ், சத்தியசீலன், சத்தியரூபன், கமலாதேவி, சதீஸ்கரன் ஆகியோரின் அன்புத் தாயும், இலங்கைநாதன் (அமரர்), மகேஸ்வரி, சிவானந்தன், சுதாகரன், சுதாயினி, தயாளினி, யசிந்தா, கோகிலறமணன் ஆகியோரின் அன்பு மாமியும் சுகுணன், மஜீவன், மதீசன், விஜோஜிகா, டிலக்சனா, சுகிர்தன், சாங்கவி, கிருண்சிகா, தர்சன், வினுஷன், ரஜிவர்மன், விஸ்ணுகாந், சிவப்பிரியன், டினிஸ்காந், பிரவின்யா, யதுசன், லதுசன், திவிராஜ்; றஸ்மிகா, பானுஜன், தஸ்மிகன், லதுசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் மதுஷிகனின் அன்புப் பூட்டியும் குணமணி, குணேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராஜலிங்கம், இரட்ணலிங்கம், மகாலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.10.2019) வியாழக்கிழமை ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஈவினை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

புன்னாலைக்கட்டுவன் வடக்கு, ஈவினை. (CS 28897) 0777663262

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை பொன்னையா (செட்டியார்)

(ஓய்வுநிலை முகாமையாளர் - புலோலி ப.நோ.கூ. சங்கக்கிளை, முன்னாள் கிராமசபை உறுப்பினர், குரும்பைகட்டி சனசமூக நிலையத்தின் ஸ்தாபகரும் போஷகரும்)



தோற்றம் 24.10.1920 — மறைவு 21.10.2019

குரும்பைகட்டி, புலோலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பொன்னையா (செட்டியார்) கடந்த (21.10.2019) திங்கட்கிழமை தனது தொண்ணூற்றொன்பதாவது வயதில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சரவணமுத்து இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பறுபதத்தின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான பசுபதி, வைத்திலிங்கம், செல்லம்மா, கிருஷ்ணபிள்ளை , முருகுப்பிள்ளை, சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் செல்வவிநாயகம் (ஓய்வுநிலைமுகாமையாளர்- ப.நோ.கூ.ச கிளை, புலோலி), காலஞ்சென்ற கணேசலிங்கம், ஓய்வுநிலை முகாமையாளர்- மக்கள்வங்கி, பருத்தித்துறை), சறோஜினிதேவி, வரலட்சுமி (சுவிஸ்), பரமேஸ்வரி (சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், பி/உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்), கணேஸ்வரி, வரதராஜா (U.K) ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்ற வசந்திரா, சற்குணதேவி (ஓய்வுநிலை ஆசிரியை, வடஇந்துமகளிர் கல்லூரி, பருத்தித்துறை), தங்கவேல் (ஓய்வுநிலை முகாமையாளர், ப.நோ.கூ.சங்கக்கிளை, புலோலி), யோகராஜா (சுவிஸ்), யோகராஜா (ஓய்வூதியர்), பத்மநாதன் (மக்கள் வங்கி, பருத்தித்துறை), மன்மதி (U.K) ஆகியோரின் அன்பு மாமனாரும் யோகேஸ்வரன் (சுவிஸ்), ஜானகி (சுவிஸ்), கஜமுகன், கவிதா, கஜேந்திரன் (சுவிஸ்), பத்மஸ்ரீ, இளமாறன் (U.K), ஜனனிதா (U.K), பிரசன்னா (U.K), அபிராமி (U.K), Dr பிரதீபன் (யாழ்.போதனா வைத்தியசாலை), Dr.சங்கீதா (யாழ்.போதனா வைத்தியசாலை), திலீபன் (பொறியியலாளர், டயலொக் - கொழும்பு), யாழினி (ஆசிரியை, மு/வள்ளிபுனம் மகாவித்தியாலயம்), சஞ்சய்காந்தன் (U.K), லட்சுமிகாந்தன் (U.K), பத்மகாந்தன், வான்நிதி, விஜிதா, சுகந்தன் (U.K), ரஜீதா, சர்மிளா (ஆசிரியை, மாணிக்கவாசகர் மகாவித்தியாலயம், கரவெட்டி), மகிந்தபரன் (சுவிஸ்), கயல்விழி (சுவிஸ்), ஆதவன் (கொலன்ட்), ஜெயகௌரி (கொலன்ட்), ஆகாஷ் (சுவிஸ்), கோஜிதன்,துஜிகோஷன், கஜந்த், சுபஸ்திகா, மோகவர்மன் (U.K), தனவர்மன் (U.K) ஆகியோரின் அன்புப்பேரனும் ஜானுஜன் (சுவிஸ்), வாருஜன் (சுவிஸ்), தனுஷன், சதுர்ஷன், அனுஷா, அபிஷா, கஜானன், அபிநயா (U.K), சக்ஜனா, அபிசனா, சிரிசா (சுவிஸ்), நிவிதா (சுவிஸ்), ஆசிகா (கொலன்ட்), ரவின் (கொலன்ட்), அரண்யா, அக்ஷாயினி ஆகியோரின் அன்புப் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.10.2019) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கருகம்பன் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
021 226 3615, 077 445 1400

## மரண அறிவித்தல்

### திருமதி சிவமணி சிவபாதலிங்கம்



தோற்றம் 26.03.1950 — மறைவு 23.10.2019

யாழ். தண்ணீர்த்தாழ்வு, கட்டுவனைப் பிறப்பிடமாகவும், இருபாலை கிழக்கு, இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவமணி சிவபாதலிங்கம் 23.10.2019 புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - செல்லம்மா தம்பதிகளின் மகளும் காலஞ்சென்றவர்களான இராசையா - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் சிவபாதலிங்கத்தின் அன்பு மனைவியும் ஜனார்த்தனன் (BPP Engineering Pvt), தினேசன் (பிரான்ஸ்), சயந்தன் (Commercial Bank - Kodikamam), சபிந்தன் (ஆஸ்திரேலியா), ஜனனி ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவபாதசுந்தரம், சிவபாக்கியம், காலஞ்சென்ற பரமேஸ்வரி, சிவமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும் குந்தவி (D.S Office -Velanai), விநோதினி (Election Department - kilinochchi) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கபிலேஷ், ஜஸ்மிகன், சஸ்விகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.10.2019) வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை கிழக்கு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்.

(CS 28889)(14.17)

077 267 1833/ 077 844 8682

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விக்ரமுக்காகப் பாடல் எழுதிய சிவகார்த்திகேயன்

விக்ரமின் மகன் துருவ் விக்ரம் நடிகராக அறிமுகமாகும் படம் 'ஆதித்ய வர்மா'. தெலுங்கில் மிகப்பெரிய வெற்றி பெற்ற 'அர்ஜுன் ரெட்டி' திரைப்படத்தின் அதிகாரப்பூர்வ மறுதயாரிப்பாக இந்தப் படம் உருவாகியுள்ளது. இந்தப் படத்தின் இசை வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

இந்த விழாவில் பேசிய நடிகர் விக்ரம், நடிகர் சிவகார்த்திகேயன் குறித்து பேசுகையில், "நான் ஒரு தொலைபேசி அழைப்புதான் செய்தேன்.. "சிவா... எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும். சிவா, இந்தப் படத்துக்கு ஒரு பாடல் எழுதித் தர முடியுமா?" என்று கேட்டேன். அவர் உடனே எழுதித்தந்தார். மற்ற எல்லா பாடல்களிலும் ஓரிரு வரிகளை நாங்க மாற்றினோம். ஆனால், சிவ கார்த்திகேயன் எழுதிய பாட்டில் மட்டும் எதுவுமே மாற்றவில்லை" என்றார்.








பின்னணி பாடுபவர் : மகிந்த
வாய் அசைப்பவர் : கோத்தா





**முகமூடி™ @mugamoodi11**
அடிப்படைத் தேவைகள்
மூன்றிலிருந்து நான்காக
அதிகரித்துள்ளது..!!
உணவு, இடம், உடை ,செல்போன்

**ச ப் பா ணி@manipmp**
தீபாவளிக்கு முன் நகரில் நெருக்கடி
ஆகிறதும்...
தீபாவளி முடிந்து வீட்டில் பலகாரம்
மிச்சமாகிறது சகஜம் தானே...!

**புத்தன் @Buddhan_**
கடன் கேட்பதை விட,
கொடுத்த கடனைத் திரும்ப
கேட்பதற்கே அதிக தயக்கமாய்
இருக்கிறது!!!

**புத்தன் @Buddhan_**
மேடையில் பேசிய
பேச்செல்லாம் உனை அறுக்க
காத்திருக்கும்!

**mohanram.ko**
கடைசியில், எங்கே
போனாலும் எம்மோடு கூட
வருவது செல்போன்
என்றாகிப் போச்சு..



## வெற்றியின் ரகசியம்

- புத்தகத்தை துணை கொள்.
- உடலுழைப்பை அதிகரி.
- கொஞ்சமாய் சாப்பிடு.
- கேலிக்கு புன்னகை தா..
- கோபத்துக்கு மௌனத்தை கொடு.
- நட்புக்கு நட்பு செய்.
- இதமாகப் பேசு.
- அன்பு செய்தால் நன்றி சொல்.
- ஆத்திரம் அகற்று.
- எத்தனை வழித்தாலும் அழாதே... சரி.







என்ன இது... .இந்த சோப்பில்
நெய் வாசனை வருது...

ஐயோ...! இது சோப்பு இல்லை
நான் செஞ்ச மைசூர் பாகு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐக்கிய நாடுகள் தினம் இன்றாகும். அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.

லோஹறரன்

# ஐ.நாவின் உருவாக்கம்

இன்றைய கால கட்டத்தில் ஐக்கிய நாடுகள் சபையினது செயற்பாடு இன்றியமையாதது. ஐ.நாவின் தடைகளைத் தாண்டி வட கொரியா தொடர்ந்தும் தனது நிலைப்பாட்டை மாற்றாது அணு ஆயுதத்தையும் விட செறிவான ஐதரசன் குண்டை உற்பத்தி செய்துள்ளது. இதற்கு மேலதிகமாக ஐ.நா. அமைப்பு நிதிப் பற்றாக்குறையால் பெரும் இடர்களை எதிர்கொண்டுள்ளமையும் துரதிஷ்டமே. ஐ.நா. அமைப்புக்கு முன்னதாக பல பன்னாட்டு அமைப்புக்கள் உருவாகியிருந்தன. அவற்றுள் முக்கியமானது முதல் உலகப் போருக்குப் பின் 1919ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சங்கம் ஆகும். இந்த அமைப்பும் உலக சமாதானத்தைப் பேணுதல் என்ற நோக்கத்தைக் கொண்டிருந்தது. அதனால் தனது செயல்பாட்டை வெற்றிகரமாக கொண்டு செல்ல முடியவில்லை. இதில் அனைத்து நாடுகளும் அங்கம் வகிக்கவில்லை. இதில் ஏற்பட்ட தோல்வியே 2ஆம் உலகப் போருக்குக் காரணமாக அமைந்தது. 2ஆம் உலகப் போரில் ஏற்பட்ட அழிவு காரணமாக அந்தப் போரை நிறுத்தும் நோக்கத்துடன் சில உலகத் தலைவர்கள் ஒன்றுகூடி சமாதானத்தை நிலைநாட்டவும், எதிர்காலத்தில் இத்தகைய போர்கள் ஏற்படுவதைத் தடுக்க வேண்டும் என்ற நோக்கத்துடனும் உருவாக்கிய அமைப்பே ஐ.நா. சபையாகும்.

ஐக்கிய நாடுகள் தினம், வருடந்தோறும் ஒக்ரோபர் மாதம் 24ஆம் திகதி கடைபிடிக்கப்படுகிறது. ஐக்கிய நாடுகள் என்பதைத்தான் சுருக்கமாக ஐ.நா. என்கிறோம். 1945ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 24ஆம் திகதி ஐக்கிய நாடுகள் அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. 1948ஆம் ஆண்டு முதல் ஐ.நா. தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. ஐ.நாவின் நோக்கங்களையும், சாதனைகளையும் உலகெங்கும் எடுத்துக் கூறுவது இந்தத் தினத்தின் முக்கிய நோக்கமாகும். ஐ.நாவில் 193 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

ஐக்கிய நாடுகள் கழகம் என்ற பெயர் அமெரிக்க அரச தலைவரான ரூஸ்வெல்த் என்பவரால் தேர்ந்தெடுக்கப்பட்டு 1942ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ஆம் திகதி ஐக்கிய நாடுகள் கழக அறிவிப்பு முதன்முதலாக உபயோகத்துக்கு வந்தது. 2ஆம் உலகப்போரின்போது எதிரி நாடுகளுடன் போரைத் தொடர்ந்து நடத்துவதற்கு 22 நாடுகளின் பிரதிநிதிகள் ஒத்துழைப்பு அளிப்பதாக வாக்குறுதி தந்தார்கள். பிறகு 1945ஆம் ஆண்டு 50 நாடுகள் அடங்கிய மாநாடு சான்பிரான்சிஸ்கோ நகரில் நடைப்பெற்றது.

அமெரிக்க, இங்கிலாந்து, சோவியத் யூனியன் மற்றும் சீன நாட்டுப் பிரதிநிதிகள் கொடுத்த ஆலோசனையின் பேரில் 1944ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் டம்பார்ட்டன் ஓக்ஸ் என்ற ஊரில் நடந்த மாநாட்டில் ஐக்கிய நாடுகள் கழக சாசனத்தின் உள்ளடக்கங்கள் முடிவு செய்யப்பட்டது. 1945ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26ஆம் திகதி 50 நாடுகளின் பிரதிநிதிகள் இந்தச் சாசனத்தில் கையெழுத்திட்டனர். இந்த மாநாட்டில் கலந்து கொள்ளாமல் இருந்த போலந்து நாடு பிறகு தன்னுடைய கையெழுத்தை இட்டதன் மூலமாக அவற்றின் எண்ணிக்கை 51ஆனது.

1945ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 24ஆம் திகதி ஐக்கிய நாடுகள் கழகம் அதிகாரப்பூர்வமாக நடைமுறைக்கு வந்தது. ஆரம்பத்தில் இந்த அமைப்புக்கு அத்திவாரமிட்ட பிரிட்டன், ரஷ்யா, பிரான்ஸ், அமெரிக்கா, சீனா ஆகிய ஐந்து நாடுகளும் நிரந்தர பாதுகாப்புக்குரிய உறுப்பு நாடுகளாகும். ஐக்கிய நாடுகள் சபை என்பது உலக சமாதானம், சமூக முன்னேற்றம் ஆகியவற்றிற்காக சுயவிருப்பத்தின் அடிப்படையில் ஒன்று சேர்ந்த சுதந்திர நாடுகளின் ஒரு தனித்துவமான அமைப்பாகும். ஐ.நா. என்பது அதில் அங்கம் வகிக்கும் அனைத்து உறுப்பு நாடுகளையும் பிரதிநிதித்துவம் செய்யும் அமைப்பு ஆகும். இதன் தலைமையகம் அமெரிக்காவின் நியுயோர்க் நகரில் உள்ளது. தலைமையகம் 39 மாடிகளைக் கொண்ட செயலகக் கட்டிடம், உறுப்பு நாடுகள் கூடுகின்ற பொதுச்சபை கட்டிடம் மற்றும் டாக்ஹாமார்ஷில்ட் நூலக கட்டடம் என்று 3 முக்கியமான கட்டடங்களை உள்ளடக்கியுள்ளது. ஐ.நா. சபை சிறுவர்களை பராமரிக்கும் யுனிசெப் நிறுவனம், ஏதிலிகளைப் பராமரிக்கும் நிறுவனம், மேம்பாட்டுத் திட்டங்களுக்கான நிறுவனம், மக்கள் தொகை நிதியம் போன்ற பன்னாட்டு உதவி வழங்கும் பல அமைப்புகளை உருவாக்கியுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் உலக நாடுகளில் கடைபிடிக்கப்படும் உலக மக்கள் தொகை தினம், உலக சுற்றுச்சூழல் தினம் போன்ற பன்னாட்டுத் தினங்களை அறிவிப்பதும் இதன் பணிகளில் ஒன்றாகும். ஐக்கிய நாடுகள் சபை 6 முக்கிய அமைப்புக்களைக் கொண்டது. இதில் பன்னாட்டு நீதிமன்றம் தவிர மற்ற 5 அமைப்புகளும் நியூயோர்க்கிலுள்ள ஐ.நா. தலைமையகத்திலிருந்தே இயங்கி வருகிறது.

**ஐ.நா. பொதுச்சபை:**

இது ஐக்கிய நாடுகளின் முக்கியமானதொரு அங்கமாகும். இதில் எல்லா நாடுகளுக்கும் சம உரிமை அளிக்கப்படும். ஐக்கிய நாடுகளின் வரவு செலவுகளைக் கண்காணிப்பதும், நிரந்தரம் அல்லாத உறுப்பினர்களை பாதுகாப்பு சபைக்குத் தேர்ந்தெடுப்பதும், பொதுச்சபையின் தீர்மானங்களைப் பரிந்துரைப்பதும் இச்சபையின் முக்கிய கடமைகளாகும்.

**ஐ.நா. பாதுகாப்பு மன்றம்:**

பன்னாட்டு அமைதி மற்றும் பாதுகாப்பை பராமரிப்பது இதன் முக்கிய கடமையாகும். ஐ.நா. சாசனத்தில் குறிப்பிட்டுள்ளபடி அமைதி காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், பன்னாட்டு பொருளாதாரத் தடைகளை விதித்தல் மற்றும் இராணுவ நடவடிக்கைகள் எடுத்தல் போன்ற அதிகாரங்கள் இதற்கு வழங்கப்பட்டுள்ளன.

**ஐ.நா. பொருளாதார மற்றும் சமூக சபை:**

பொருளாதார மற்றும் சமூக தொடர்பான விடயங்களை ஒருங்கிணைக்கும் பொறுப்புடைய அமைப்பாகும். உலக பொருளாதார மற்றும் சமூக பிரச்சினைகளை விவாதித்து உறுப்பு நாடுகளுக்கும், ஐ.நா. அமைப்பிலுள்ள முகவர் நிறுவனங்களுக்கும் ஒரு செயலாக்கத் திட்டத்தை வகுப்பது இதன் முக்கிய நோக்கமாகும்.

**ஐ.நா. பொறுப்பாட்சி மன்றம்:**

இது ஐக்கிய நாடுகளின் பொறுப்பில் விடப்பட்ட நாடுகள் மற்றும் பகுதிகளை நிர்வகிக்க ஏற்படுத்தப்பட்ட ஒரு அமைப்பாகும். பெரும்பாலான நாடுகள் 2ஆம் உலகப் போருக்குப் பின்னர் தோற்கடிக்கப்பட்ட நாடுகளாகும். இவற்றில் சில நாடுகள் விடுதலை பெற்றுள்ளன. சில நாடுகள் தன்னாட்சி அடைந்து விட்டன. சில நாடுகள் அண்டை நாடுகளுடன் இணைந்து கொண்டன.

**ஐ.நா. செயலகம்:**

இது ஐக்கிய நாடுகளின் பல்வேறு அமைப்புகளின் கூட்டங்களுக்கு வேண்டிய ஆய்வுகள், தகவல்கள் மற்றும் வசதிகளை ஒருங்கிணைத்துத் தருகிறது. மேலும் ஐ.நா. நிறுவனத்தின் பிற அமைப்புக்கள் இடுகின்ற பணிகளையும் நிறைவேற்றுகிறது. இதன் ஊழியர்கள் செயல்திறன் மற்றும் நேர்மையின் அடிப்படையில் உலக அளவில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று இதன் சாசனம் வலியுறுத்துகிறது.

**பன்னாட்டு நீதிமன்றம்:**

ஐக்கிய நாடுகள் சபையின் நீதித்துறை சார்ந்த முதன்மையான அமைப்பாகும். இது நெதர்லாந்து நாட்டின் தலைநகரான தி ஹேக்கில் உள்ளது. உறுப்பு நாடுகளால் முன்வைக்கப்படும் சட்டத் தகராறுகளைத் தீர்த்து வைப்பதும், பன்னாட்டு அமைப்புக்கள் முன்வைக்கும் சட்டம் தொடர்பான கேள்விகள் குறித்து ஆலோசனை வழங்குவதும் இந்த நீதிமன்றத்தின் முக்கிய பணிகளாகும்.

**வீட்டோ அதிகாரம்**

சீனா, பிரான்ஸ், ஐக்கிய ராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, ரஷ்யா ஆகிய ஐந்து நாடுகள் ஐக்கிய நாடுகள் சபையில் வீட்டோ அதிகாரமுள்ள நாடுகளாகும். மேற்படி நாடுகளில் ஒரு நாடாயினும் தாம் விரும்பாத தீர்மானத்தை ஐ.நா. சபை எடுக்கின்ற போது அத்தீர்மானத்தைத் தடுத்து நிறுத்துகின்ற அதிகாரம் இந்நாடுகளுக்கு உண்டு. இதனாலேயே ஐ.நா இயங்குகின்ற செலவில் அரைப்பங்கை இந்த ஐந்து நாடுகளுமே ஏற்றுக்கொள்கின்றன. ஐ.நா. சபைக்கு வருமானம் என்பது அதன் உறுப்பு நாடுகள் செலுத்தும் தொகைதான். அனைத்து உறுப்பு நாடுகளும் தமக்கு விதிக்கப்பட்ட தொகையைச் செலுத்தவேண்டும். செலுத்த வேண்டிய தொகையின் அளவு அந்த நாட்டின் பொருளாதாரப் பின்னணி, தேசிய வருமானம், மக்கள் தொகை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது. ஐ.நாவின் ஆண்டு வருமானத்தில் ஐக்கிய அமெரிக்கா 22சதவீதமும், ஜப்பான் 19.6சதவீதமும், ஜெர்மனி 9.8சதவீதமும், பிரான்ஸ் 6.5சதவீதமும் தொகையைச் செலுத்துகின்றன.

உலகத்தின் சமாதானத்துக்காகவும், மனித உரிமைகளுக்காகவும் ஐக்கிய நாடுகள் சபை ஆற்றும் அளப்பரிய சேவையை யாராலும் மறக்க முடியாது. எனினும் ஐ.நா. சபையின் பல முடிவுகள் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் போன்ற வல்லரசு நாடுகளின் விருப்பத்துக்கு உட்பட்டவையாக இருக்கிறதே தவிர அப்பாவி மக்களைப் பாதுகாப்பதாகவோ, சிறிய நாடுகளின் இறையாண்மைக்கு உத்திரவாதம் அளிப்பதாகவோ இல்லை என்ற குற்றச்சாட்டும் இருந்து வருகிறது. எல்லா நாடுகளின் மக்களையும் சமமாகப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு ஐ.நா. சபைக்கு உண்டு என்பது அனைத்து நாட்டு மக்களின் கோரிக்கையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# விலாங்கு மீன்கள்!

விலாங்கு மீன்களின் தத்துவம் உலகப் பிரபலமானது. விலாங்கு மீன்களின் தலை பாம்பைப் போன்றதாகவும், வால் மீனைப் போன்றதாகவும் இருக்கும். விலாங்கு மீன்கள் பொதுவாக மறைந்தே வாழ்பவை. அவை ஏதேனும் இடத்தில் மறைந்து இருக்கின்ற சமயத்தில் பாம்பு வந்தால் வெளியில் தலையை மட்டும் நீட்டும். இதைப் பார்த்த பாம்பு தனது இனத்தைச் சேர்ந்த ஒன்றுதான் அங்கு உள்ளது என்றுவிட்டுச் சென்றுவிடும். மீன் வந்தால் வாலை காட்டும், வந்த மீன் தனது இனத்தைச் சேர்ந்த ஒன்றுதான் உள்ளது என்று உள்ளே சென்றால் விலாங்கு அதை இரையாக்கிவிடும். சந்தர்ப்பத்துக்கு ஏற்பதப்பித்து வாழ்பவர்களை அதிலும் குறிப்பாக இரட்டை வேடம் போடுபவர்களை 'விலாங்கு போன்றவர்கள்' என்ற உவமையுடன் அடையாளப்படுத்துவார்கள். இதே வேலையைத்தான் தற்போதைய அரச தலைவர் தேர்தலிலும் மேற்கொள்ள ஆரம்பித்துள்ளனர் வேட்பாளர்கள்.

வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத வகையில் பௌத்த சாசன மேம்பாட்டுக்கு நான் நிதி ஒதுக்கீடு செய்வேன் என்று தெரிவித்துள்ளார் ஐக்கிய தேசிய முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாஸ. குருநாகலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார் சஜித் பிரேமதாஸ. மத்திய கலாசார நிலையம், கலாசார அமைச்சு, பௌத்த சாசன அமைச்சு, தலைமை அமைச்சரின் நிதியம் என்பவற்றின் ஊடாக நிதி ஒதுக்கப்பட்டு பௌத்தத்துக்கு பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும். நாடு முழுவதும் 1,125 விகாரைகள் அமைக்கப்படும் என்றெல்லாம் வாக்குறுதி வழங்கியுள்ளார் அவர்.

இலங்கையில் நடைபெறும் தேர்தல்களின் வெற்றியை இனவாதமும் மதவாதமுமே தீர்மானிக்கின்றன என்பது வெள்ளிடைமலை. அதற்கு பல்வேறு தேர்தல்களை உதாரணமாக அடுக்கிக்கொண்டே செல்லலாம். இந்தத் தேர்தலும் அதற்கு இம்மியளவும் வேறுபாடு இல்லாமல் அமைந்துள்ளமையை காணக்கூடியதாக உள்ளது.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச, ஐக்கிய தேசிய முன்னணியின் வேட்பாளர் சஜித் இருவரும் நீட்சியாக பரஸ்பரம் இத்தகைய கருத்துக்களை முன்வைத்து வருகின்றமையைக் காணக்கூடியதாக உள்ளது. 'நான் ஆட்சிப்பீடம் ஏறினால் பன்னாட்டுப் பௌத்த பல்கலைக் கழகம் இலங்கையில் அமைக்கப்படும். இலங்கை பௌத்த கேந்திர நிலையமாக மாற்றப்படும்' என்று தெரிவித்திருந்த சஜித், மிகக்குறுகியகால இடைவெளியில் 'பௌத்தம்' என்கின்ற துருப்புச்சீட்டை மீண்டும் கைக்கொண்டுள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணியினர் சிறுபான்மை மக்கள் மத்தியில் முன்னெடுக்கும் தேர்தல் பரப்புரைகளின்போது, 'இன நல்லிணக்கம்' என்ற நிலைப்பாட்டை அவ்வப்போது பயன்படுத்தி வருகின்றனர். ராஜபக்சாக்களிடம் இருந்து தம்மை வேறுபடுத்திக் காட்டுவதற்கும், ராஜபக்சாக்களின் எதிர்ப்பு வாக்குகளை அள்ளுவதற்கும் இந்த நிலைப்பாடு இவர்களுக்கு அவசியமாகின்றது. வடக்கு – கிழக்கில் காணி விடுவிப்புத் தொடர்பில் சமீபத்தில் சஜித் வெளிப்படுத்திய கருத்துக்களும் இதே வகையறாதான்.

தமிழர்பகுதிகளில் தமிழர்களுக்குச் சார்பான கருத்துகளை வெளியிட்டுவிட்டு பின்னர் சிங்கள மக்களின் பகுதிக்குள் சென்று அதை மறுத்துரைத்து, பௌத்த மற்றும் சிங்கள அம்சங்களைக் கொண்ட பேரினவாதக் கருத்துக்களை வெளியிடுவதை வேட்பாளர்கள் முடிவுக்குக் கொண்டு வரவேண்டும். விலாங்கு மீன்களுக்கு உரித்தான குணாம்சங்கள் பரப்புரைகளுக்கு வேண்டுமென்றால் பொருத்தமானதாக இருக்கலாம். ஆனால் ஆட்சிக்கும் தலைமைக்கும் அறவே பொருந்தாது என்பது அவர்களுக்குப் புரியட்டும்.

# கடற்படையின் பாராமுகம்

இலங்கைப் படையினர் போரின் இறுதிக் கட்டத்தில் மேற்கொண்ட மனித உரிமை மீறல்கள் தொடக்கம், இலங்கையில் நடைபெறும் சித்திரவதைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கரிசனையை வெளிப்படுத்தி வரும் பன்னாட்டு உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டம், கடற்படையினர் தொடர்பில் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்டு மூடி மறைக்கப்படும் கடத்தல்கள் தொடர்பில் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கை இங்கே முழுமையாகத் தரப்படுகின்றது.



**2008** ஆம் ஆண்டில் இருந்து 2014 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கடற்படை முகாம்களினுள்ளே இடம்பெற்ற சித்திரவதைகள், காணாமற்போதல் மற்றும் கொலை போன்றவற்றுக்குப் பெருமளவான கடற்படை அதிகாரிகள் உடந்தையாக இருந்தமை கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் பன்னாட்டு உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டம் இலங்கை உடனான கடற்படைக் கூட்டுறவை மீள்பார்வை செய்யுமாறு அழைப்பு விடுத்துள்ளது.

பன்னாட்டு உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டத்தால்; வெளியிடப்பட்டுள்ள 'முற்றாகப் பாராமுகம் காட்டும் இலங்கைக் கடற்படை' என்ற அறிக்கை திருகோணமலைக் கடற்படைத்தளத்தில் 11 பேர் காணாமற்போனமை பற்றி இலங்கைக்கு உள்ளே பத்து ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட பொலிஸ் விசாரணையில் இருந்து பெறப்பட்ட ஆவணங்களை, தப்பிப் பிழைத்தவர்களிடமும் மற்றும் உள் சாட்சியாளர்களிடமிருந்தும் பெறப்பட்ட வாக்கு மூலங்களுடன் ஒப்பீடு செய்துள்ளது. அந்த அறிக்கையானது பாரதூரமான விசாரணை தவறுகள், கருத்து வேற்றுமை அரசியல் தலையீடுகள் போன்றவற்றை இந்த வழக்கில் அடைளாயம் கண்டுள்ளது. 2009 இல் உள்நாட்டுப் போர் முடிவடைந்ததுடன் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட மீறல்கள் நிறுத்தப்படவில்லை. அத்துடன் சித்திரவதை ஒரு கடற்படைத்தளத்தில் மட்டும் இடம்பெறவில்லை.

'திருகோணமலையில் 11பேர் கடத்தப்பட்ட வழக்கானது இலங்கையின் நீதித்துறையில் ஒரு மிகப்பெரிய வெற்றியாகக் கருதப்பட்டது. ஆனால் அது துரதிஷ;டவசமாக தோல்வியின் அடையாளமாக மாறியுள்ளது. திரு கோணமலையில் கடற்படை புலனாய்வின் கட்டளைப் பீடத்துக்குப் பொறுப்பாக இருந்த அல்லது அங்கிருந்த பல மூத்த கடற்படை அதிகாரிகள் கூட விசாரணை செய்யப்படவில்லை. குற்றஞ்சாட்டப்பட்ட குற்றவாளிகளுக்கு பாதுகாப்பும் பதவி உயர்வும் வழங்கப்பட்டிருக்கின்றன. அத்துடன் பாதிக்கப்பட்டு உயிர்வாழ்பவர்கள் ஒரு போதும் கூட விசாரணை செய்யப்படவில்லை' என பன்னாட்டு உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார். கடற்படைப் புலனாய்வுக்குள்ளே முன்னாள் கடற்படைத்தளபதியால் தனிப்பட்ட ரீதியில் உருவாக்கப்பட்ட ஒரு கறுப்பு நடவடிக்கைப் பிரிவு என்ற சிறப்புப் புலனாய்வுப் பிரிவின் நடவடிக்கைகள் பற்றி மூத்த அதிகாரிகளுக்கு தெரிந்திருக்க வேண்டும்.

மற்றைய விடயங்களுக்கு மத்தியில், சிறப்பு விசாரணைப் பிரிவின் உறுப்பினர்கள், நாட்டின் மிகவும் பாதுகாப்பான கடற்படைத்தளத்தில் ஒரு நிலக்கீழ் சித்திரவதை முகாமை இயக்கியிருப்பதாகவும் அங்கு பல சிறைக்கைதிகளை பல ஆண்டுகளாக நிலக்கீழ் அறைகளில் தடுத்து வைத்திருந்ததாகவும் குற்றஞ்சாட்டப்படுகின்றனர். கடற்படைக் கட்டளை அமைப்பின் உடந்தை இல்லாமல் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள் அந்த இடத்துக்கு உள்ளேயும் வெளியேயும் கொண்டுவரப்படுவதும், பலர் விசாரிக்கப்படுவதும், உணவு வழங்கப்படுவதும் காவல் காக்கப்படுவதும் சாத்தியமற்றது என இந்த அறிக்கை வாதிடுகின்றது.

'அங்கு நடந்துகொண்டிருந்தவற்றுக்கு முற்றிலும் தாங்கள் பாராமுகமாக இருக்க வேண்டும் என்று எலோருக்கும் தெரிந்திருந்தது என்று நாங்கள் பேசிய கடற்படை அதிகாரிகள் தெரிவிக்கின்றார்கள். கடற்படையின் முழுக் கட்டளை அமைப்புமே இந்த வன்முறைகளில் உடந்தையாக இருந்தது போலத் தெரிவதுடன் மோசமாகக் களங்கப்பட்டும் உள்ளது' எனவும் சூக்கா தெரிவிக்கின்றார்.

'இந்த அமைப்பானது பொலிஸ் விசாரணைக்கு முற்றுமுழுதாக ஒத்துழைப்பு வழங்கி இந்த வழக்கில் தொடர்புபட்ட சந்தேக நபர்களுக்கு வெகுமானமளிப்பதை நிறுத்தும் வரைக்கும் இலங்கைக் கடற்படையினருக்கு தடைவிதிக்கப்பட வேண்டிய நேரம் இதுவாகும். பன்னாட்டு பங்குதாரர்களுக்கு இப்போது அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது அத்துடன் அவர்கள் இனிமேலும் இலங்கைக் கடற்படையினரின் குற்றங்களுக்கு பாராமுகமாக இருக்கமுடியாது'

'முற்றிலும் பாராமுகம் காட்டும் இலங்கை கடற்படை' என்ற அறிக்கையானது அதிர்ச்சியான தகவல்களை விபரிக்கின்றது, நீதிக்காக இன்னமும் காத்திருக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் மிகவும் வேதனையை ஏற்படுத்துவதாக உள்ளதுடன் அது கூறும் தகவல்கள் கிளர்ச்சியூட்டும் ஒன்றாக உள்ளது.

ஒரு சந்தர்ப்பத்தில் பொலிஸார் பன்னாட்டுப் பிடியாணை விடுத்த வேளையில் இலங்கையின் மூத்த அதிகாரி ஒருவர், முக்கிய சந்தேக நபர் ஒருவரை கடற்படைத் தலைமையகத்தில் மறைத்து வைத்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. அதன் பின்னர் ஒரு சாட்சியாளரைக் கடத்திச் செல்வதற்கும் முயற்சி செய்தார். சிறையில், கடற்படை அதிகாரிகள் பிரதான பொலிஸ் விசாரணை அதிகாரிக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்து வருகின்றனர். சந்தேக நபர்களில் ஒருவரைத் தவிர அனைவரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள அதேவேளையில் பல குற்றச்சாட்டுக்கள் நிலுவையில் இருப்பினும் பலருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. 2015ஆம் ஆண்டு ஜூலையில் திருகோணமலை நிலக்கீழ் முகாம் பற்றிய புவி நிலையியல் ஆள்கூற்றை வெளியிட்ட முதலாவது அமைப்பு பன்னாட்டு உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டம் ஆகும். அந்த ஆண்டின் பிற்பகுதியில் ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு குழு அந்த இடங்களுக்கு நேரில் சென்றதுடன் நிலக்கீழ் சிறைகள் இருந்ததையும் உறுதிப்படுத்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ சேரலாதன்



# தமிழர்கள் ஏமாறுவார்களா?

அரச தலைவர் தேர்தலில் மகிந்த அணியின் சார்பில் போட்டியிடும் கோத்தபாயவால் தமிழர்களின் மனங்களை வெல்ல முடியுமா? என்று சவால் விடுத்துள்ளார் பிரதிய மைச்சரான நளின் பண்டார. இதன் மூலமாகத் தமிழ் மக்களின் வாக்குகள் இந்தத் தேர்தலில் எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்தன என்பதைப் புரிந்து கொள்ள முடிகின்றது.

அரச தலைவர் தேர்தலில் எந்தவொரு வேட்பாளரும் 50 சதவீதமான வாக்குகளைப் பெற முடியாத நிலையே காணப்படுவதாக உத்தியோகபூர்வமற்ற கருத்துக் கணிப்பு தெரிவித்துள்ளது. இருப்பினும் முதன்மை வேட்பாளர்கள் இருவருக்குமிடையில் மிகக் கடுமையான போட்டி நிலவுமெனவும் அறிய முடிகின்றது. தேர்தல் வெற்றியைத் தீர்மானிக்கின்ற பிரதான சக்தியாக சிறுபான்மையின மக்களே உள்ளனர். இதனால்தான் அவர்கள் மீது அக்கறையும், கரிசனையும் காட்டப்படுகின்றது.

**வெற்றியைத் தீர்மானிக்கும் தமிழர் வாக்குகள்**

2005 ஆம் ஆண்டு இடம்பெற்ற அரச தலைவர் தேர்தலில் தமிழர்கள் வாக்களிக்காததால் மகிந்த ராஜபக்சவால் வெற்றிபெற முடிந்தது. 2015 ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவின் வெற்றியைத் தமிழர்களின் வாக்குகளே தீர்மானித்தன. இந்த முறையும் தமிழர்களின் வாக்குகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

இன்றைய நிலவரத்தின் பிரகாரம் தமிழர்களின் மனங்களை கோத்தபாய மட்டுமல்ல சஜித் பிரேமதாசவால் கூட இதுவரை வெல்ல முடியவில்லை என்பதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்கள் மோசமான இன்னல்களை அனுபவித்திருக்கிறார்கள். 1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இடம்பெற்ற தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளைத் தமிழ் மக்கள் ஒரு போதுமே மறந்துவிட மாட்டார்கள். அரசின் முழுமையான ஆசீர்வாதத்துடனேயே சிங்களக் காடையர்கள் தமிழர்களைப் பல வகையிலும் கொடுமைகளுக்கு உள்ளாக்கினர். பலர் கொல்லப்பட்டனர். தமிழர்களுக்குச் சொந்தமான சொத்துக்கள் நாசமாக்கப்பட்டன.

இவையெல்லாவற்றுக்கும் மேலாக வெலிக்கடைச் சிறையில் நடந்த மிகக் கொடிய சம்பவம் உலகில் எங்குமே நடந்திராத ஒன்று. ஆனாலும் அன்றைய ஐ.தே.க ஆட்சியாளர்கள் இவற்றையெல்லாம் சர்வ சாதாரணமாகவே எடுத்துக் கொண்டனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற இறுதிப் போர் தமிழர்களின் அத்திபாரத்தையே அசைத்துவிட்டது. அப்போதைய அரச தலைவரான மகிந்த ராஜபக்ச, பாதுகாப்புச் செயலரான கோத்தபாய, இராணுவத்தளபதியான சரத் பொன்சேகா ஆகியோர் போரை நடத்தி வெற்றி கண்டவர்களில் முதன்மையானவர்கள். போர் வெற்றிக்கு உரிமை கோருவதில் இவர்களிடையே முரண்பாடு காணப்படுகின்றது. பாதுகாப்புச் செயலர் பதவியை வகித்த கோத்தபாய போர் வெற்றிக்கு எதுவுமே செய்யவில்லையெனவும் தாமே போரை நடத்தி வெற்றி கண்டதாகவும் சரத் பொன்சேகா கூறி வருகின்றார்.

போரில் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதால் தமிழர்களுக்கு உதவுவதற்கு எவருமில்லை என்ற எண்ணம் சிங்கள இனத்தவர்களின் மனங்களில் தோன்றிவிட்டது. இதனால் தமிழர்களுக்கு எதிராகச் செயற்படுவதில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.



தேர்தல் வேளையில் வாக்குகளைப் பெறுவதே அரசியல்வாதிகளின் நோக்கமாக இருக்கும். இதற்காக எதையும் கூறுவார்கள். எதைச் செய்வதற்கும் தயங்கவும் மாட்டார்கள். ஆனால் இறுதியில் ஏமாந்து நிற்பவர்கள் தமிழர்கள் தான்.

கடந்த கால வரலாறுகளை மீட்டிப் பார்க்கும் போது தமிழர்கள் எதற்கும் போராட வேண்டிய நிலையில் தான் இருந்துள்ளனர். அவர்களது ஜனநாயக வழியிலான போராட்டங்கள் ஆட்சியாளர்களால் நிராகரிக்கப்பட்டன.

வேறுவழியின்றித் தமிழ் இளைஞர்களால் முன்னெடுக்கப்பட்ட ஆயுதப் போராட்டமும் பயங்கரவாத முத்திரை குத்தப்பட்டு தோற்கடிக்கப்பட்டுவிட்டது. அதன் பின்னர் தமிழர்களின் நிலை மேலும் மோசமாகிவிட்டது.

**எவர் வெற்றி பெற்றாலும் தமிழர்களுக்கு ஏமாற்றமே**

அரச தலைவர் தேர்தலில் எவர் வென்றாலும் தமிழர்களுக்கு எதுவுமே கிடைத்துவிடப் போவதில்லை.

ஏனென்றால் வெற்றி பெறுபவரால் இனவாதிகளையும், பௌத்த கடும் கோட்பாட்டாளர்களையும் மீறி எதையுமே சாதித்துவிட முடியாது. ஆகவே தமிழர்களின் மனங்களை வெல்லப்போவது கோத்தாவா? அல்லது சஜித்தா? என்ற பட்டி மன்றத்தை நடத்துவதால் பயனொன்றுமில்லை.

தமிழர்கள் இனியும் ஏமாறுவதற்குத் தயாராக வில்லை என்பதை உரியவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். கடந்த கால அனுபவங்கள் அவர்களை இந்த மனநிலைக்கு இட்டுச் சென்றுவிட்டது. தெற்கு அரசியல்வாதிகள் இதைப் புரிந்துகொண்டால் அதுவே போதும். ■

## ஆசிரியருக்கான கடிதம்

# மல்கம் ரஞ்சித்தும் இனவாதிதானா?

இதுவரை காலமும் பிக்குகள் மட்டுமே இது சிங்கள பௌத்த நாடு, இங்கு வேறு இனத்தவர்களுக்கு உரிமை இல்லை என்று கூக்குரல் இட்டு வந்தார்கள். அண்மைக் காலமாக மல்கம் ரஞ்சித்தும் இதே பாணியில் குரல் எழுப்பி வருகின்றார். முள்ளிவாய்க்கால் அவலத்தின்போது இவர் வாய் திறக்கவில்லை. உயிர்த்த ஞாயிறு விவகாரமும் இவருக்குத் தெரிந்த கூட்டுச் சதி தானோ என்று எண்ணத் தோன்றுகிறது.

இதில் பாதிப்பைச் சந்தித்தவர்கள் தமிழ் மக்களே. இது சம்பந்தமான அரச தலைவர் விசாரணைக் குழுவின் செயற்பாடுகளும் இழுத்தடிப்பாகவே உள்ளது. இதிலும் இவர் அக்கறை எடுப்பதாகத் தெரியவில்லை.

தந்தையின் ஆட்சியில் மக்கள் துன்பப்படுகிறார்கள் என்ற நிலையிலேயே சித்தார்ந்த அரச குமாரன் துறவியானார். இளம் கர்ப்பிணியான மனைவியையும் கைவிட்டுச் சென்றார்.

இன்று துறவிகளே குருதி வெறியர்களாக இருக்கின்றார்கள். இறைமகன் யேசுவின் சீடர்களும் இந்த நிலையில் தான் இருக்கின்றார்களா என்று எண்ணத் தோன்றுகிறது. எந்தப் பாவியுமே தன் துயர் துடைக்க நாடிச் செல்லுமிடம் ஆலயங்கள் மட்டுமே. அங்கும் இனவாதிகளும் குருதி வெறியர்களும் குடியிருந்தால் மக்கள் எங்கே செல்வார்கள். இலங்கைத் தீவை இறைவனும் கைவிட்டு விட்டாரா?

ப.யேசுபாதம், குருநகர்.

**வாசகர்களே!**

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றவற்றைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அதனைக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்படாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு கல்விச் செயற்பாட்டில் ஆளுநர் ஏற்படுத்தும் மாற்றம்

## 2020ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வருகிறதாம்

யாழ்ப்பாணம்,ஒக் 24

ஒரு பாடசாலையில் வகுப்பறையொன்றில் இடம்பெறும், கற்பித்தல் செயற்பாடுகளை, வேறொரு பாடசாலையின் அதே வகுப்பறையைச் சேர்ந்த மாணவர்களும் விளங்கும் வகையிலான செயற்றிட்டம் 2020ஆம் ஆண்டு முதல் வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப் படவுள்ளது. திறன் வகுப்பறைகள் மூலமாக ஒளிப்படக்காட்சிகளாக அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்தத் தகவலை வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் வெளியிட்டுள்ளார்.

அண்மையில் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியொன்றிலேயே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் ஆயிரத்து 38 பாடசாலைகள் உள்ளன. 21 தேசிய பாடசாலைகள் ,மற்றையவை மாகாணப் பாடசாலைகளாக உள்ளன.

எமக்கு ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றன. கணிதம், விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம்,போன்ற விஞ்ஞானம் சார்ந்த பாடங்களுக்கு ஆசிரியர் வெற்றிடம் நிலவுகிறது.

300 க்கும் அதிகான ஆசிரியர்கள் தேவையாக உள்ளனர். ஆனால் 5 ஆயிரம் பட்டதாரிகள் வேலை இல்லாமல் உள்ளனர். அவர்களில் அதிகமானவர்கள் கலைத்துறைப் பட்டதாரிகளாகவே உள்ளனர். ஆகவே இதற்கு மாற்று வழி ஒன்றைக் கையாள உள்ளோம். ஒரு பாடசாலையில் அதிக மாணவர்கள் குறித்த பாடத்தில் சிறப்புச் சித்திகளைப் பெறுகின்றனர்.

அதற்குக் கற்பிக்கும் ஆசிரியரின் புலமை சிறப்புத் தன்மை காரணமாக உள்ளது. ஆகவே அந்த பாடசாலையின் ஆசிரியர் கற்பிக்கும் போது அதனை ஏனைய 100 பாடசாலையைச் சேர்ந்த மாணவர்களும் கற்கும் வகையில் திறன் வகுப்பறை ஊடாக நேராக ஒளிபரப்புச் செய்யப்படவுள்ளது.

அந்தக் காட்சி பதிவு செய்யப்படும். அதன் ஊடாகக் கற்றலில் உள்ள சந்தேகங்கள் தீர்க்கப்படும் .

அடுத்த வருட ஆரம்பத்தில் இந்த நடைமுறை பின்பற்றப் படவுள்ளது என்று ஆளுநர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஜ-7)

## அளவெட்டி வாசிக்கு ரூ.ஆயிரம் தண்டம்

சாவகச்சேரி.ஒக்.24

சாரதி அனுமதிப் பத்திரம் இல்லாத நபருக்கு உந்துருளியை வழங்கி உதவிய அளவெட்டி வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கை விசாரணை செய்த நீதிவான் உந்துருளி உரிமையாளரை எச்சரிக்கை செய்து தண்டம் விதித்தார். (க-9)

## வருடாந்த பரிசளிப்பு விழா

கரணவாய்,ஒக்.24

வடமராட்சிக் கிழக்கு நாகர்கோவில் மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு இடம்பெறும்.

வித்தியாலய அதிபர் கே.கண்ணதாசன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியல் துறை மூத்த விரிவுரையாளர் ஏ.நித்திலவர்மன், சிறப்பு விருந்தினராக மருதங்கேணி கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரவியராசா ஆகியோர் கலந்து கொள்வர். (க-108)

## புன்னாலைக்கட்டுவன் மகா வித்தியாலய மாணவனுக்கு 165 புள்ளிகள்



யாழ்ப்பாணம்.ஒக்.24

மிகவும் பின்தங்கிய பிரதேச மாணவர்கள்கல்விகற்கும்புன்னாலைக்கட்டுவன் மகா வித்தியாலய வரலாற்றில் மிக நீண்ட காலத்தின் பின்னர் இந்த ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் கு. சந்தோஸ் எனும் மாணவன்165புள்ளிகளைப்பெற்றுவெட்டுப்புள்ளியைக் கடந்து சித்தியடைந்துள்ளார்.

இவரை விட சு. அக்சயா - 131, இ. தேனுஜன் -113, சு. அஸ்வின்- 108 ஆகியோர் உட்பட பரீட்சைக்குத் தோற்றிய10மாணவர்களில்6பேர்70புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளனர் என்று பாடசாலைஅதிபர்கே. முரளிதரன்தெரிவித்துள்ளார். (க)



யாழ்ப்பாணம்,கோட்டைகிராமஅலுவலர்பிரிவில், முத்தமிழ் சிறுவர் முன்பள்ளியின் சிறுவர் கண்காட்சிமற்றும்சிறுவர்சந்தைகடந்ததிங்கட்கிழமை இடம்பெற்றது. கண்காட்சியில் சிறுவர்களால் உருவாக்கப்பட்ட பல கைவினைப் பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டன. (க)

## தும்பளை தெருமூடி மடம் புதுப்பொலிவுடன் சீரமைப்பு



யாழ்ப்பாணம்,ஒக்.24

தமிழர்களின் தொன்மை மரபைப் பிரதி பலிக்கும் பருத்தித்துறை நகரத்தில் தும்பளை வீதியில் அமைந்துள்ளதெருமூடி மடம் பருத்தித்துறை சமூக அமைப்புக்களின் முயற்சியால், சுவிஸ் பருத்தித்துறை ஒன்றியத்தின் நிதியுதவியுடன் யாழ்ப்பாணம் தொல்லியல் திணைக்களத்தால் மறுசீரமைக்கப்பட்டுள்ளது. கடந்த 4 மாதங்களுக்கு முன்பு தெருமூடி மடதுக்கு ஊடாகப் பயணித்த கனரக வாகனங்கள்.இருதடவைகள் மடத்தின் கூரைப்பகுதி மீது மோதியதால் தெருமூடி மடம் சேதமடைந்திருந்தது.

சேதமடைந்த தெருமூடி மடத்தைச் சீரமைக்க தம்மிடம்போதியநிதிஇல்லை என்று தொல்லியல் திணைக்களம்தெரிவித்திருந்த நிலையில் சுவிஸ் பருத்தித்துறை ஒன்றியத்தின்நிதியுதவியுடன்தெருமூடிமடம்மறுசீரமைக்கப்பட்டுள்ளது.சேதமடைந்த தெருமூடி மடம் முன்னர் இருந்தது போன்று வடிவமைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான ஒளிப்படங்கள் சமூக வலைத்தளங்களில் பதிவிடப்பட்டுள்ளன. (க)

## கட்டுப்பாட்டு விலையை மீறி பொருள்கள் விற்பனை செய்தால் அறியத் தாருங்கள்

யாழ்ப்பாணம்,ஒக் 24

கட்டுப்பாட்டு விலையை மீறி வர்த்தகர்கள் பொருள்களை விற்பனை செய்தால் அது தொடர்பில் பாவனையாளர் அதிகார சபைக்கு அறியத்தாருங்கள் என்று, யாழ்ப்பாண மாவட்ட பாவனையாளர் அதிகார சபை கோரியுள்ளது.

அரசு நடைமுறைப்படுத்தும் விலைக் குறைப்புக்கு அமைவாக சமையல் எரிவாயு விற்பனை செய்யாமை தொடர்பில் இரண்டு முறைப்பாடுகள் கிடைத்துள் ளன என்றும் அதிகார சபை தெரிவித்துள்ளது. சமையல் எரிவாயு விலை குறைப்புத் தொடர்பில் அரசு அறிவித்தலை வழங்கினால் அதற்கு அமைவாக விற்பனையாளர் நுகர்வோருக்குப் பொருள்களை வழங்க வேண்டும். தற்போது சமையல் எரிவாயுவின் விலைக் குறைப்பு அரசால் மேற்கொள்ளப்பட்ட விலைக்குறைப்பிலும் பார்க்க அதிகமாக விற்பனை செய்யப்படுகிறது.

அதாவது தற்போது கட்டுப்பாட்டு விலையாக 12.5 கிலோ கிராம் சமையல் எரிவாயு ஆயிரத்து 602 ரூபாவாகவும், 5 கிலோ கிராம் சமையல் எரிவாயு 653 ரூபாவாகவும், 2.3கிலோ கிராம் சமையல் எரிவாயு 283 ரூபாவாகவும் விற்பனை செய்யவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விலைக்கு மேலதிமாக சமையல் எரிவாயு விற்பனை செய்யப்படுகிறது. இது தொடர்பில் இரண்டு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. யாழ்ப்பாணம், பண்டத்தரிப்பு மற்றும் வவுனியாவில் இருந்து அந்த முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. குறித்த முறைப்பாடுகளுக்கு அமைவாக மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

கட்டுப்பாட்டு விலையை விட அதிகமான விலைக்குப் பொருள்கள் விற்கப்படுமாயின் அது தொடர்பில் பாவனையாளர் அதிகார சபைக்கு அறியத்தர முடியும், என்று பாவனையாளர் அதிகாரசபை தெரிவித்தது. (ஜ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள

# மீனவர்களை விடுவிக்கக் கோரி யாழ்ப்பாணத்தில் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், ஒக் 24

இந்தியச்சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழ் மீனவர்களை விடுதலை செய்யக் கோரி யாழ்ப்பாணத்தில் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.



யாழ்ப்பாண மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கச் சமாசத்தின் ஏற்பாட்டில், கைது செய்யப்பட்ட மீனவர்களின் உறவுகள் மற்றும் சக மீனவர்கள் இணைந்து போராட்டத்தை முன்னெடுத்தனர்.

சமாசத்திலிருந்து ஏ-9 வீதி ஊடாக ஊர்வலமாகச் சென்றவர்கள், ஆளுநர் செயலகம் சென்று அங்கிருந்து யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்திய தூதரகத்துடன் போராட்டத்தை நிறுத்தினர்.

ஆளுநர் செயலகம், மாவட்டச் செயலகம், இந்திய தூதரகம் ஆகியவற்றுக்கும் மனுக் கையளித்தனர்.

"இந்திய அரசே எனது கணவனை விடுதலை செய், விழித்தெழு இந்திய அரசே, மீனவர்களை விடுதலை செய்" போன்ற வாசகங்களை ஏந்தியவாறு உறவுகள் கண்ணீருடன் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம், எழுவை தீவு பகுதியில் கடந்த 3 ஆம் திகதி, மதியம் சுமார் 50 க்கும் மேற்பட்ட சிறிய ரக பைபர் படகுகளில் நண்டு வலையைப் பயன்படுத்தி நண்டு மீன்கள் பிடிப்பதற்காக மீனவர்கள் சென்றுள்ளனர்.

இந்திய இலங்கை பன்னாட்டுக் கடல் எல்லை அருகே வலை விரித்துக் கொண்டிருந்த போது, காற்றின் வேகம் காரணமாக மீனவர்களின் படகு இந்திய எல்லைக்குள் வந்ததால் எல்லை தாண்டி மீன் பிடித்ததாக வழக்குப் பதிவு செய்த இந்திய கடலோர காவல் படை, 12 மீனவர்களைக் கைது செய்தது. அவர்களது 6 படகுகளையும் கரைக்குக் கொண்டு சென்றனர்.

அவர்களுடன் அன்றையதினம், யாழ்பாணத்தில் இருந்து மீன்பிடிப்பதற்க்காகச் சென்ற 6 மீனவர்களும் இந்தியக் கடலோரக் காவல்படையால் கைது செய்யப்பட்டனர்.






இந்திய எல்லை எனத் தெரியாமல் இந்திய கடல் பகுதிக்கு வந்ததாக மீனவர்கள் தெரிவித்திருந்தும், அவர்கள் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

எழுவை தீவு, யாழ்ப்பாணம், ஆகிய பகுதிகளைக் சேர்ந்த 18 மீனவர்கள் சிறையில் உள்ளனர். அவர்கள் கடந்த 18ஆம் திகதி விடுவிக்கப்படுவார்கள் என்று எதிர்ப்பார்க்கப் பட்ட போதும், நீதிமன்று அவர்களுடைய விளக்கமறியலை நீடித்தது. எதிர்வரும் முதலாம் திகதி வரை அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். குறித்த மீனவர்களை விடுவிக்கக் கோரியே நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (சு-21,ரி1)

## பரிசளிப்பு நிகழ்வு

கொடிகாமம், ஒக். 24

யாழ்ப்பாணம் கரம்பைக்குறிச்சி அ.த.க பாடசாலையின் பரிசளிப்பு நிகழ்வு வித்தியாலய மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் கனகசபை இளங்கோவன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி ஆசிரிய கல்வியியலாளர் மருதையினார் தர்மசீலன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பக் கல்விச் செயற்பட்டு மகிழ்வோம் இணைப்பாளர் திருமதி இராஜி மயில்வாகனசிங்கம், கரவெட்டிப் பிரதேச செயலக வெளிநாட்டு வேலைவாய்ப்புக் கிளை அலுவலர் சுந்தரம் சுமன்,

மதிப்புறு விருந்தினராக பொருளாதார அபிவிருத்தி அலுவலர் கணேசமூர்த்தி பிறேமதாசன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

மாணவர்களுக்கான பரிசில்களை பழைய மாணவி திருமதி. சிவகுமார் தேவமலர் வழங்கி மதிப்பளிக்கவுள்ளார். (ஜ-104)

## சீரமைக்கப்பட்ட வகுப்பறை திறப்பு

சாவகச்சேரி, ஒக்.24

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனசமூகவேலைத் திட்டத்தின் கீழ் சீரமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடம் இன்று காலை 8 மணிக்குத் திறந்து வைக்கப்படவுள்ளது.

கல்லூரி அதிபர் திருமதி ல.முகுந்தன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், முதன்மை விருந்தினர்களாக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன், இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன வடக்கு மாகாண பிராந்திய முகாமையாளர் பா.சத்தியன், சிறப்பு விருந்தினராகக் கூட்டுத்தாபன சாவகச்சேரி கிளையின் முகாமையாளர் கே.பிரதீபன் ஆகியோர் கலந்து கொள்வர். (சு-9)

# இலங்கை மீனவர் விடயத்தில் நடவடிக்கை எடுக்க முடியாது

## இந்தியத் தூதரக அதிகாரிகள் மறுப்பு

யாழ்ப்பாணம், ஒக்.24

இந்தியாவில் தடுத்து வைத்திருக்கும் இலங்கை மீனவர்கள் தொடர்பில், இலங்கைத் தூதரக அதிகாரிகளிடமே கேட்க வேண்டும். அந்த விடயத்தை எம்மிடம் கேட்டால் எம்மால் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது என்று இந்திய தூதரக அதிகாரிகள் மறுப்புத் தெரிவித்துள்ளனர் என்று யாழ்ப்பாணம் மாவட்ட மீனவ சங்கங்களின் சம்மேளனச் செயலாளர் அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்தார்.

இந்தியக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 18 இலங்கை மீனவர்களை விடுதலை செய்யக்கோரி, யாழ்ப்பாணம் மீனவர் ஒன்றிய சமாசம் மற்றும் ஊர்காவற்றுறை மீனவர் சங்கம் ஆகியன இணைந்து யாழ்ப்பாணத்திலுள்ள உள்ள இந்தியத் துணைத் தூதரகம் முன்பாக நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். எழுவைதீவில் இருந்து கடற்றொழிலுக்காகச் சென்றிருந்த சமயம் கைது செய்யப்பட்டு, தொடர்ந்தும் சிறையில் வாடும் மீனவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுப்பதோடு, இந்திய இலங்கை அரசுகள் இணைந்து இந்திய இலங்கையின் கடலில் எல்லை அமைக்க வேண்டும் என்றும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

போராட்டத்தின் நிறைவில் இந்தியத் தூதரகத்தில் மனுக் கையளிக்கப்பட்டது. மனுக் கையளிக்கப்பட்ட பின்னர் மாவட்ட மீனவச் சங்கங்களின் சம்மேளனச் செயலாளர் தெரிவித்ததாவது,

இந்திய மீனவர்கள் எல்லை தாண்டும் போது இலங்கைக் கடற்படையினரோ எமது கரையோரத்தில் நின்று கைது செய்கின்றனர். ஆனால் இந்தியக் கடற்படையினரோ எல்லையில் வந்து பிடித்துச் செல்கின்றனர். [illegible] பின்னர் தொழில் புரியும் எமக்கு இது தான் நிலமை. இலங்கைக் கடற்படையினரும் எல்லையில் நின்று இந்திய மீனவர்களைக் கைது செய்தால் நிலமை என்னவாகும்.

எனவே இந்தியா மிகப்பெரும் நாடு இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில் இந்திய இலங்கைக் கடல் எல்லையில் நிரந்தர எல்லை அமைக்கப்பட வேண்டும். அதேநேரம் இரு நாட்டு மீனவர்களும் இது தொடர்பில் பேச வேண்டும். எமது மீனவர்கள் ஒன்றும் தடை செய்யப்பட்ட தொழிலில் ஈடுபடவில்லை. மாறாக இந்திய மீனவர்கள் தடை செய்யப்பட்ட தொழிலையே மேற்கொள்கின்றனர்.

இதனால் இரு நாட்டு அரசுகளும் தமது பூகோள நலன் தொடர்பிலேயே பேசுகின்றனர். மீனவர்கள் தொடர்பில் மறந்து விடுகின்றனர். இதனாலேயே நாம் மீனவர்கள் நேரடியாகப் பேச வேண்டும் எனக் கோருகின்றோம்- என்றார். (சு-105)

## இணக்க சபையின் இந்த வார அமர்வுகள்

அச்சுவேலி, ஒக்.24

கோப்பாய் பிரதேச நடுவர் சபையின் இந்த வார அமர்வுகள் நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறும்.

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு எதிர்வரும் 27ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை அமர்வுகள் நடைபெற மாட்டாது என்று கோப்பாய் பிரதேச மத்தியஸ்தர் சபையின் தவிசாளர் இ.கிருஷ்ண பிள்ளை அறிவித்துள்ளார். (சு-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உளநல நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.24
யாழ்ப்பாண கல்வி வலயம் நடாத்தும் உலக உளநல நாள் நிகழ்வுகள் இன்று வியாழக்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறும். யாழ்ப்பாணம் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் த.பால்ராஜ் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா கலந்து கொள்ளவுள்ளார். (க-422)

## விண்ணப்பங்கள் கோரல்

சாவகச்சேரி,ஒக்.24
தென்மராட்சிப் பிரதேச செயலகக் கலாசார பிரிவினர் பிரதேசத்தில் நீண்ட காலமாக கலைத்துறையில் சேவையாற்றி வரும் மூத்த கலைஞர்களுக்கு பிரதேசத்தின் உயர் விருதான கலைசாகரம் விருதுகள் இவ்வருடம் வழங்குவதற்காக மூத்த கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
கலைத்துறையில் நீண்ட காலம் அரும்பணியாற்றிவரும் மூத்த கலைஞர்களுக்குப் பிரதேச செயலகக் கலாசாரப் பிரிவினரால் வருடாந்தம் கலைசாகரம் விருது வழங்கப்பட்டு வருகிறது.
அதேபோன்று இவ்வருடமும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பிரதேச கலாசார விழாவில் கலைஞர்களுக்கான விருதுகள் வழங்குவதற்கு தகைமையுள்ள 60 வயதைப் பூர்த்தி செய்த கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
விண்ணப்பங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகக் கலாசாரப் பிரிவில் உரிய படிவத்தைப் பெற்று விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.
இசை, வாய்ப்பாட்டு, ஓவியம், சிற்பம், கர்நாடக சங்கீதம், மிருதங்கள் ஊடகம் உள்ளிட்ட கலைத்துறையில் சேவையாற்றி வருபவர்களுக்கு விருது வழங்கப்பட்டு வருகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

### யாழ்ப்பாண மாவட்டத்தில் சேவையிலுள்ள

# தனியார் பஸ் உரிமையாளர்களின் பல பிரச்சினைகளுக்குத் தீர்வில்லை

### எவரிடமும் முறையிட்டுப் பயனில்லை என இணையம் விசனம்

யாழ்ப்பாணம்,ஒக்.24
**யா**ழ்ப்பாணம் மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்துகளின் உரிமையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகப் பல தரப்பிடம் முறையிட்டும் எந்தப் பயனும் இல்லை என்று யாழ்ப்பாண பிராந்தியக் கூட்டிணைக்கப் பெற்ற பேருந்து நிறுவனங்களின் இணையம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பில் இணையம் அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,
தனியார் பேருந்துச் சேவைச் சங்கமானது 1980 ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்டு படிப்படியாக வளர்ச்சியடைந்து இன்று 16 சங்கங்களின் நிர்வாகங்களை உள்ளடக்கிய பிராந்தியக் கூட்டிணைக்கப்பெற்ற பேருந்துக் கம்பனிகளின் இணையமாகச் சிறப்பாகச் செயற்பட்டு வருகிறது.
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் 600 க்கும் மேற்பட்ட தனியார் பேருந்து உரிமையாளர்களின் முக்கிய பிரச்சினைகள் தொடர்பில் பல காலமக நாம் குரல் கொடுத்து வருகின்றோம். முன்னாள் முதலமைச்சர் தொடக்கம் தற்போதைய ஆளுநர் வரையில் எமது பிரச்சினைகள் தொடர்பான கோரிக்கைகளைத் தெளிவுபடுத்தியுள்ள போதிலும், எமக்குரிய தீர்வு எட்டாக் கனியாகவே இருந்து வருகிறது.
இதற்கு முக்கிய காரணங்களுள் ஒன்று வட மாகாணத்தில் உள்ள அதிகளவு வழியனுமதிப் பத்திரங்களுடைய தனியார் பேருந்துகளில் உரிமையாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருவர் வட மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் அங்கத்துவ சபையில் இடம்பெறாமையே ஆகும்.
இதன் காரணமாக அதிகார சபையில் எமது கோரிக்கைகள் மற்றும் பிரச்சினைகள் கவனத்தில் எடுக்கப்படுவதில்லை என்பதுடன், எமக்குப் பாதகமாக எடுக்கப்படும் தீர்மானங்களை அனுசரிச்சுச் செல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் காணப்படுகின்றது.
வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தற்போதைய சபை கலைக்கப்பட்டு மீண்டும் புதிய சபை உருவாக்கப்படும் போது, தனியார் பேருந்து உரிமையாளர்களைப் பிரதிநிதித்து வப்படுத்தும் ஒருவர் அச்சபையில் இடம்பெறச் செய்யுமாறு கோரி ஆளுநர் மற்றும் முதலமைச்சரின் செயலாளரிடமும் கடிதங்களைச் சமர்ப்பித்திருந்தோம். எனினும் மீண்டும் எமது பிரதிநித்துவம் உள்வாங்கப்படாமலே புதிய அங்கத்துவ சபை அமைக்கப்பட்டுள்ளது.
அண்மையில் இடம்பெற்ற வட இலங்கைத் தனியார் சங்கங்களின் ஒன்றியத்தின் நிர்வாக சபைக் கூட்டத்தில், வடக்கு மாகாணத்தில் உள்ள அதிகளவு வழியனுமதிப பத்திரங்களைக் கொண்டுள்ள 600 பேருந்து உரிமையாளர்களையும் புறக்கணித்து விட்டு 350 வழி அனுமதிப் பத்திரங்களை மாத்திரம் கொண்டுள்ள (ஒன்றியம்) யாழ் தூரச் சேவைச் சங்கம் மற்றும் வட மாகாணத்தில் உள்ள ஏனைய நான்கு மாவட்டங்களும் இணைந்த வட இலங்கை தனியார் சங்கங்களின் ஒன்றியத்தின் நிர்வாக சபையைக் கூட்டி தமது சார்பில் பிரதிநிதி ஒருவரை வழங்கத் தீர்மானித்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.
இவ்வாறான செயற்பாடுகள் எமக்கு மிகுந்த வேதனை அழிக்கிறது. மக்களுக்குரிய போக்குவரத்துச் சேவையை வழங்கி வரும் நாம் பல காலங்களாக நீதி கிடைக்காது போராடி வருகின்றோம்.
வடக்கு மாகாண சபையானது அரசிடமிருந்து கிடைக்க வேண்டிய நிதியைப் பயன்படுத்தாது, தனியார் பேருந்து உரிமையாளர்களிடமிருந்து அறவிடும் நிதியின் மூலமே தமது செலவுகளை ஈடு செய்து வருவதாகவும் அறிந்துள்ளோம்.
இதனால் தான் வழி அனுமதிப் பத்திரம் தொடர்பான கட்டணங்கள் மிகவும் அதிகரித்துக் காணப்படுகின்றன. இவ்வாறான நிலை தொடர்ந்து செல்லும் போது எதிர்காலத்தில் வட மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் செலவுகள் அதிகரிக்கும் பட்சத்தில், வழி அனுமதிப் பத்திரம் தொடர்பான கட்டனங்கள் மேலும் பல மடங்காக அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.
எனவே இவ்விடயத்துக்குப் பொறுப்பான அதிகாரிகள் தலையிட்டு 600 பேருந்து உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்கள் என ஏறத்தாழ 2 ஆயிரம் பேருடைய வாழ்வாதாரம் பாதுகாக்கப்படாமல் உதவி செய்யுமாறு கேட்டுக்கொள்வதுடன், எமது வாழ்வாதாரம் தொடர்பில் தொடர்ந்து நெருக்கடிகள் காணப்படும் பட்சத்தில், எமது ஒட்டுமொத்த பேருந்து உரிமையாளர்களும் இணைந்து இறுதித் தீர்வொன்றை மேற்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்படுவோம் என்பதனை ஆணித்தரமாகத் தெரிவித்துக் கொள்கின்றோம். - என்றுள்ளது. (க)

## முதியவர்கள் மதிப்பளிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.24
அல்வாய் மனோகரா மூத்த முதியோர் சங்கத்தால் நடத்தப்பட்ட முதியோர் தின நிகழ்வில் முதியவர்கள் விருதுகள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர். முதியோர் சங்கத்தின் தலைவர் தி. செல்வநாதன் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மனோகரா முன்பள்ளி மண்டபத்தில் நடைபெற்றது.
கொழும்பு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் மார்க்கண்டு கருணாநிதி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மூத்த விரிவுரையாளர் கலாநிதி தம்பிஐயா கலாமணி ஆகிய இருவரும் கரவெட்டிப் பிரதேச செயலர் ஈ.தயாரூபனால் சிறப்பு விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர். அத்துடன் ஏனைய முதியவர்களும் பொன்னாடை போர்த்திப் பரிசில்கள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர். (க-17)

## வாசிப்பு மாதத்தில் சிறுவர் மகிழ்களம்

சாவகச்சேரி,ஒக். 24
சாவகச்சேரி நகரசபையின் நுணாவில் பொது நூலகத்தில் தேசிய வாசிப்புமாதத்தை முன்னிட்டுஇலவசஅங்கத்துவம்மற்றும்சிறுவர்மகிழ்களம் ஆகியநிகழ்வுகள் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றன.
நூலகர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாகநகரசபைதவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன், செயலர்சீ.சபேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-9)



ஆவரங்கால் சமுர்த்தி வங்கியின் அனுசரனையுடன் 'தேவைப்பாட்டின் மீதான பயிற்சி நெறி' (பன்னீர், திரவச்சவர்க்காரம்) அச்சுவேலி மேற்கு கிராம அபிவிருத்தி மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் விதாதா வள நிலையத்தினர் இணைந்து பயிற்சிகளை வழங்கினர். (க)

# நாவாந்துறை கடற்கரையோரங்களில் ஆயிரம் கண்டல் தாவரங்கள் நடுகை

யாழ்ப்பாணம்,ஒக்.24
கடற்கரையோரப் பிரதேசங்களில் மண்ணரிப்பைத்தடுக்குமுகமாகவும், கடல் வாழ் உயிரினங்களின் பெருக்கத்தை அதிகரிக்கச்செய்யும் நோக்குடனும் யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நாவாந்துறை வடக்குக் கிராம அலுவலர் பிரிவுக் கடற்கரையோரங்களில் கண்டல் இனத் தாவரங்கள் நடுகை செய்யப்பட்டன.
முதனாள் வேலைத்திட்டமாக ஆயிரம் கண்டல் இனத்தாவரங்கள் நேற்று முன்தினம் நடுகை செய்யப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



யாழ்ப்பாண மாவட்ட செயலகக் காணிக்கிளை அலுவலர்கள் மற்றும் பிரதேச செயலக காணிக்கிளை அலுவலர்கள், பிரிவின் கடற்றொழில் சங்க உறுப்பினர்கள், கடற்றொழிலாளர்கள் இணைந்து தாவரங்களை நடுகை செய்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்குப்பிட்டியை அபகரிக்கும் வனவளத் திணைக்களத்தினர்

## மீனவர்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,ஒக்.24

யாழ்ப்பாணம் - மன்னாருக்கான முதன்மைப் போக்குவரத்துப் பாதையான ஏ-32 வீதியில் உள்ள கேரதீவு - சங்குப்பிட்டிப் பாலத்தின் அருகே முதன்மை வீதி மற்றும் கடல்பகுதிகளையும் வன வளத் திணைக்களத்தினர் அபகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் என்று மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

காடு மற்றும் அதிக மரங்கள் வளர்ந்த பகுதிகளை இதுவரை அபகரித்து வந்த வனவளத் திணைக்களத்தினர், தற்போது ஆள் உயர கண்டல் மரங்கள் ஆங்காங்கே கானப்படும் வீதியும், கடற்றொழிலாளர் மற்றும் உப்பு உற்பத்தி நிறுவனங்களின் பயன்பாட்டுக்கு ஏதுவான பிரதேசமாகக் காணப்படும் கேரதீவு சங்குப்பிட்டியையும் அபகரிக்கும் செயல்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர்.

கடல் பகுதியானால் அது கடற்றொழில் நீரியல் திணைக்களத்தின் கீழேயே கானப்படும். ஆனால் பூநகரியில் மண்ணித்தலைக்குத் திரும்பும் இடங்களை அண்டிய பகுதிகள் , கௌதாரிமுனை எனப் பல இடங்களில் தற்போது வனவளத் திணைக்களத்தினர் எல்லைக் கற்களை நட்டு வருகின்றனர். இதனால் இப் பகுதியில் தொழிலில் ஈடுபட முனையும் மீனவர்கள் அல்லது தொழிலாளர்கள் எதிர்காலத்தில் வனவளத் திணைக்களத்திடம் அனுமதிக்காக காத்திருக்கும் நிலமை ஏற்படும்.

கடல்மட்டுமே காணப்படும் சூழலில் வனப்பகுதி இல்லாத போதிலும், வனவளத் திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்படும் மர்மத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை. இவ்வாறு எல்லைக் கற்கள் நடப்படும் பகுதிகளுக்குள் அரச காணிகள் மட்டுமன்றி தனியார் வாழ்விடம், வயல்ப் பிரதேசங்கள் , மீனவர் இறங்கு துறை ஆகியவற்றுடன் மயானமும் தப்பவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் எமது பிரதேசத்தின் பெரும் பகுதியை மக்கள் இழக்கும் அவலம் கானப்படுகின்றது. இது தொடர்பில் பிரதேச செயலரின் கவனத்துக்கும் கொண்டு சென்றோம் . இருப்பினும் அந்தக் கற்கள் எவையும் அகற்றப்படவில்லை என்று மீனவர்கள் தெரிவித்தனர். இது தொடர்பில் பூநகரிப் பிரதேச செயலரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது ,

குறித்த விடயம் எமது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. உடனடியாகவே தனியார் நிலங்கள் , மீனவ இறங்குதுறை , மயானம் என்பனவற்றை அடையாளமிட்டு வனவளத்திணைக்களத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்றோம். அவற்றை விடுவிப்பது தொடர்பில் ஆராய்வதாக நேரில் வந்து திணைக்களத்தினர் பார்வையிட்டுச் சென்றனர் - என்றார்.

இது தொடர்பில் வனவளத் திணைக்கள அதிகாரிகளிடம் வினாவிய போது , பிரதேச செயலர் குறிப்பிடும் மயானம் அங்கே மயானமாகக் காணப்படவில்லை. அதே போன்று ஏற்கனவே மக்களின் பயன்பாட்டில் உள்ள நிலங்கள் இந்தப் பகுதிக்குள் உள்ளடக்கப்பட மாட்டாது- என்றனர். (க-105)

# பேருந்து சாரதிக்கு மறியல்

சாவகச்சேரி,ஒக்.24

வீதியில் நடந்து சென்ற நபரை மோதிக் காயம் விளைவித்த அரச பேருந்துச் சாரதியை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று உத்தரவிடப்பட்டது.

கைதடிமாகாணசபைக்கு முன்னால் நேற்று முன்தினம் நடந்து சென்ற நபரை யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற அரச பேருந்து மோதியது.

அதில் நபருக்குக் கால் முறிந்ததுடன், காயமும் ஏற்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பேருந்தின் சாரதியைச் சாவகச்சேரிப் பொலிஸார் கைது செய்து நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர். சாரதியை விளக்கமறி யலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (க-9)

# ஆக்கங்கள் கோரல்

யாழ்ப்பாணம்,ஒக்.24

பன்னாட்டுச் சிறுவர் தினத்தை முன்னிட்டு கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தின், கொழும்பு சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள சிறுவர் போட்டிகள் எதிர்வரும் நவம்பர் மாதம் 23 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

வர்ணம் தீட்டுதல், ஓவியம், எழுத்து ஆகிய போட்டிகளில் நாடு முழுவதுமுள்ள சிறுவர்கள் பங்குபற்ற முடியும்.

“எமக்குள்ள ஒரேயொரு வீடான பூமியைப் பாதுகாப்போம்” எனும் தலைப்பில் இடம்பெறும் போட்டிகளில் 2004ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் பிறந்த சகல சிறுவர்களும் பங்குபற்ற முடியும்.

பங்குபற்றிய சகல சிறுவர்களின் ஆக்கங்கள் ஷங்கர் பன்னாட்டுச் சிறுவர் போட்டி 2020 க்காக புதுடில்லிக்கு அனுப்பி வைக்கப்படும்.

இந்த போட்டிகளில் கலந்துகொள்ள விரும்பும் சிறுவர்கள் தமது பெயர் விவரங்களை நிலையத்துடன் 0112684698 என்றதொலைபேசி இலக்கத்துடனும், email iccrcolombo2@gmail.com என்ற இணைய முகவரியுடன் தொடர்பு கொண்டும் அனுப்பி வைக்க முடியும்.

மேலதிக தகவல்களுக்காக சுவாமி விவேகானந்த கலாசார நிலையத்தை , (முன்னாள் இந்திய கலாசார நிலையம்) 2684698என்றதொலைபேசி இலக்கத்தில் அல்லது iccrcolombo2@gmail.com என்ற ஈமெயிலைத் தொடர்பு கொள்ளவும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# மாணவர் கற்பதற்குரிய சூழலை வீட்டில்ஏற்படுத்திக்கொடுங்கள்

## பல்கலை மூத்த விரிவுரையாளர் அறிவுறுத்து

ஏழாலை, ஒக். 24

மாணவர் ஒவ்வொருவரும் சுயமாகவே கற்பதற்குரிய சகல வசதி வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும். எனதுவீட்டில்இடைஞ்சல் இல்லாதஇடத்தைத்தெரிவுசெய்து கொடுத்திருக்கின்றோம். ஆசிரியர்கள் மட்டுமன்றி நாமும் வீட்டில்கூடியகவனம்எடுக்க வேண்டும்.

அதுவே வெற்றிக்கு வழியேற்படுத்தும்.

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட மூத்த விரிவுரையாளர் தி.யோகநாதன் தெரிவித்தார்.

வலி.தெற்குபிரதேசசெயலகப் பிரிவு நடத்திய பன்னாட்டு சிறுவர், முதியோர், மாற்று ஆற்றலுடையோர் ஆகியோரின் விழா கடந்த வியாழக்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதேசசெயலர் சிவராஜசிங்கம் ஜெயகாந்த் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினர் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறுவர்கள் கற்பதற்கு ஏற்ற சகல வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும். அதற்குப்பின்புதான் அவர்களிடம் என்ன வெளிப்படுகின்றது என்பதைத் தீர்மானிக்க முடியும்.

எனது மகன் நிறைய வினாத்தாள்களைப் பெற்றுபயிற்சிசெய்திருந்தார். நாம் சொல்வதைக் கேட்டுச் செயற்படுவார். கல்வி கற்பதற்கு மறுப்பதில்லை.

தனியார்கல்விநிலையம் தவிர, மிகுதிநேரங்களில் நீங்கள்தான் உங்கள் பிள்ளைகளைப் படிப்பிக்க வேண்டும்.

ஆசிரியர்களைவிட உங்கள் பிள்ளைகள் பற்றி அறிந்தவர்கள் நீங்கள் தான். உங்கள்பிள்ளைகளின் பலம் என்ன, பலவீனம் என்ன, எதில் தவறுவிடுகிறான் என்பவற்றைப்பெற்றோர்கள்தான் தெரிந்திருக்க வேண்டுமேயொழிய மற்றவர்கள் தெரிந்து பிள்ளைகளை மேம்படுத்துவது குறைவானதாகவே இருக்கும். ஏனெனில் உங்கள் பிள்ளைகள் உங்களோடு தான் அதிக நேரம் செலவிடுகின்றார்கள்.

எனவேஉங்கள்பிள்ளைகளுக்கு வீட்டில் அதிக முயற்சிகொடுங்கள், பிள்ளைகளுக்கு வாசிப்புத் திறனை ஊக்குவிக்க வேண்டும்.

சிறுவர்களை அன்பால் வழிநடத்த வேண்டுமேயொழிய அதிகாரத்தால் வழிநடத்தக்கூடாது. முதியவர்களும் அப்படித் தான்.

எங்களுக்கு எத்தனை விடயங்களைச் செய்து அனுபவ ரீதியாக எத்தனையோ பாடங்களை எங்களுக்கு தந்துவிட்டு அவர்கள் ஓய்வெடுக்கிறார்கள்-என்றார்.(து-39)

# மதிப்பளிப்பு நிகழ்வு

சாவகச்சேரி, ஒக்.24

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் தரம் 5 புலமைப்பரிசில்பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் மற்றும் தேசிய நிலை செயற்பட்டு மகிழ்வோம் வெற்றியாளர்கள் ஆகியோருக்கான மதிப்பளிப்பு நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் திருமதி ல.முகுந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், முதன்மை விருந்தினராக மாகாணக் கல்வித் திணைக்கள உதவிக் கல்விப் பணிப்பாளர் சோ.திருக்குமாரன், மதிப்புறு விருந்தினர்களாக வலய ஆரம்பக் கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் ந.திருவாசகன், வலயச்செயற்பட்டு மகிழ்வோம் இணைப்பாளர் திருமதி இ.மயில்வாகனசிங்கம், பழைய மாணவன் ஸ்ரீ.புவிசுதேஷ் ஆகியோர் கலந்து கொள்வர். (க-9)

# குளவிகள் கொட்டி மாணவிகள் பாதிப்பு

வவுனியா, கிடாச்சூரிப் பாடசாலைகள் மாணவிகள் இருவர் குளவிகளின் தாக்குதலுக்கு இலக்காகி வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் நேற்றுமுன்தினம் பாடசாலை சென்று திரும்பியபோது வீதியோரப் பற்றைகளில் இருந்த குளவிகள் அவர்களைத் தாக்கின என்று தெரிவிக்கப்படுகின்றது. 13 மற்றும் 14 வயதுடைய இரு மாணவிகளே பாதிக்கப்பட்டுள்ளனர். (ற-110)

# 9 வருடங்களின் பின் 3 மாணவர்கள் சித்தி

யாழ்ப்பாணம்,ஒக்.24

இந்த வருடம் நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகியிருந்தன. அதனடிப்படையில் சுன்னாகம் றோ.க.த.க. பாடசாலையில், கடந்த 9 வருடங்களின் பின்னர் 3 மாணவர்கள்சிறப்புப்பெறுபேறுகளைப்பெற்றுள்ளனர். எ.போல்நியூலியன்-163, சி.றோகித்-154, றெபெனிக்ரன் 152 என்பவர்களேசிறப்புப்பெறுபேறுகளைப்பெற்றுள்ளனர் என்று பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுதந்திரபுரத்தில் அடையாளம் காணப்பட்ட

# மனித எச்சங்கள் நாளை அகழப்படும்

முல்லைத்தீவு,ஒக்.24

முல்லைத்தீவுபுதுக்குடியிருப்புப்பிரதேசத்துக்குட்பட்ட சுதந்திரபுரம் பகுதியில் அடையாளம் காணப்பட்ட மனித எச்சங்கள் நீதிமன்றின் உத்தரவுக்கு அமைவாக நாளை வெள்ளிக்கிழமை அகழப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரபுரம்கொலனிப்பகுதியில்தனியார் ஒருவரின் காணியில் ஒரு பகுதியில், மண்எடுத்து மறுபகுதியில் கொட்டப்பட்ட போது, மண்ணில் புதையுண்ட நிலையில் மனித எச்சங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை அடையாளம் காணப்பட்டன.

இந்த மனித எச்சங்களை நேற்று முன்தினம் மீட்பதற்கானநடவடிக்கைஎடுக்கப்பட்டுசட்டமருத்துவஅதிகாரி மற்றும் பொலிஸார், தடயவியல் பொலிஸார் சம்பவ இடத்துக்குச்சென்றபோதும், நீதிபதியின் உத்தரவுக்கு அமைய அகழ்வுப் பணிகள் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதுவரை குறித்த பகுதிக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. (க-ரி3)

சொகுசு வாகனத்தில் கைப்பற்றப்பட்ட கஞ்சா

# பொலிஸ் அலுவலர் உட்பட இருவருக்கு விளக்கமறியல்



மன்னார்,ஒக்.24

மன்னார், இலுப்பைக்கடவையில்சொகுசு வாகனம் ஒன்றில் 164.3 கிலோ கிராம் கஞ்சாகைப்பற்றப்பட்டது. இதனுடன்தொடர்புடைய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பொலிஸ் அலுவலர் மற்றும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஆகிய இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

கடந்த19ஆம்திகதிமன்னார்இலுப்பைக்கடவைவீதியல்அமைக்கப்பட்டிருக்கும் கடற்படையின் வீதிச் சோதனை சாவடி ஊடாக, சொகுசு வாகனம் ஒன்று செல்ல முற்பட்ட போது, அதனைக்கடற்படையினர் நிறுத்துமாறு சமிக்கை காட்டினர். அதனை மீறி வாகனம் சென்ற போது கடற்படையினர் வாகனம் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு வாகனத்தை மடக்கிப் பிடித்தனர்.

குறித்த வாகனத்தைச் சோதனை செய்தபோதுஅதில்மறைத்துவைக்கப்பட்டிருந்த பொதிகளில் 164.3 கிலோ கிராம் கஞ்சாவை மீட்டனர். அந்த வாகனத்தில் இருந்த இருவரையும் கைது செய்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் இரண்டு நாள் பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு, விசாரணைசெய்யப்பட்டனர். மன்னார்நீதவான்நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் முற்படுத்தப்பட்டனர்.

இருவரையும் எதிர்வரும் 14 நாள்கள்விளக்கமறியலில்வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (க-56)

# வவு. பிரபல பாடசாலை ஆசிரியர் மீது தாக்குதல்

பொலிஸில் முறைப்பாடு

வவுனியா,ஒக்.24

ஆசிரியர்மீது இனம் தெரியாதோர் தாக்குதல் நடத்தியதாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியாநகரில்அமைந்துள்ளபிரபலபாடசாலையில் கல்வி கற்கும் ஆசிரியர் மீதே இந்தத் தாக்குதல் கடந்த திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்டது.

ஆசிரியர் பாடசாலை முடிந்து வீடு சென்றுகொண்டிருந்தபோது சமளங்குளம் சந்தியில் அவரை வழிமறித்த மூவர் தாக்கிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

குறித்த ஆசிரியர் வருகை தரும் போது அவரை வழிமறித்து அவரது உந்துருளி இலக்கத்தை சரிபார்த்து, அவரது பெயர் விவரங்களை கேட்ட பின்னரே தாக்குதல்மேற்கொள்ளபட்டதாகமுறைப்பாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. (ஐ-110)

# விடுதிக்குக் குடும்பப் பெண்ணை அழைத்துச் சென்ற சிறைக்காவலர்

பின்தொடர்ந்து சென்று மகனும், தந்தையும் தாக்குதல்

வவுனியா,ஒக்.24

வவுனியா மருத்துவமனைச்சுற்றுவட்ட வீதியில் உள்ள விடுதி ஒன்றுக்கு, குடும்ப பெண் ஒருவரை சிறைச்சாலை காவலர் அழைத்துச் சென்றமையால், சிறைச்சாலைக் காவலருக்கும், இளைஞர்களுக்குமிடையில் கைகலப்பு ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 9.20 மணியளவில் இடம்பெற்றது.

வவுனியா சுற்றுவட்ட வீதியில் உள்ள விடுதி ஒன்றுக்கு, ஈரட்டைப்பகுதியில் இருந்து குடும்பபெண் ஒருவரைமோட்டார்சைக்கிளில் ஏற்றிக் கொண்டு வவுனியா சிறைச்சாலையில் பணிபுரியும் காவலர் ஒருவர் சென்றுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் குறித்தபெண்செல்வதை அவதானித்த பெண்ணின் மகனும், கணவனும், மோட்டார் சைக்கிளைப் பின் தொடர்ந்து சென்றனர்.

மோட்டார் சைக்கிள் விடுதிக்குள் நுழைந்த போது அவர்களைமடக்கிப்பிடித்தனர். இதன்போது சிறைச்சாலை காவலர் எனக் தெரிவிக்கப்படும் குறித்தஇளைஞனுக்கும், அவர்களுக்கும் (பெண்ணின் மகன் , கணவர்) இடையில் கைகலப்பு ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த சிறைச்சாலைக் காவலர் தொலைபேசியில்விடயத்தைத் தெரியப்படுத்தியமையை அடுத்து மேலும் பல சிறைச்சாலை காவலர்கள்சம்பவ இடத்துக்கு வந்துஅங்குநின்றபெண்ணின் தந்தை மகன் மற்றும் இளைஞர்களுடன் முரண்பட்டனர். இதனால் அங்குகைகலப்புஏற்றபட்டது. இதனால் மருத்துவமனைச் சுற்றுவட்ட வீதியின்போக்குவரத்தும்30 நிமிடங்களுக்கு மேல் தடைப்பட்டிருந்தது.

இதனையடுத்து 119 பொலிசாருக்குத்தொலைபேசியூடாக தெரிவிக்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார், இரு பகுதியினரையும் வவுனியா பொலிஸ்நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளையும் வவுனியாப் பொலிஸார் மேற்கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-ரி4)

# சமூக சேவையில் ஈடுபடும் பெண்கள் மதிப்பளிப்பு

வவுனியா,ஒக்.24

வவுனியா மாவட்டத்தில் சமூக சேவையில் ஈடுபடும் பெண்கள் மதிப்பளிக்கப்படவுள்ளனர்.

வவுனியா தமிழ் விருட்சம்அமைப்பின்ஏழாண்டு பூர்த்தியை முன்னிட்டு இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்விருதுகளுக்கான அடிப்படைத்தகுதிகளாக குறைந்தது பத்து வெவ்வேறான சமூக சேவைகளில் உதவிகள் செய்தித்தல் வேண்டும்.

அத்துடன் சிறப்புத் தேவையுடையோருக்கு கட்டாயம் உதவிசெய்திருத்தல் வேண்டும்.

எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதி முதல் விண்ணப்பப்படிவங்களை இல. 45 வெளிவட்ட வீதி, வவுனியா (சிந்தாமணி பிள்ளையார் ஆலய வீதி) எனும் முகவரியில் பெற்றுக் கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மதிப்பளிப்பு நிகழ்வு எதிர்வரும் 2020ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20ஆம் திகதி இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# டெங்கு ஒழிப்பை முன்னெடுக்கப் பிரதேச சபைகளுக்கு அறிவிப்பு

மன்னார்,ஒக்.24

டெங்குஒழிப்புதொடர்பானவிழிப்புணர்வுநடவடிக்கைகளைமக்கள் மத்தியில் முன்னெடுக்குமாறு, அனைத்து பிரதேச சபைகளுக்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்று மன்னார் மாவட்ட இடர் முகாமைத்துவஉதவிப்பணிப்பாளர் நடராசா திலீபன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில்இடர்முகாமைத்துவம் தொடர்பாகவும், தற்போதுபெய்து வரும் மழையால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாகவும் நடைபெற்ற கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

தற்போது பெய்து வரும் மழை காரணமாக மன்னாரில் தாழ்ந்த பிரதேசமாக உள்ள எமில் நகர், ஜிம்ரோன் நகர், சாந்திபுரம் பகுதிகளில் வெள்ளம் தேங்கியுள்ளது. இதனால் மக்கள் எவரும் இடம் பெயரவில்லை. தேங்கி நிற்கும்வெள்ளத்தைவெளியேற்றும் நடவடிக்கையில் இடர் முகாமைக்குழு மன்னார் நகர சபை மற்றும் மன்னார் பிரதேச சபை இணைந்துசெயற்பட்டுக்கொண்டிருக்கின்றது. குறிப்பாக டெங்கு தொடர்பாகஅதிககவனம்செலுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில் சுத்தமான தண்ணீரில் கூட டெங்கு பரவும் அபாயம் உள்ளபடியால், வாளிகள், ரயர்கள், தகரப் பேணிகள், வீடுகளில் உள்ள பாத்திரங்களில்கூடதண்ணீரைத் தேக்கி வைப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். பொதுமக்களுக்குடெங்குதொடர்பானவிழிப்புணர்வுகளைக் கொடுக்குமாறு மன்னார் நகர சபை மற்றும் அனைத்து பிரதேச சபைகளுக்கும்கடிதம்அனுப்பப்பட்டுள்ளது. என்றார். (க-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனை விதைகள் நடும் செயற்றிட்டம் ஆரம்பம்





வவுனியா,ஒக்.24

**வவுனியாவடக்கில் 20 ஆயிரம் பனைவிதைகள் நடும் செயற்திட்டம் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டன.**

வவுனியா புளியங்குளம் நெடுங்கேணி முதன்மை வீதியில் குறித்த செயற்றிட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

புளியங்குளம்புரட்சிவிளையாட்டுக் கழகம், வவுனியா வடக்கு பனை தென்னை அபிவிருத்திகூட்டுறவுச் சங்கம், வவுனியா வடக்கு கிராம மட்ட அமைப்புக்கள் மற்றும் பாடசாலை மாணவர்களின் பங்களிப்புடன் இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது. நிகழ்வில் வவுனியாவடக்குப்பிரதேசசெயலர் க. பரந்தாமன், கிராம அலுவலர்கள், வவுனியா வடக்குப் பிரதேச செயலக அலுவலர்கள், புரட்சி விளையாட்டு கழகத்தினர் எனப் பலர்கலந்துகொண்டனர். (ஐ-110)



## வாக்களிக்கும் முறை பற்றி விளக்கமளிப்பு

மன்னார், ஒக். 24

எதிர்வரும் அரசதலைவர் தேர்தல் வாக்களிப்புகள் எப்படி நடைபெறும் என்பது தொடர்பிலான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

மன்னார் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் கேட்போர் கூடத்தில் சமூகச் செயற்பாட்டாளர்களை ஒன்றிணைந்து பவ்ரல் அமைப்பு இதை நடத்தியது.

கடந்த தேர்தல்களில் பெண்களின் விகிதாசாரம் எவ்வாறு பெறப்பட்டது, குழுச் செயற்பாடுகள் மூலமாக பெண்கள் தேர்தலில் எதிர்கொள்ளும் சவால்கள் என்பன தொடர்பாக கலந்தாலோசிக்கப்பட்டது.

"35 பேர் போட்டியிடுகின்ற அரசதலைவர் தேர்தலில், மன்னார் மாவட்டத்தில் 76 வாக்குச்சாவடி நிலையங்களும் எட்டு வாக்கு எண்ணும் நிலையங்களும் அமையும்" என்று மன்னார் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார். (த)

## தமிழர்களின் கல்வியை முடக்க திட்டமிடப்பட்ட சதி நடவடிக்கை

### வித்தியானந்த கல்லூரி அதிபர் நியமனம் தொடர்பில் ரவிகரன் கருத்து

முல்லைத்தீவு,ஒக்.24

தமிழ் மாணவர்களின் கல்வியை முடக்குவதற்குத் திட்டமிடப்பட்ட சதி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அதன் ஒரு கட்டமாக முல்லைத்தீவு மாணவர்கள் உயர்ந்த நிலையை அடையக்கூடாது என்பதற்காகத் திட்டமிட்டு பாடசாலைக்கு அதிபரை நியமிக்காமல் காலத்தை இழுத்தடிக்கின்றனர் என்று வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு வித்தியானந்த கல்லூரியில் கடந்த ஒருவருட காலமாக அதிபர் நியமனம் செய்யப்படவில்லை.

கல்லூரிக்கு அதிபரை நியமனம் செய்யக்கோரி, பாடசாலை சமூகத்தினர் நேற்று முன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதில் அவர் தெரிவித்ததாவது,

வித்தியானந்த கல்லூரி முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மிகப் பெரிய பாடசாலையாகும். கடந்த ஒரு வருடகாலமாக இந்தப் பாடசாலைக்கு அதிபர் நியனம் கிடைக்கவில்லை. முன்பு இருந்த அதிபருடைய ஓய்வு நிலைக்குப் பின்னர், இன்று வரையில் ஒரு வருடகாலமாகியும் அதிபர் ஒருவர் நியமிக்கப்படாமல் இருப்பது ஒரு சாபக்கேடாக உள்ளது.

குறித்த பாடசாலையில் ஆயிரத்து 300 மாணவர்களுக்கு மேல் கல்வி கற்கும் நிலையில், தந்தை இல்லாமல் குடும்பம் ஒன்று தத்தளிக்கும் நிலமையைப்போன்ற ஒரு நிலையில் தான் வித்தியானந்த கல்லூரியில் கல்விபயிலும் மாணவர்கள் அதிபர் இல்லாத நிலையில் இருக்கின்றனர்.

ஒரு பாடசாலைக்கு அதிபரின் தேவை என்பது மிக முக்கியானது. பாடசாலையின் ஒழுக்கம் சார்ந்த விடயங்கள், மற்றும் நிர்வாகத் திறன் சார்ந்த விடயங்கள் என்பவற்றை ஒழுங்குபடுத்தல் என்பவற்றுடன் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களினுடைய செயற்பாடுகள் தொடர்பாகவும் அதிபருடைய தேவை மிக முக்கியமானது.

பல தடவைகள் வித்தியானந்த கல்லூரியின் நிரவாகத்தினர் இது தொடர்பில் உரியவர்களுக்கு கோரிக்கை விடுத்தி ருந்த நிலையிலும், உரிய தகுதியான அதிபர் நியமனம் செய்யப்படவில்லை.

தென்னிலங்கையிலுள்ள ஒரு தேசிய பாடசாலையில் ஒருவருட காலமாக அதிபர் நியமனம் செய்யப்படாத பாடசாலை ஏதாவது இருக்கின்றதா என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் சுட்டிக்காட்ட வேண்டும்.

எங்களுடைய தமிழ் மணவர்களுடைய கல்வி நடவடிக்கைகளை முடக்கு வதற்கான நடவடிக்கைகளைத்தான் சிலர் செய்கின்றார்களா என்ற ஒரு கேள்வி மக்கள் மத்தியிலே எழுகின்றது என்றார். (க-246)

## முதியோர் தின நிகழ்வு

கிளிநொச்சி,ஒக்.24

பன்னாட்டு முதியோர் தின நிகழ்வு இன்று வியாழக்கிழமை கிளிநொச்சி மாவட்டக் கூட்டுறவாளர் மண்டபத்தில் முற்பகல் 9 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தின் ஏற்பாட்டில் இடம் பெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகர் வேதநாயகம் தபேந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தி னராக கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுந்தரம் அருமை நாயகம் கலந்துகொள்ளவுள்ளார். (ஐ-421)





## மக்கள் வெள்ளத்தில் அந்தரிப்பு பிரதேச அதிகாரிகள் அசமந்தம்

மன்னார்,ஒக்.24

மன்னார் மாவட்டத்தில் பெய்து வரும் கன மழை காரணமாக மன்னார் பிரதேசசெயலர்பிரிவுக்குட்பட்ட தாழ் நில கிராமங்களான ஜீவபுரம், ஜிம்றோன் நகர், சாந்திபுரம் ஆகிய கிராமங்கள் முற்றாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

வெள்ளம் நிறைந்த வீடுகளில் இடம்பெயர முடியாத நிலையில் மக்கள் பல இன்னல்களைச் சந்தித்து வருகின்றனர்.

இந்த நிலையில் வெள்ளம் வீடுகள் மற்றும் பாதைகள், முன்பள்ளிகளில் தேங்கிக் காணப்படுகின்ற போதும் இதுவரை சம்மந்தப்பட்ட அதிகாரிகள் எந்த ஒரு அவசர அறிவுறுத்தல்களோ, வெள்ள நிவாரண ஏற்பாடுகளையோ செய்யவில்லை என்று பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த விடயம் தொடர்பாக மன்னார் மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவினரிடம் தொடர்பு கொண்டு வினவிய போது, இதுவரை மன்னார்பிரதேச செயலகத்தின் ஊடாக வெள்ளப்பாதிப்புக்கள் தொடர்பாக எந்தவித பதிவுகளும் செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. மன்னார் பிரதேச செய லகத்துடன் தொடர்பு கொண்டு மக்களுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்துக் கேட்ட போது, இதுவரை எந்தவித பாதிப்புக்களும் பதிவு செய்யப்படவில்லை. மக்கள் இடம் பெயர்ந்தால் மாத்திரம் மேலதிக நாவடிக்கைகள் மேற்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

அதே நேரம் எங்கே இடம் பெயர்ந்து வசிப்பது? வெள்ளப் பாதிப்பின் போது எவ்வாறு பதிவு செய்வது? என்பது தொடர்பாக தங்களுக்கு எந்த வித அறிவித்தல்களும் கிராம சேவகர்களால் வழங்கப்படவில்லை என்று மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். 'இத்தனைவருடம் இடம்பெயர்ந்த மக்களுக்கு எங்கே போவது என்று அறிவுறுத்தல் வழங்க வேண்டுமா'? என்று பிரதேச செயலர் அசண்டையீனமாகப் பதிலளித்தார். (க-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 26 பரிந்துரைகளில் மூன்றே நடைமுறையில்

## ஐரோப்பிய ஒன்றியம் அதிருப்தி

கொழும்பு, ஒக். 24

தேர்தல்கள் தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள 26 பரிந்துரைகளில் மூன்று பரிந்துரைகளை மாத்திரமே இலங்கை நடைமுறைப்படுத்தியுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல்கள் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

நவம்பர் மாதம் 16ஆம் திகதி நடைபெறவுள்ள அரசதலைவர்தேர்தலுக்கான கண்காணிப்பு நடவடிக்கைகளை, ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல் கண்காணிப்புக் குழு நேற்று முன்தினம் ஆரம்பித்தது. கொழும்பைத் தளமாகக் கொண்டு நாட்டின் 9மாகாணங்களிலும்கண்காணிப்பு நடவடிக்கைகளை அந்தக் குழு மேற்கொள்ளவுள்ளது. இலங்கைக்கு வருகைத் தந்த 30 பேர் அடங்கியகுழுகொழும்பில்ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டது. ஐரோப்பியஒன்றியகண்காணிப்புக் குழுவின்பிரதானிடிமிட்ராஜயானோ, தேர்தல்களுடன் தொடர்புடைய பல்வேறு தரப்பினருடன் பேச்சு நடத்த எதிர்பார்த்திருப்பதாகக் குறிப்பிட்டார். அதேநேரம் தேர்தல் நடைபெறும் வரையில் தமது குழு எந்தவிதமான பகிரங்க அறிவிப்புகளையும் வெளியிடாது என்றும், தேர்தல் நிறைவடைந்து இரண்டு தினங்களின்பின்னரேமுதன்மைஅறிக்கை வெளியாக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ.5)

### ஹேமசிறி, பூஜித் விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, ஒக். 24

முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் கட்டாய விடுமுறை வழங்கப்பட்ட பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோரை மீளவும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலை தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை யென இவர்கள் இருவர் மீதும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட அவர்களை, பிணையில் செல்ல கொழும்பு நீதிவான் நீதிமன்றம் அனுமதி வழங்கியது. இதனை எதிர்த்து இடைக்கால உத்தரவு பிறப்பிக்குமாறு சட்டமா அதிபர் சார்பாக கொழும்பு மேல் நீதிமன்றில் திருத்த விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டது.

விண்ணப்பம் உயர் நீதிமன்ற நீதிபதி விகும் கலுஆராய்ச்சி முன்னிலையில் விசாரணைக்கு வந்தபோது, இருவரையும் நேற்று வரையில் விளக்கமறி யலில் வைக்குமாறு உத்தரவிட்டிருந்தார். (ஓ.5)

## அமைதிக்காக முப்படையினர் நாடு முழுவதும் களத்தில்

### சிறப்பு அரசிதழ் வெளியானது

கொழும்பு, ஒக். 24

பொதுமக்கள் மத்தியில் அமைதியை முன்னெடுப்பதற்காக குறிப்பிடப்பட்ட பிரதேசங்களில் முப்படையைச் சேர்ந்த அனைத்து உறுப்பினர்களையும் ஈடுபடுத்துவதற்கான அதிசிறப்பு அரசிதழ் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால், கையொப்பமிட்டுள்ள நிலையில், நேற்றுமுன்தினம்நடைமுறைக்குவரும் வகையில் அரசிதழ் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், கொழும்பு, கம்பகா, களுத்துறை, நுவரெலியா, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மற்றும் புத்தளம்ஆகியநிர்வாகமாவட்டங்கள்மற்றும் அதனுடன் தொடர்புபட்ட தேசியக் கரையோரத்தில் குறிப்பிடப்பட்ட பிரதேசங்களுக்கு உட்பட்டதாக இந்த அரசிதழ் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாககண்டி, மாத்தளை, கிளிநொச்சி, வவுனியா, திருகோணமலை, அநுராதபுரம், பொலன்னறுவை, பதுளை, மொனராகலை, இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய நிர்வாக மாவட்டங்களிலும்பொதுமக்களின்சேவைகளைமுன்னெடுப்பதற்காக வரையறுத்து குறிப்பிடப்பட்ட பிரதேசங்களுக்கு உட்பட்டதாக சம்பந்தப்பட்டஅரசிதழ்அறிவிப்பில்அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ.5)

## மக்களே பீதியடையவேண்டாம் பாதுகாப்பு அச்சுறுத்தல் இல்லை

### அரச தலைவரின் செயலர் அறிவிப்பு

கொழும்பு, ஒக். 24

நாட்டில் தற்போது எந்த விதஅவசரநிலைமையோ, தீவிரவாதிகளின் அச்சுறுத்தலோஇல்லைஎன்று அரசதலைவர்செயலகம் அறிவித்துள்ளது. மக்கள் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்தும் வகையில் பரப்பிவரும்போலியான தகவல்களால் அச்சப்பட வேண்டாம் என்று அரச தலைவரின் செயலர் உதய ஆர்.செனவிரத்ன அறிவித்துள்ளார்.

அரச நிறுவனங்கள், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்கள் மற்றும் பொது மக்களை பாதுகாப்பதற்குத்தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் அரச நிறுவனங்கள் மற்றும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இடங்களின் பாதுகாப்பை உறுதி செய்வது தொடர்பில் 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23ஆம் திகதி சுற்றறிக்கை மற்றும் கடிதங்கள் வெளியிடப்பட்டன. அதனைஅடிப்படையாகக் கொண்டு தற்போது அவசர நிலைமை ஏற்பட்டுள்ளதாக போலி தீவிரவாத அச்சங்களை ஏற்படுத்துவதாகத் தகவல் கிடைத்துள்ளதென அவர் குறிப்பிட்டுள்ளார்.



சரநிலைமைமற்றும்தீவிரவாத ஆபத்துக்கள் ஏற்பட்டுள்ளதாக பரவும் தகவல் தொடர்பில் ஏமாற்றமடையவேண்டாம்என்று பொதுமக்களிடம், அரச தலைவரின்செயலர்கேட்டுள்ளார்.

இவ்வாறு வதந்தி பரப்புவது ஒருவகை தேர்தல் பரப்புரையா என்ற கோணத்தில் தேர்தல் கண்காணிப்பு அமைப்பு ஒன்று ஆராய்ந்து வருகின்றது. எனினும் அவ்வாறு அவ... (ஓ.5)

## சஜித்தை வெல்ல வைக்க மக்கள் தீர்மானித்துள்ளனர்

### மேர்வின் சில்வா தெரிவிப்பு

நாட்டு மக்களின் சுக துக்கங்களை அறிந்து உண்மையாக மக்களுக்குச் சேவையாற்றிய முன்னாள் அரச தலைவர் ரணசிங்க பிரேமதாசவின் மகன் சஜித் பிரேமதாச இம்முறை தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்று மக்கள்தீர்மானித்துவிட்டனர். நான்போலியானகடவுச்சீட்டைப்பாவிக்கவில்லை. என்னுடையசகோதரர்களுக்கு இடமோ வீடோ வழங்கவில்லை. எனினும் ராஜ பக்ச தரப்பினர்இதுபோன்றுபல்வேறுகுற்றச்செயல்களைத் தம்வசம் வைத்துக் கொண்டு நல்லவர்கள் போல் பேசுகின்றனர். பாதாள உலகக் குழு பற்றி நன்றாக அறிந்தவர்களும்ராஜபக்சதரப்பினர்மாத்திரமேயாகும்.இவ்வாறு முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்தார். கொழும்பில் உள்ள அவரது இல்லத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ராஜபக்சாக்கள்அமெரிக்காமீதுகுற்றஞ்சாட்டுகின்றனர். ஆனால்அந்தநாட்டுகுடிமகனாகவும் இருக்கின்றனர். கோத்தபாய ஆட்சிக்கு வந்தால் சீனாபோன்ற நாடுகள் ஏதேனுமொரு பெரிய வேலைத்திட்டத்தை இங்கு முன்னெடுக்கும் போது அதற்கு அமெரிக்கா எதிர்ப்புத் தெரிவித்தால்வேலைத்திட்டம்நிறுத்தப்படவேண்டும். அதே போன்று ஏனைய நாடுகள் குறித்த இரகசிய செயற்பாடுகள் பற்றி அறிந்து கொள்வதற்கும் கோத்தபாய அமெரிக்காவுக்கு கட்டுப்பட வேண்டும். சோபா உடன்படிக்கையில் இதுவரை கையெழுத்திடப்படவில்லை. கோத்தபாய ஆட்சிக்கு வந்தால் அமெரிக்காவின் அழுத்தத்துடன் அந்த உடன்படிக்கையிலும் பலவந்தமாக கையெழுத்திட வேண்டிய நிலைமையே ஏற்படும். 11 ஆண்டுகள் சந்திரிகாவின் ஆட்சி காணப்பட்டது. அதன் பின்னர் 10 ஆண்டுகள் மகிந்த ராஜபக்ச ஆட்சி நிலவியது. சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில் மகிந்த அமைச்சரவையில் இருந்தார். அமைச்சரவையில் இருந்தபோதுவிவசாயிகள்குறித்தும்மீனவர்கள்குறித்தும்ஞாபகம்வரவில்லையா? மிகமுக்கிய அபிவிருத்தி அமைச்சுக்கள் அவர்களுக்கு வேண்டிய விதத்தில் பகிரப்பட்டன. அதிகாரம் கையில் இருந்த போது செய்யாமலிருந்து விட்டு இப்போது பேசுகிறார்கள்.

ஆட்சியிலிருந்த 10 வருடங்களில் தற்போது கூறும் வேலைத்திட்டங்களில் ஆகக் குறைந்தது 40 வீதத்தை யாவதுசெய்திருக்கலாம். இவற்றைப்பற்றிபேசியதால் ஒரு இலட்சத்துக்கும் அதிக வாக்குகளைப் பெற்ற என்னுடைய வேட்புமனு நிராகரிக்கப்பட்டது.

இது போன்று செயற்படாத பன்னாட்டுச் சமூகத்தின் அழுத்தங்களுக்கு உட்படாத தலைவர் தெரிவு செய்யப்பட வேண்டும். இன்று ஊடகங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சுதந்திரம் உண்மையில் மகிழ்ச்சியளிக்கிறது. தகவல்அறியும்உரிமைச்சட்டம்பயனுடையவகையில் பயன்படுத்தப்படுகிறது.

கோத்தபாய நேரடியாக அரசியலில் ஈடுபடாவிட்டாலும் மகிந்தவின் பலத்தைப் பயன்படுத்தி பாதுகாப்புச் செயலராகவும், சுற்றுச்சூழல்பாதுகாப்பின்பிரதானியாகவும் கடமையாற்றியிருக்கிறார். கொழும்பு நகரத்தை அவர் அபிவிருத்திசெய்திருக்கிறார்என்பதை ஏற்றுக்கொண்டாலும் கொழும்புக் குப்பைகள் மீதொட்டுமுல்லையில் கொட்டப்பட்டன. இறுதியில் அதற்கு என்னவாயிற்று என்பது அனைவரும் அறிந்ததே. மகிந்த பத்து வருடங்களின்பின்னர்ஆட்சியைஒப்படைக்கும்போது மீதொட்டு முல்லை தொடர்பில் ஒழுங்குபடுத்தப்பட்ட வேலைத்திட்டங்கள் ஏதேனும் காணப்பட்டதா? எனவே அங்கு ஏற்பட்ட இடரின் பிரதான குற்றவாளி கோத்தபாய அல்லவா? தற்போதுபெருநகர்அபிவிருத்திஅமைச்சர் சம்பிக்க ரணவக்க கொழும்புக் குப்பைகளை அகற்றுவதற்குமுறையானவேலைத்திட்டமொன்றைமுன்னெடுத்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் ஸஹ்ரான் பற்றி பேசுகின்றனர். ஸஹ்ரான் போன்றவர்களுக்கு ஊதியம் வழங்கி அவர்களை உருவாக்கியது யார்?

சுதந்திரக் கட்சி சாதாரண மக்களை பிரதிநிதித்துவப்படுத்திய ஒரு கட்சியாகும். பல சந்தர்ப்பங்களில் வீழ்ந்து மீண்டெழுந்த கட்சியாகும். தற்போது அதைப்பற்றி பேசநான்விரும்பவில்லை. ராஜபக்சாக்கள்பற்றிநான் நன்கு அறிவேன். ஒருபோதும்அவர்களுடன்இணைய மாட்டேன் - என்றார். (ஓ.5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தாவை விவாதத்துக்கு வருமாறு அழைக்கிறார் சஜித்



கொழும்பு, ஒக். 24

தொலைக்காட்சி நேரடி விவாதத்துக்கு தன்னுடன் வருமாறு கோத்தபாய ராஜபக்சவுக்கு பகிரங்க சவால் விடுத்துள்ளார் சஜித் பிரேமதாச.

அவர் தனது கீச்சகப் பக்கத்தில் நேற்று இதனைப் பதிவிட்டுள்ளார்.

'ஒரு வலுவான வேட்பாளர் தங்கள் எதிர் வேட்பாளர்களுடன் நேரடிக் கருத்துப் பரிமாற்றத்தில் ஈடுபட பயப்படத் தேவையில்லை' என்று புதிய ஜனநாயக கூட்டணியின் வேட்பாளர் சஜித் தெரிவித்துள்ளார்.

பகிரங்க விவாதத்தின் மூலம் மக்கள் இரண்டு வேட்பாளர்களின் கொள்கைகள், பார்வைகளையும் ஒப்பிட்டு பார்க்க உதவியாக அமையுமென்றும் சஜித் குறிப்பிட்டார். (ஒ- 5)

## அரச நிறுவனங்களையும் இலாபமீட்டச் செய்வேன்

### கோத்தபாய உறுதி



கொழும்பு, ஒக். 24

சகல அரச நிறுவனங்களையும் இலாபம் ஈட்டும் நிறுவனங்களாக மாற்றி அமைப்பதே தனது எதிர்பார்ப்பு என்று சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கடுவலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றிய போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆட்சிக்கு வந்த பின்னர் ஒழுக்கமுள்ளதும், வெளிப்படையானதும், சுறுசுறுப்புடன் இயங்கக் கூடிய அரசை அமைப்பேன். எனது ஆட்சியில் அனைத்து அரச நிறுவனங்களுக்கும் வேலை செய்யக்கூடிய இயலுமை உள்ள வர்களை மாத்திரம் நியமிப்பேன். அவர்களுக்கு குறிப்பிட்ட இலக்கை நிர்ணயித்து அதனூடாக அவர்களின் தரத்தைப் பரிசோதிப்பேன்.

அரச நிறுவனங்களை இலாபம் ஈட்டும் நிறுவனங்களாக மாற்றி அமைக்க வேண்டும். அந்த நிறுவனங்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்ய முடியாது. முன்பு நகர அபிவிருத்தி அதிகார சபை, கீழ்மட்ட நில மேம்பாட்டு அபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றின் மூலம் பெரிய வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாறான நிறுவனங்களை திறைசேரிக்கு சுமை வழங்காத இலாபம் ஈட்டும் நிறுவ னங்களாக மாற்றியமைப்பேன்.

நாடு முன்னேற வேண்டுமானால், முதலீட்டாளர்களிடம் நம்பிக்கையை வலுப்படுத்த வேண்டும் அதற்கு தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது அவசியம்.

பயங்கரவாதத்தை முடிவுக்குகொண்டுவந்ததைப் போல நாட்டில் இன்று தலைதூக்கி உள்ள தீவிரவாதத்தைஒழிக்கதேவையான அனைத்துப் பாதுகாப்புத் திட்டங்களும் முன்னெடுக்கப்படும். முன்னர் முப்படையினரையும், பொலிஸாரையும் ஈடுபடுத்தி பாதுகாப்பான நாடு ஒன்று உருவாக்கினேன்.

ஆகவே வெளிநாட்டுச் சக்திகளுக்கு அடிமையாகாத, புதிய தாராளமய தன்னார்வ தொண்டு நிறுவ னங்களை நாட்டுக்குள் அனுமதிப்பதால் தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாது.

எம்மை நேசிக்கும், எமக்கு மதிப்பளிக்கும் நாடுகளுக்கு மாத்திரமே அதனை செய்ய முடியும். சவால்களை வெற்றிக் கொள்ளும் ஒரு பிரிவினரே நாம் - என்றார். (ஒ-5)

## சஜித்தின் முதல் எதிரி அவரது வாய்தான்

### மகிந்த கிண்டல்

கொழும்பு, ஒக். 23

அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாசவின் எதிரி அவரது வாய் தான் என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

பெலியத்த பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்களுடன் கை கோர்த்து உயிரை மாய்க்கவும் இன்று சிலர் தயாராக இருப்பதாகக் கூறுகின்றார்கள். மக்களை விட்டு விட்டு தேவை என்றால் உயிரை மாய்த்துக் கொள்ளுங்கள். 24 மணி நேரமும் செயலகத்தை திறந்து வைக்கவுள்ளதாக கூறினார்கள். 24 மணித்தியாலம் செயற்படுவதாகக் கூறி வந்தார்கள். எனினும் தற்போது இரவு 11 மணிக்கு உறங்கி அதிகாலை 4 மணிக்கு எழும்புவார்களாம்.

24 மணி நேரம் பணி செய்தால்முதுகெலும்பில் சக்தி இல்லாமல் போய்விடும் என்று நாங்கள் கூறியமையால் சஜித் தரப்பினர் நேரத்தில் மாற்றம் கொண்டு வந்துள்ளனர். எனக்கு தெரிந்த அளவில் சஜித் தனது வாயாலே பாதிக்கப்படுகின்றார். அவர் பேசுவதே பிரச்சினையாக உள்ளது. அவருக்கு அவரது வாய் தான் முதல் எதிரியாக உள்ளது. அவர் பேசாமல் இருக்கும் வரை நன்மையாக இருக்கும் என்றார். (ஒ-5)

## கோத்தாவின் வாக்குகளை சிதறடிப்பதற்கு முயற்சி

### மகிந்த குற்றச்சாட்டு



சிறிலங்கா சுதந்திரக் கட்சியை பாதுகாக்கும் அமைப்பு என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள அமைப்பின் ஊடாக கோத்தபாய ராஜபக்சவின் வாக்குகளைச் சிதறடிக்க முயற்சித்து வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

மத்துகமை பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை பாதுகாக்கும் அமைப்பு என்ற பெயரில் அமைப்பை உருவாக்கி அதன் ஊடாக மக்களின் வாக்குகள் கோத்தபாய ராஜபக்சவுக்கு கிடைப்பதை தடுக்கும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த காலத்தில் சுதந்திரக் கட்சியின் நீல நிற கொடியை கூட ஏற்ற அனுமதிக்காத ஒருவர் தற்போது இந்த வேலைத்திட்டத்தில் களுத்துறை மாவட்டத்துக்கு தலைமை தாங்கி வருகிறார். இது பிரச்சினைக்குரியது - என்றார். (ஒ.5)

## க.குமார் அணியினர் சீனாவின் கையாள்கள்

### பதிலடி கொடுக்கிறார் சிவசக்தி ஆனந்தன் எம்.பி.

ஏதோ ஒரு வகையில் தீர்வைப் பெற்றுக் கொள்ளும் முயற்சியாக ஜந்து கட்சிகளும் ஒன்றிணைந்தன. யாருடைய சொல்பேச்சையும் கேட்டு அந்த முடிவுக்குப் போகவில்லை. இந்தியாவின் பேச்சைக் கேட்டு எந்த முடிவையும் எடுக்கவில்லை. அவர்கள் சொல்லும் பாசையில் சொல்லவேண்டுமானால். இவர்கள் சீனாவிடம் கேட்டுவிட்டு தான் மலசலம் கழிக்க செல்கின்றார்களா என்ற கேள்வி எங்களாலும் கேட்க முடியும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

5 தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்ததன் பின்னணியில் இந்தியாவே இருப்பதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்ணனியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்திருந்தார். இவ்விடயம் தொடர்பாகவும், எதிர்வரும் தேர்தல் தொடர்பாகவும் வவுனியாவில்நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொது இணக்கப்பாட்டு வேலைத் திட்டமானது தமிழ் மக்கள் கடந்த காலங்களில் பெற்றுக்கொண்ட பட்டறிவை அடிப்படையாக வைத்தே ஆறு கட்சிகள், பல்கலைக் கழக மாணவர்கள், மதத் தலைவர்கள், சிவில் அமைப்புகளுடன் இணைந்து இந்த கூட்டத்தை ஒழுங்கு செய்திருந்தனர். நடைபெற்ற 5 கூட்டங்களிலும் தமிழ்த் தேசிய மக்கள் முண்ணனியினரும் கலந்து கொண்டார்கள். அந்தக் கோரிக்கைகள் கைச்சாத்திடுவதற்கான இறுதிச் சந்தர்பத்திலே இடைக்கால அறிக்கையை நிராகரிக்கவேண்டும் என்று அவர்கள் தெரிவித்து விலகினார்கள். இடைக்கால அறிக்கை என்பது செயலிழந்த விடயம்.

13 அம்சக் கோரிக்கைகளில் அவர்களது கட்சி முன்வைத்த பல்வேறு விடயங்களும் உள்வாங்கப்பட்டிருக்கிறது. கோரிக்கைகளை தாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று கோத்தபாய நேரடியாக தெரிவித்துள்ளதுடன், எந்த ஒரு உடன்படிக்கைகளுக்கும் இணங்கி வரமாட்டோம் என்று சஜித் பிரேமதாசவும் கூறியிருக்கிறார். வடகிழக்கு இணைப்பை ஏற்கமாட்டோம் என்று மக்கள் விடுதலை முண்ணனியும் கூறியிருக்கிறது.

தமிழ் மக்கள் சஜித்துக்கு வாக்களிக்கும் நிலமை இருக்குமானால் நிச்சயமாக நாம் அவருடன் தான் பேச்சை முன்னெடுக்கவேண்டும். இந்த 13கோரிக்கைகளை பரிசீலித்து தீர்வை வழங்க வேண்டிய பொறுப்பு ஏனைய வேட்பாளர்களை விட அவருக்கு தான் மிக அதிகமாக இருக்கிறது. அவருக்கு வாக்குகள் வேண்டும் என்றால் எமது கோரிக்கையை ஏற்க வேண்டும். இதேவேளை எமக்குத் தேவையான விடயங்களை நிராகரித்து விட்டு தமிழ்மக்களின் வாக்குகளை மாத்திரம் சஜித் பிரேமதாச கோருவதில் எந்தவித நியாயமும் இல்லை.

கடந்த தேர்தல்களில் நிபந்தனைகளற்ற ஆதரவை கூட்டமைப்பு வழங்கியிருந்தமையால் தமிழ் மக்கள் இன்று நடுத்தெருவில் விடப்பட்டுள்ளனர்.

தயாரிக்கப்பட்ட கோரிக்கைகள் பரிசீலிக்கப்படுவதற்கு முன்னர் ஒரு தரப்புக்கு ஆதரவு வழங்கும் செயற்பாட்டை கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறு தன்னிச்சையாக செயற்பட்டால் இந்த பொது இணக்கப்பாடு என்பது செயலிழக்கும் நிலமையே ஏற்படும். கூட்டமைப்பு பொறுப்புடன் செயல்படவேண்டும்.

எங்களை சந்திக்க விரும்புவர்கள் இந்தக் கோரிக்கைகள் தொடர்பாக பேசலாம். பேச விரும்பாதவர்களோடு பேசவேண்டிய அவசியம் இல்லை. அவர்களது தேர்தல் அறிக்கைகளில் எங்களது பிரச்சினைகளுக்கு எவ்வளவு முக்கியத்துவம் வழங்கியுள்ளார்கள் என்பதைப் பார்த்து, இந்த 5 கட்சிகளும் மீண்டும் கலந்துரையாடி எடுக்கவேண்டிய நிலைப்பாடு தொடர்பாக அறிவிப்போம்.

சிவாஜிலிங்கம் வேட்பாளராக நிற்பது தொடர்பாக அவரது கட்சியான ரெலோவுக்குள்ளும் பேசப்படவில்லை, ஏனைய கட்சிகளுடனும் பேசப்படவில்லை. அவருக்கு ஆதரவு தெரிவிப்பதா இல்லையா என்று 5 கட்சிகளும் இணைந்தே தீர்மானிக்கும் - என்றார். (ஒ.5.110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌத்த மேம்பாட்டுக்கு நிதி அள்ளிக் கொடுப்பேன்

## சஜித் உறுதியளிப்பு



கொழும்பு, ஒக். 24

வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத வகையில் பௌத்த சாசன மேம்பாட்டுக்கு நான் நிதி ஒதுக்கீடு செய்யவுள்ளேன். இவ்வாறு அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

குருநாகல் கட்டுக்கம்பளையில் நடந்த பொதுக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: பௌத்தசாசன அமைச்சு, மத்திய கலாசார நிதியம், கலாசார அமைச்சு, தலைமை அமைச்சரின் அலுவலகம் என்பவற்றின் ஊடாக நான் இதற்காக பெரும் நிதி ஒதுக்கீடு செய்வேன். நாடு முழுவதும் ஆயிரத்து 125 விகாரைகள் கட்டப்பட்டு, விகாரை அறநெறிப் பாடசாலை, விகாரை மண்டபங்கள் அமைக்கப்படும்.

நாட்டின் தேசிய பாதுகாப்பைப் பலப்படுத்த நான் புலனாய்வுத் துறையை மேம்படுத்துவேன். அதில் அரசியல் கலக்க இடமளிக்க மாட்டேன். தேசிய பாதுகாப்பை நான் உறுதிப்படுவேன், என்றார். (ஒ,5)

## மேர்வினுடன் சஜித்தை ஒப்பிட்ட மகிந்த

கொழும்பு, ஒக். 24

அரச தலைவரின் புதல்வன் என்பதால் சஜித்துக்குப் பட்டம் வழங்கப்பட்டதாகவும் அது மேர்வின் சில்வாவுக்கு வழங்கப்பட்ட பட்டத்தை போன்றது என்று மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச மற்றும் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச ஆகியோருக்கும் அம்பாந்தோட்டை மாவட்ட தொழிற்சங்கப் பிரதிநிதிகள், சட்டத்தரணிகள், மருத்துவர்கள் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. இங்கு உரையாற்றிய மகிந்த ராஜபக்ச மருத்துவ பீடத்துக்குச் செல்ல சந்திரிகா அம்மையாருக்கு ஒரேயொரு புள்ளி மாத்திரமே குறைவடைந்தது. அப்போது மருத்துவராகுவதை விட அரச தலைவராகுவது இலகுவானது என்று தெரிவிக்கப்பட்ட நிலையில், இன்று எட்டாம் வகுப்பில் கூட சித்தியடையாத ஒருவர் நாட்டை நிர்வகிக்க அதிகாரத்தைக் கோருகின்றார்- என்றார். (ஒ-5)

## எரிவாயுவுக்குத் தட்டுப்பாடு

கொழும்பு, ஒக். 24

சவுதி எண்ணெய்க் கப்பல்கள்மீதுட்ரோன்தாக்குதல் மற்றும் எரிவாயு விலை குறைந்து வருவதால் நாடு முழுவதும் சமை யல் எரிவாயு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அதிகாரி தெரிவித்துள்ளார். உள்ளூர்ச் சந்தையில் எரிவாயுப் பற்றாக்குறை குறைந்தது இன்னும் ஒரு வாரத்துக்குத் தொடரும் 'பெரும்பாலான திரவ வாயு சவுதி அரேபியாவிலிருந்து வருகிறது, சவுதி எண்ணெய்க் கப்பல்கள் மீது ட்ரோன் தாக்குதலுக்குப் பின்னர் இலங்கைக்கு ஏற்றுமதி தாமதமானது. ஒக்ரோபர் 4ஆம் திகதி நள்ளிரவில் 12.5 கிலோ சிலிண்டர் உள்நாட்டு எரிவாயு விலை குறைக்க ப்பட்டது. விலைக் குறைப்பு மக்கள் தங்கள் அன்றாட வீட்டு நடவடிக்கைகளுக்கு அதிக எரிவாயுவைப் பயன்படுத்துவதற்கு வழிவகுத்தது' என்றும் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அதிகாரி கூறினார். (ஒ-5)

## அடுத்த ஆண்டுக்கான குறைநிரப்பு தீர்மானம் நாடாளுமன்றில் சமர்ப்பிப்பு

கொழும்பு, ஒக். 24

2020ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலத்துக்கான இடைக்கால குறைநிரப்பு தீர்மானம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நிதியமைச்சர் மங்கள சமரவீரவால் நேற்றுப் புதன்கிழமை காலை இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அரச செலவீனங்களுக்காக ஆயிரத்து 474 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யும் இடைக்கால குறைநிரப்புத் தீர்மானமே இவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நவம்பர் மாதம் 16ஆம் திகதி அரச தலைவர் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் இடைக்கால குறைநிரப்புத் தீர்மானத்தை சமர்ப்பிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது.

2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் ஏப்ரல் 30 ஆம் திகதி வரையிலான 4 மாத காலத்துக்கு அரச பணிகளைத் தொடர்வதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகள் அடங்கிய இடைக்கால குறைநிரப்புத் தீர்மானமே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (ஒ,5)

# முன்பள்ளி ஆசிரியர்களை அரச சேவைக்குள் உள்வாங்கல்

## சஜித்தின் அறிவிப்பை வரவேற்கிறார் சிவமோன் எம்.பி.

மன்னார், ஒக்.24

முன்பள்ளி ஆசிரியர்களை அரச சேவையில் உள்வாங்கல் மற்றும் முன்பள்ளிகளின் சேவை யை முழுமையான இலவச சேவையாக வழங்கல் உள்ளிட்ட அறிவிப்புக்களை சஜித் பிரேமதாச வெளியிட்டுள்ளமை வரவேற்கத்தக்கது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது. முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெற்ற அறநெறிப்பாடசாலை திறப்பு விழா நிகழ்வு ஒன்றில், சஜித் பிரேமதாசவுக்கு மக்களின் சார்பாக இந்த கோரிக்கை என்னால் முன்வை க்கப்பட்டது. அந்த விடயத்தை சஜித் கூறியிருப்பது வரவேற்கத்தக்கது

கொழும்பு மற்றும் சிங்கள நகரத்து முன்பள்ளிகள் அதிசொகுசு முன்பள்ளிகளாக உள்ளன. ஆனால் எமது தமிழ் பிரதேச ங்களில் அப்படியானவை இல்லை.

மிகவும் பின்தங்கிய நிலையிலேயே முன் பள்ளிகள் இயங்குகின்றன.

மாகான சபை வழங்கும் வெறும் 4 ஆயிரம் ரூபா கொடுப்பனவுடன், முன்பள்ளி ஆசிரியர்கள் சேவை செய்து வருகிறார்கள். அதன்காரனமாக அவர்களால் முழுமை யான சேவையை வழங்க முடியாதவர்களாக இருக்கின்றனர். எனவே அவர்களை அரச சேவையில் உள்வாங்கி அவர்களுக்கான அடிப்படைவேதனமாகக் குறைந்தது 24 ஆயிரம் ரூபாவை வழங்குவார்களாக இருந்தால், அந்த ஆசிரியர்களால் முழுமையான சேவையை வழங்க முடியும்.



முல்லைத்தீவில் சஜித் பிரேமதாச குறிப்பிட்டது போல் சிறுவர்களின் மூளை வளர்ச்சி மு ன்பள்ளி யிலேயே தொடங்கிவிடும். எனவே இந்த விடயங்களில் மிகவும் கவனம் எடுக்க வேண்டி தேவை இருக்கின்றது. மேலும் சிங்கள கிராமப்புற முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுனகளைப் பௌத்த விவகார அமைச்சின் ஊடாக பௌத்த பிக்குகள் வழங்கி வருகின்றனர் எனத் தெரியவருகிறது

தமிழ் பிரதேசங்களில் அப்படி எங்கும் வழங்கப்படுவதில்லை.

எனவே முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மட்டும் அல்ல சைவ அறநெறி ஆசிரியர்களும் இவ்விடயங்களில் உள்வாங்கப்பட்டு அவர்களுக்கும் நிரந்தர அரச வேலையை வழங்க வேண்டிய தேவை இருக்கிறது. எனவே முன்பள்ளி ஆசிரியர்களுடன், அறநெறி ஆசிரியர்களுக்கும் நிரந்தர அரச நியமனம் வழங்க வேண்டும் என்றார். (க-213)

## துப்பாக்கியுடன் ஓடிய மேயருக்குப் பிணை

கொழும்பு, ஒக். 24

அம்பாந்தோட்டை முன்னாள் நகர மேயர் எராஜ் பெர்ணான்டோ பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

எராஜ் பெர்ணான்டோவுக்கு 5 ஆண்டுகள் சிறை தண்டனை வழங்கி அம்பாந்தோட்டை மேல் நீதிமன்றம் ஓகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி உத்தரவிட்டது. தீர்ப்பை எதிர்த்து எராஜ் பெர்ணான்டோ மேன்முறையீடு செய்திருந்தார். மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்றுப் புதன்கிழமை பிணை வழங்கி உத்தரவிட்டுள்ளது.

2014ஆம் ஆண்டு அம்பாந்தோட்டைக்கு சென்ற ஐக்கிய தேசியக் கட்சியினரை நோக்கி துப்பாக்கியுடன் ஓடியிருந்தார். பின்னர் அது விளையாட்டுத் துப்பாக்கி என்று, எராஜ் பெர்ணான்டோ கூறியிருந்தார். (ஒ,5)

# ஆணைக்குழுவில் முன்னிலையானார் ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, ஒக். 24

அரச நிறுவனங்களில் இடம்பெற்ற ஊழல், மோசடிகள் குறித்து ஆராயும் அரச தலைவர் ஆணைக்குழுவில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்னிலையாகி வாக்கு மூலம் வழங்கினார். அவர் சுமார் ஒருமணித்தியாலம் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

மத்தள வானூர்தி நிலையத்தில் நெல்களஞ்சியப்படுத்தப்பட்டமை தொடர்பாக முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்காக [illegible] தலைமை அமைச்சர் நேற்றுப் புதன்கிழமை ஆணைக்குழுவில் முன்னிலையாகிருந்தார். மத்தள வானூர்தி நிலையத்தில் நெல் களஞ்சியப்படுத்தப்பட்டதால், அங்குள்ள சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டதா என்பது குறித்து விசாரணைகள் முன்னெ டுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த 2015ஆம் ஆண்டு முதல் 2018ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அரச நிறுவனங்களில் இடம்பெற்ற ஊழல், மோசடிகள் தொடர்பில் அரச தலைவர் ஆணைக்குழு தொடர்ச்சியாக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது. (ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பின் பின்னணியில் ஏதோவொரு வெளிநாடு

## கூறுகிறார் அனந்தி

கிளிநொச்சி, ஒக். 24
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சுயமாகச் சிந்திப்பவர்கள் இல்லை. இவர்கள் ஏதோவொரு நாட்டின் வேணவாக்கு அமைவாக நடந்து கொள்பவர்களாக இருக்கின்றனர்.

ஏதோவொரு நாட்டையோ அல்லது ஏதோ ஒருவரைச் சார்ந்து முடிவெடுப்பவர்களாகவே இருக்கின்றார்கள்.
கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் நடத்தி ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
போரை நடத்திய பொன்சேகாவுக்கு கூட்டமைப்பு ஆதரவு வழங்கியது. தமிழ் மக்கள் சார்பில் பொதுவேட்பாளரைத்தான் அவர்கள் நிறுத்தியிருக்கவேண்டும். சம்பந்தன் அதனைச் செய்வதற்கு தவறியுள்ளார். இறுதிப் போரில் பெரிய இனஅழிப்பை மேற்கொண்டவருக்கு ஆதரவு தெரிவித்ததுடன். எமது உரிமைக்காகக் குரல் கொடுக்க வேண்டிய சந்தர்ப்பத்தை இழந்துவிட்டோம்.
புலிகளை அழித்தமைக்காக சம்பந்தன் நாடாளுமன்றத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்திருந்தார். விடுதலைப் புலிகளை அழிக்க வேண்டும் என்று கூட்டமைப்பும் விரும்பி யிருந்தது. விடுதலைப் போராட்டம் அழியக் கூடாது என்று நினைத்திருந்தால் இறுதி நேரத்தில் அப்பாவி மக்கள் கொல்லப்படுகின்றார்கள் போரை நிறுத்துமாறு இதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கோரியிருக்கலாம். இந்தக் கோரிக்கை பன்னாட்டுச் சமூகத்திடமிருந்து வந்தபோது சம்பந்தன் தொலைபேசியை நிறுத்திவிட்டு இருந்துவிட்டார்.
இலங்கை அரசினது செயற்பாடும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடும் தமிழ் மக்களுக்கு குறிப்பாக போரால் பாதிக்கப்பட்ட எமக்கு விரோதமானதாகவே அமைந்துள்ளது. இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நிபந்தனையற்ற ஆதரவை இறுதி நேரத்தில் வழங்குவார்கள். நிபந்தனைகளை ஏற்காவிட்டாலும் அவர்கள் வழங்கிய சில வாக்குறுதிகளுக்காக நிபந்தனையின்றி நாம் ஆதரவு வழங்கினோம் என்று கூட்ட மைப்பினர் இறுதி நேரத்தில் தெரிவிப்பார்கள். இதுவே கடந்த காலங்களிலும் இடம்பெற்றது - என்றார். (ஒ-5)

# இனக்கலவரத்தை ஏற்படுத்திய பிரேமதாச யுகம் வேண்டுமா?

## மகிந்த கேள்வி

கொழும்பு, ஒக். 24
உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் குறித்து அனைத்துத் தகவலும் கைவசம் இருந்தும் முஸ்லிம் வாக்குகளைப் பெறும் நோக்கில் அரசு எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெ டுக்கவில்லை. பயங்கரவாதிகளின் செயற்பாடுகள் குறித்துப் பாரம்பரிய சாதாரண இலங்கை வாழ் முஸ்லிம் மக்கள் வழங்கிய தகவல்களை ஏன் கருத்தில் கொள்ளவில்லை. தெற்கில் இனக்கலவரத்தை ஏற்படுத்திய பிரேமதாச யுகம் மீண்டும் தலைதூக்க இடமளிக்க முடியாது. இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார். எம்பிலிப்பிட்டிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தெற்கில் இனக்கலவரத்தை ஏற்படுத்திய முன்னாள் அரச தலைவர் ரணசிங்க பிரேமதாசவின் யுகம் வேண்டுமா என்ற கேள்விக்குப் பெரும்பாலான மக்கள் வேண்டாம் என்ற பதிலையே வழங்குகின்றார்கள். ஆனால் புதிய ஜனநாயக முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாச தனது தந்தையின் நிர்வாகத்தையே முன்னெடுத்து செல்வதாகக் குறிப்பிடுகின்றார்.
பயங்கரவாதிகள் தொடர்பில் சாதாரண பாரம்பரிய முஸ்லிம் மக்கள் அரசுக்கும் பாதுகாப்புத் தரப்பினருக்கும் வழங்கிய தகவல்கள் எதுவும் கவனத்திற் கொள்ளவில்லை. கைது செய்யப்பட்டவர்கள் முஸ்லிம் அமைச்சர்களினதும் ஆளுநர்களினதும் பணிப்புரைக்காக விடுவிக்கப்பட்டார்கள்.
தேர்தல் மேடைகளில் கொள்கையற்ற அரசியல் பரப்புரைகளை முன்னெ டுப்பவரை நாட்டு மக்கள் ஒருபோதும் அரச தலைவராக்க மாட்டார்கள். தேசிய அரசில் இடம்பெற்றதாகக் குறிப்பிடப்படும் மோசடிகள் தொடர்பில் ஆராயும் அரச தலைவர் விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் ஆளும் தரப்பின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாசவின் பெயர் குறிப்பி டப்பட்டுள்ளது. நாட்டு மக்கள் உண்மையை அறிந்து கொள்ள அரச தலைவர் ஆணைக்குழுவின் அறிக்கையை தேர்தலுக்கு முன்னர் பகிரங்கப்படுத்த வேண்டும். பொருளாதாரமும், தேசிய உற்பத்திகளும் கடந்த காலத்தை விட தற்போது தொடர்ந்து வீழ்ச்சி நிலையையே அடைந்துள்ளன. மக்களின் வாழ்க்கைச் செலவுகள் அனைத்தும் அதிகரித்த வண்ணமே காணப்படுகின்றன. ஆனால் ஆளும் தரப்பின் அரச தலைவர் வேட்பாளர் தனக்கும் அரசுக்கும் இடையில் எவ்விதத் தொடர்பும் இல்லாத வகையிலே போலியான தேர்தல் வாக்குறுதிகளையே வழங்குகின்றார். போலியான வாக்குறுதிகளுக்கு நாட்டு மக்கள் இம்முறையும் ஏமாற மாட்டார்கள்.
அரசின் முறையற்ற செயற்பாடுகள் அனைத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும், மக்கள் விடுதலை முன்னணி யினரும் தொடர்ந்து துணைபோயுள்ளார்கள். தற்போது மக்கள் விடுதலை முன்னணியினர் அரசிலிருந்து விலகி அரசைத் தூற்றுவதால் எவ்வித மாற்றமும் இனி ஏற்படாது. முறையற்ற நிர்வாகத்தை முன்னெடுத்த அரசுக்கு நாட்டு மக்கள் தகுந்த பாடத்தைக் கற்பிப்பார்கள். ஐக்கிய தேசிய கட்சிக்கு தகுந்த பாடத்தை நாட்டு மக்கள் ஜனநாயக முறையில் கற்பிப்பார்கள். பொது மக்கள் முன்ன ணியின் அனைத்து தரப்பின ரையும் ஒருமுகப்படுத்தி ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவோம் - என்றார். (ஒ-5)

## பரிசளிப்பு

ஆனைக்கோட்டை உயரப்புலம் மெதடிஸ் மிசன் வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரியின் முதன்மை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
வித்தியாலய முதல்வர் கா.ரவீந்திரராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தி னராக யாழ் வலயக்கல்வித்திட்டமிடல்பிரதிக் கல்வி பணிப்பாளர் திருஞானசம்பந்தபிள்ளை ஞானசுந்தரன் சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி கல்வி வலய உதவிக் கல்வி பணிப்பாளர் இ.ஜெயகரன், மதிப்புறு விருந்தினராகயாழ்பிரதேச செயலக சமுர்த்தி அலுவலரும் சிற்றி லயன்ஸ் கழக யாழ்ப்பாண கிளையின் தலைவருமான ப.ஐங்கரன் ஆகியோரும்கலந்துகொள்ளவுள்ளனர். (ம-422)

# கோத்தாவுக்கு எதிரான சூழ்ச்சி தோல்வியாம்

கொழும்பு, ஒக். 24
கோத்தபாய ராஜபக்சவை அரச தலைவர் தேர்தலில் போட்டியிட முடியாமல் தடுக்கின்ற முயற்சி தோல்வியில் முடிந்துள்ளதாக, பொதுமக்கள் முன்னணியின் தவிசாளர் பேராசிரியர் ஜிஎல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.
அமெரிக்காவின் கலிபோர்னியா மாவட்ட நீதிமன்றத்தில், கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராக, அகிம்சா விக்ரமதுங்க தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது குறித்து கருத்து வெளியிட்ட போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.
‘இதே போன்று சிலர் இங்கும், கோத்தபாய ராஜபக்சவின் குடியுரிமையை கேள்விக்குட்படுத்தி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர். எனினும், நீதிமன்றம் அந்த மனுவை தள்ளுபடி செய்து விட்டது. கோத்தபாய ராஜபக்சவிடம் சவால் விடுபவர்கள் அரசியல் ரீதியாக அவருடன் சவால் விட வேண்டும்’ - என்றார். (ஒ-5)

# கண்ணீர் அஞ்சலி ஒட்டியவர் மின்சாரம் தாக்கி உயிரிழப்பு

கொழும்பு, ஒக். 24
இரத்தினபுரி பலங்கொடைப் பகுதியில் கண்ணீர் அஞ்சலி பதாகையை காட்சிபடுத்த முற்பட்ட நபர் மின் தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். பலங்கொடை நகரத்தில் மக்கள் வங்கிக்கு அருகில் நேற்றுமுன்தினம் மாலை இவர் மின் தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்துள்ளதாக பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. உயிரிழந்த நபர் கண்ணீர் அஞ்சலி பதாகை ஒன்றை காட்சிப் படுத்த முற்பட்டுள்ளார். பதாகை அதிபலம் வாய்ந்த மின்கம்பியில் சிக்குண்டுள்ளது. பின்னர் மின்தாக்குதலுக்குள்ளான நபர் பலங்கொடை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸாரின் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. (ஒ-5)

# வாசிப்பைத் தூண்டும் விதமாக சொல் கோர்த்தல் போட்டிகள்



கொடிகாமம், ஒக். 24
சாவகச்சேரிப் பிரதேச சபையின் மிருசுவில் பொது நூலகத்தில் வாசிப்பைத் தூண்டும் முகமாக நேற்று சொல் கோர்த்தல் போட்டி நடாத்தப்பட்டது.
மிருசுவில்பிரதேசத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்கும் தரம் 2 மாணவர்களுக்கே மேற்படி சொல் கோர்த்தல் போட்டிகள் இடம்பெற்றன. தொடர்ந்து பிற்பகல் 3 மணிக்கு நூலக வாசகர்களுக்கான வாசிப்பும் விழிப்புணர்வும் தொடர்பான கருத்தரங்கு நடைபெற்றது. (ம-159)

# கோத்தபாய ராஜபக்சவுக்கு குணப்படுத்த முடியாத நோய்

## ஹிருணிகா கிண்டல்

கொழும்பு, ஒக். 24
பொதுமக்கள் முன்னணிக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச குணப்படுத்த முடியாத நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிக்கா பிரேமசந்திர தெரிவித்துள்ளார். இதன் காரணமாக இலங்கை மருத்துவமனைகளில் சிகிச்சை பெறாமல் சிங்கப்பூர் மருத்துவ மனைகளில் சிகிச்சை பெறுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.
தற்போது 70 வயதான முதியவராக கோத்தபாய உள்ளார். இதன் காரணமாக நாட்டை ஆட்சி செய்வதற்கான பொறுப்பை வயது குறைந்த சஜித் பிரேமதாசவிடமே ஒப்படைக்க வேண்டும் என்று ஹிருணிக்கா மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 11 தமிழ் இளைஞர்கள் கடத்தல்

# சந்தேக நபர்களான இரண்டு கடற்படை அதிகாரிகள் கோத்தாவுக்காகப் பரப்புரை

### கொழும்பு ஊடகம் தகவல்

கொழும்பு, ஒக். 24

கொழும்பில் 11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்ட விவகாரத்தில் முக்கிய சந்தேக நபர்களான இரு கடற்படை அதிகாரிகள் கிழக்கு மாகாணத்தில் பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவுக்கு ஆதரவாக தேர்தல் பரப்புரைகளில் ஈடுபட்டுள்ளனர் என நம்பகரமாக தெரியவருவதாக கொழும்பு டெலிகிராவ் தெரிவித்துள்ளது.

கொழும்பில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்ட விவகாரத்தில் குற்றம்சாட்டப்பட்டுள்ள சுமித் ரணசிங்க மற்றும் டீகேபி தசநாயக்க ஆகிய இரு அதிகாரிகளே தேர்தல்ப் பரப்புரையில் ஈடுபட்டுள்ளனர் என கொழும்பு டெலிகிராவ் தெரிவித்துள்ளது.

கொழும்பில் தற்போது பணியில் ஈடுபட்டுள்ள இருவரும் கிழக்கு மாகாணத்தில் தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக அங்கு தமக்கு பணியுள்ளதாக தெரிவித்து சென்றுள்ளனர்.

தசநாயக்கவும் ரணசிங்கவும் கிழக்கு மாகாணத்தை நன்கு அறிந்தவர்கள் அவர்கள் அங்கு பணியாற்றியுள்ளனர் திருகோணமலையை நன்கு அறிந்தவர்கள் என நம்பகத்தன்மை வாய்ந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன என கொழும்பு டெலிகிராவ் செய்தி வெளியிட்டுள்ளது. வீடுவீடாக பரப்புரையில் ஈடுபட்டுள்ள எங்கள் அணியினருடன் இணைந்து அவர்கள் பணியாற்றுகின்றனர் எனவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன என கொழும்பு டெலிகிராவ் தெரிவித்துள்ளது.

எனினும் இருவரினதும் இந்த நடவடிக்கை குறித்து இலங்கைக் கடற்படைத் தலைமைக்கு தெரிந்துள்ளது என கொழும்பு டெலிகிராவ் தெரிவித்துள்ளது. இலங்கையின் தேர்தல் சட்டங்களின் கீழ் முப்படையில் உள்ளவர்கள் தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளில் ஈடுபடுவது தடை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம)

## கிளைமத்தோன் நிகழ்வு இன்று சகலரையும் பங்கேற்க அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 24

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள இளையோர் அணிதிரளும் 'கிளைமத்தோன் யாழ்ப்பாணம் 2019' என்ற கலந்துரையாடல் நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது. இது பற்றி விழிப்புணர்வு நிகழ்வு இன்று தொடக்கம் 3 நாள்களுக்கு நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண மத்திய கல்லூரிக்கு அண்மையிலுள்ள தந்தை செல்வா கலையரங்குக்கு உங்கள் பிள்ளைகளை அழைத்து வாருங்கள். எம் இளையோரின் அரும்பணிக்கு அணி சேருங்கள் என்று ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இந்தவருடம் யாழ்ப்பாணத்தில் கிளைமத்தோன் நிகழ்வை முன்னெடுப்பதற்கான ஆரம்பக்கட்ட முயற்சிகளை வடக்கு கிழக்குக்கான சேதன இயக்கம் மேற்கொண்டது.

யாழ்ப்பாண மாநகர சபை, யாழ்ப்பாண வர்த்தகத் தொழிற்துறை மன்றம், வடக்கு மாகாணத் தகவல் தொழில்நுட்பச் சம்மேளனம், யாழ்ப்பாணப் பயில்களம் உள்ளிட்ட அமைப்புக்கள் முதன்மைப் பங்காளர்களாக இணைந்துள்ளன.

பாடசாலை மட்டத்தில் காலநிலை மாற்றம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தச் சிறகுகள் அமையம் கட்டுரை, சித்திரம் மற்றும் விவாதப் போட்டிகளை ஒழுங்கு செய்தார்கள்.

இந்த நிகழ்வில் இளம் தொழில் முயற்சி யாளர்கள், புத்தாக்குநர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலரும் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளக்கூடிய புதுமையான கருத்திட்டங்களை நிபுணர் குழுவிடம் முன்வைக்கவுள்ளார்கள். அவற்றில் தெரிவு செய்யப்படும் கருத்திட்டங்களுக்குப் பெறுமதியான பரிசுகள் வழங்கப்படவுள்ளன. 2020 ஆம் ஆண்டில் பிரான்சில் நடைபெறும் உலகளாவிய போட்டிக்கு விண்ணப்பிப்பதற்கான சந்தர்ப்பமும் கிடைக்கும். 25 ஆம் திகதி மாலை 3 மணிமுதல் 6 மணிவரை நடைபெறும் இறுதி நிகழ்வில் போட்டிகளில் பங்குபற்றிய பாடசாலை மாணவர்கள் சகலருக்கும் சான்றிதழ்களும் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுகளும் வழங்கப்படும். விவாதம், ஆற்றுகை போன்ற அம்சங்களும் இணைக்கப்பட்டுள்ளன. சித்திர, மற்றும் புகைப்படக் கண்காட்சி மூன்று தினங்களும் முற்கல் 9 மணிமுதல் 3 மணி வரை நடைபெறும். இதில் பங்குபெற்றும் பாடசாலை மாணவர்கள் தனியாக ஒழுங்குசெய்யப்பட்டுள்ள சித்திரக்கூடத்தில் படங்களை உடன் வரைந்து சமர்ப்பிக்கவும், காலநிலை மாற்றம் தொடர்பான வேறு போட்டிகளிற் பங்கேற்கவும் முடியும்.

பூமிப்பந்தை காலநிலை மாற்றத்தின் பேரழிவுகளிலிருந்து காக்கும் இளையோரின் பல்வேறு செயற்பாடுகளை வெளிக்கொணரும் முயற்சியாக இது அமையவுள்ளது என்று நிகழ்வு ஒழுங்கமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(த-222)

## மானிய விதை உருளைக்கிழக்கு பெறும் விவசாயிகளின் பெயர்ப் பட்டியல் காட்சிக்கு

அச்சுவேலி, ஒக். 24

மானிய உதவியுடன் விதைஉருளைக்கிழங்கு பெறுவதற்கு விண்ணப்பித்த விவசாயிகளின் பெயர், விவரப் பட்டியல் பிரதேசச் செயலகம் மற்றும் கமநல சேவை நிலையங்களில் பொதுமக்களின் பார்வைக்குக் காட்சிப்படுத்தப்படும் என்று விதை உருளைக் கிழங்கு விநியோகத்துக்குப் பொறுப்பான நடுவண் அரசு விவசாயத் திணைக்களம் அறிவித்துள்ளது.

உருளைக்கிழங்குப் பயிர்ச் செய்கையில் கடந்த காலங்களில் ஈடுபட்டு, தற்போது தெரிவுப்பட்டியலில் இடம்பெறாத விவசாயிகள் மேன்முறையீடு செய்வதற்கும், மானிய விலைக்கு விதை உருளைக்கிழங்கைப் பெற்று உரிய முறையில் பயிர்ச் செய்கையில் ஈடுபடாமல் முறைகேடாக நடந்து கொண்டவர்கள் தொடர்பான முறையீடுகளைச் செய்வதற்கும் கால அவகாசம் வழங்கி, அதன் பின்னரே இறுதிப் பட்டியல் உறுதிப்படுத்தப்படவுள்ளது.

கடந்த காலங்களை விட இந்த வருடம் விதை உருளைக்கிழங்கு கோரி விண்ணப்பித்த விவசாயிகளின் எண்ணிக்கை மடங்குக் கணக்கில் அதிகரித்துள்ளது. அதனால் போலி விவசாயிகளை இனங்கண்டு விநியோகப் பட்டியலில் இருந்து நீக்கம் செய்வதற்கும், உண்மையான விவசாயிகளுக்கு விநியோகத்தை உறுதிப்படுத்துவதற்கும் வசதியாகவே இந்த வருடம் உருளைக்கிழங்கு விநியோகம் தொடர்பான பட்டியல் பிரதேச செயலகம் மற்றும் கமநல சேவைநிலையங்களில் காட்சிப்ப டுத்தப்ப டவிருப்பதாக நடுவன் அரசு விவசாயத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாண மாவட்டத்தின் காலபோக உருளைக்கிழங்குப் பயிர்ச் செய்கைக்குப் பாதிப்பு இல்லாத வகையில் நவம்பர் மாதம் முதலாம் வாரத்தில் விதை உருளைக்கிழங்கை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. விதை உருளைக் கிழங்கின் விலை கடந்த வருடங்களை விடவும் இந்த வருடம் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று விவசாயத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(க-11)

## கோத்தாவுக்கு எதிரான சூழ்ச்சி தோல்வியாம்

கொழும்பு, ஒக். 24

கோத்தபாய ராஜபக்சவை அரசதலைவர்தேர்தலில் போட்டியிட முடியாமல் தடுக்கின்ற முயற்சி தோல்வியில்முடிந்துள்ளதாக, பொதுமக்கள் முன்னணி யின் தவிசாளர் பேராசிரியர் ஜிஎல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாவட்ட நீதி மன்றத்தில், கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராக, அகிம்சா விக்ரமதுங்க தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடிசெய்யப்பட்டது குறித்து கருத்து வெளியிட்ட போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

'இதே போன்று சிலர் இங்கும், கோத்தபாய ராஜபக்சவின் குடியுரிமையை கேள்விக்குட்படுத்திமேன்முறையீட்டு நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர். எனினும், நீதி மன்றம் அந்த மனுவை தள்ளுபடிசெய்துவிட்டது. என்றார்.

(ஒ.5)

# பாதுகாப்புச் சபையின் ஓய்வூதியத் திட்டத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் முன்னிலை

யாழ்ப்பாணம், ஒக். 24

இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் ஓய்வூதியத் திட்டத்தில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் முன்னிலையில் உள்ளனன.

இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையால் முதுமைக் காலத்தில் ஏற்படும் வறுமையைத் தணிக்கும் நோக்கில் அரச ஓய்வூதியத்துக்கு உரித்தற்ற நபர்களுக்கு ஓய்வூதியத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இந்தத் திட்டத்தின் ஒருபடி நிலை வளர்ச்சியாக மாணவப் பருவத்திலேயே பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் முதுமைப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையிலும் மற்றும் மாணவர்களுக்கு கல்விசார்ந்த ஊக்குவிப்பை வழங்கும் வகையிலும், குழந்தைகளுக்கான பாதுகாப்புதிட்டம் ஒன்றை இந்த வருடம் பன்னாட்டு சிறுவர் முதியோர் தினத்தன்று அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்தி வருகின்றது.



ஓய்வூதியத் திட்ட நடைமுறையில் 2017 ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாவட்டம் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. இதற்கான தேசிய விருது இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் தலைவர் பி.ஆ.தேவக்க வீரசிங்கவால், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் நாகலிங்கம் வேதநாயகத்திடம் கையளிக்கப்பட்டது.

அத்துடன் 2018 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்டம் தேசிய மட்டத்தில் ஓய்வூதிய திட்ட நடைமுறைப்படுத்தலில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. இதற்கான தேசிய விருது மட்டக்களப்பு மாவட்டச் செயலர் மாணிக்கம் உதயகுமாரிடம் கையளிக்கப்பட்டது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள ஏனைய மாவட்டங்களிலும் இந்தத் திட்டம் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முக்கிய...

கொழும்பு - இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களுக்கான நிரந்தரத் தீர்வு மாத்திரமின்றி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினைக்கும் இது வரையில் எந்தத் தலைவரும் தீர்வை வழங்கவில்லை. கர்ப்பிணிப் பெண்கள், சிறுவர்கள் உள்ளிட்ட 10 ஆயிரம் பேர் இராணுவத்திடம் சரணடைந்தார்கள். அவ்வாறு சரணடைந்தவர்களுக்கு என்ன ஆனது என்பதற்கு பதில் கிடைக்கவில்லை. முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச, அவரது ஆட்சிக் காலத்தில் பாதுகாப்புச் செயலராக இருந்த கோத்தபாய ராஜபக்ச, முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மற்றும் தற்போதைய அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட அனைவரும் இதற்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்களே.

ஒரு தரப்பினருக்கு கிடைக்க வேண்டிய வாக்குகளை சிதைப்பதற்காக நான் பணம் வாங்கியிருப்பதாகவும் சிலர் குற்றஞ்சாட்டுகின்றனர். துண்டு அறிக்கைகளை அச்சிட்டு பரப்புரை செய்வதற்கு கூட என்னிடம் போதுமான நிதி இல்லை. அனந்தி சசிதரனே நான் கட்டுப்பணம் செலுத்துவதற்கும் உதவி செய்தார்.

தேர்தலுக்கு மிகக் குறுகிய காலமே காணப்படுகின்ற நிலையில் தற்போது நிரந்தத் தீர்வைப்பற்றி பேசுவது அர்த்தமற்ற செயலாகும். எனவே இயன்ற வரை இடைக்கால தீர்வையாவது பெற்றுக் கொள்ளவே முயற்சிக்க வேண்டும். இதைப்பற்றி எதுவுமே கூறாமல் எவ்வாறு மக்களிடம் வாக்கு கேட்க முடியும்? எனவே தமிழ் கட்சிகளின் 13 கோரிக்கைகளையும் முதன்மை வேட்பாளர்கள் இருவரில் ஒருவர் ஏற்றுக் கொண்டால் நான் போட்டியிலிருந்து விலகத் தயாராக உள்ளேன் - என்றார். (ம)

## ஆட்சிக்கு...

தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் அலிஸ் ஜி.வெல்ஸ், அமெரிக்க நாடாளுமன்றத்தின் அயலுறவுக் குழுவின், ஆசியா பசுபிக்குக்கான துணைக் குழுவில் நேற்றுமுன்தினம் உரையாற்றிய போது இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

லெப்.ஜெனரல் சவேந்திர சில்வா இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டது தொடர்பாக, அமெரிக்கா ஏமாற்றமடைந்திருப்பது குறித்து பகிரங்கமாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பாக அவருக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபை மற்றும் பிற அமைப்புகளால் ஆவணப்படுத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் மோசமானவை மற்றும் நம்பகமானவையாகும்.

இலங்கை ஒரு முக்கியமான கடல்சார் சக்தியாகவும், இந்தோ பசுபிக் பங்காளராகவும் இருக்கிறது. அமெரிக்க சட்டத்தின் கீழ், பரஸ்பர நன்மை பயக்கும் இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பைக் குறைப்பதற்கு, இந்தப் பதவி உயர்வு எங்களை கட்டாயப்படுத்துகிறது என்பதை நாங்கள் தெளிவுபடுத்தியுள்ளோம்.

காணாமல் ஆக்கப்பட்டோர் மற்றும் இழப்பீடுகளுக்கான செயலகங்களை நிறுவுதல், மற்றும் வடக்கு கிழக்கில் நிலங்களை அவற்றின் உரிமையாளர்களுக்கு மீள ஒப்படைத்தல் போன்ற விடயங்களில் அரசின் முன்னேற்றங்களை அமெரிக்கா ஊக்குவிக்கிறது.

அரசமைப்புச் சீர்திருத்தம், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மாற்றுவது, உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவை நிறுவுதல் மற்றும் கடந்தகால குற்றங்களுக்கு பொறுப்புக்கூறலை உறுதி செய்ய நம்பகமான நீதித்துறை பொறிமுறையை உருவாக்குதல் உள்ளிட்ட இலங்கையில் சில வாக்குறுதிகளில் மெதுவான முன்னேற்றமே காணப்படுகிறது அல்லது முடங்கிப் போயுள்ளது. இவை மற்றும் ஏனைய விவகாரங்கள் தொடர்பாக இலங்கையுடன் தொடர்ந்து இணைந்து பணியாற்ற எதிர்பார்க்கிறோம்.

அடுத்தமாதம் நடக்கவுள்ள தேர்தலில் எந்த வேட்பாளர் வெற்றி பெற்றாலும் எங்களின் மனித உரிமைகள் நிகழ்ச்சி நிரல் தீவிரமாக அழுத்தம் கொடுக்கும்.

இலங்கையர்கள் தங்கள் அடுத்த அரச தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்காக நவம்பர் 16 ஆம் திகதி நடக்கவுள்ள தேர்தல், சுதந்திரமானதாக, நியாயமானதாக, வன்முறையற்றதாக இருக்கும் என்றும், ஆசியாவின் பழமையான ஜனநாயகத்துக்கு பொருத்தமான குணங்களை வெளிப்படுத்தும் என்றும் அமெரிக்கா எதிர்பார்க்கிறது.

முன்னேற்றத்தை ஆதரிப்பதற்காக, மனித உரிமைகள், நல்லிணக்கம் மற்றும் நிலைமாறுகால நீதி ஆகியவற்றுக்கு ஆதரவு அளிப்பது உள்ளிட்ட விடயங்களில் இலங்கையுடன் நாங்கள் தொடர்ந்து பணியாற்றுகிறோம்.

இராஜதந்திர ஈடுபாட்டுக்கு மேலதிகமாக, இலங்கையின் ஜனநாயக நிறுவனங்களை வலுப்படுத்தவும் சிவில் சமூக அமைப்புகளுக்கு ஆதரவளிக்கவும் நாங்கள் இணைந்து செயற்படுகிறோம். பொது நிதி நிர்வாகத்தை மேம்படுத்துவதற்கும், ஊழலை எதிர்த்துப் போராடுவதற்கும், பொறுப்புணர்வை ஊக்குவிப்பதற்கும் இலங்கையின் திறனை நாங்கள் உருவாக்கி வருகிறோம் - என்றார். (ஒ,5)

## ஐந்து...

ஒருமித்த நிலைப்பாட்டை மேற்கொள்வதற்காக யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்கள் மேற்கொண்ட முயற்சியின் பயனாக ஐந்து தமிழ் கட்சிகள் ஒருமித்துச் செயற்பட முடிவெடுத்துள்ளன. இதன் தொடர்ச்சியாக இந்த ஐந்து கட்சிகளும் முதல் தடவையாக இன்று கூடுகின்றன. அரச தலைவர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் இந்த ஐந்து கட்சிகளின் 13 அம்சக் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ள மறுத்துள்ளனர். இதனால் அடுத்தகட்ட நடவடிக்கை தொடர்பில் ஆராய்வதற்கும், எவரை ஆதரிக்கலாம் என்பது தொடர்பில் பரிசீலிப்பதற்குமே இந்தச் சந்திப்பு என்று அறிய முடிகின்றது. (ம-105)

## தமிழ்ச்...

கூட்டமைப்பின் சில அரசியல்வாதிகளே குழப்பியடித்தனர். அங்கிருந்த தமிழ் சகோதர்கள் இதற்கு எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை. குருகந்த தேரர் பொதுமக்களுக்கு சேவை செய்தவர். புற்றுநோயால் பீடிக்கப்பட்டு உயிரிழந்தார். சுமார் 11 வருட காலம் குருகந்த பகுதி மக்களுக்காகவே அவர் சேவை செய்து வந்தாரே தவிர தனிப்பட்ட தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவில்லை.

வடக்கில் வேறொரு அரசே இருக்கிறது. இந்த அரசின் குதர்க்கமான ஆட்சியின் காரணமாகவே சிங்கள பௌத்தர்களுக்கு இந்த நாட்டில் இடமில்லாமல் போகிறது. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் நாடாளுமன்றத்தில் தாம் இந்த நாட்டுக்கு விசுவாசமாக இருப்பதாக சத்தியப்பிரமாணம் செய்து விட்டு அநுராதபுரத்துக்கு அப்பால் சென்றவுடன் தனி நாடு பற்றி பேசுவது எந்த வகையில் நியாயமாகும்? எங்களுக்கு நடைமுறைப்படுத்தப்படும் சட்டம் பிரிவினைவாதிகளுக்கு நடைமுறைப்படுத்தப்படுவதில்லை.

காலஞ்சென்ற பௌத்த பிக்குவின் இறுதி சடங்கிற்கு செய்ய வேண்டியதை நாங்கள் பௌத்தர்கள் என்ற ரீதியில் செய்து விட்டோம். கூட்டமைப்பினர் அதற்கு எதிராக நீதிமன்றம் சென்றுள்ளனர். அதனை நாங்கள் நீதி மன்றத்தில் சந்திக்கத் தயார். குருகந்த தேரரின் உடல் மூன்று நாள்களுக்கு வைத்திருக்கும் வகையிலேயே பதப்படுத்தப்பட்டிருந்தது. நீதி மன்ற தீர்ப்பு வருவதற்கு தமதமாகும் என்ற நிலையிலேயே மனிதாபிமான ரீதியில் அவரின் இறுதி கிரியைகளை மேற்கொண்டோம். இந்த சந்தர்ப்பத்தில் நாட்டின் பல பாகங்களில் இருந்து 200க்கும் அதிக பௌத்த பிக்குகள் முல்லைதீவுக்கு வருகை தந்திருந்தனர்.

இந்த விடயம் தொடர்பாக நான் சிறை செல்லவும் தயாராக இருக்கின்றேன். பல தடவைகள் சிறை சென்றுள்ளேன். இதற்காக ஒருபோதும் பயப்படப் போவதில்லை. நாட்டில் தமிழ் மக்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. மாறாக சுமந்திரனுக்கும் விக்னேஸ்வரனுக்கும் மாத்திரமே பிரச்சினை இருக்கிறது. கிறிஸ்தவ மதத்தவரான சுமந்திரன் இந்து ஆலயம் குறித்து அக்கறை காட்ட வேண்டிய அவசியம் என்ன? - என்றார். (ம-31)

## தெரிவுக்...

னதும் இருக்கைகள் நிரம்பியிருந்ததால் தாக்குதல் நடந்ததும் உடனடியாக நாடு திரும்ப முடியவில்லையென மைத்திரி தனது வாக்குமூலத்தில் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் சிறிலங்கன் ஏயார்லைன்சில் இருந்து பெறப்பட்ட தகவல்களின்படி, ஏப்ரல் 21ஆம் திகதி சிங்கப்பூரிலிருந்து இலங்கைக்கு வந்த 3 வானூர்திகளில் இருக்கைகள் இருந்தமை தெரிய வந்துள்ளது என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிங்கப்பூரிலிருந்து நாடுதிரும்ப, அந்த நாட்டு அரசு சிறப்பு வானூர்திச் சலுகையை வழங்க தயாராக இருந்தபோதும், ஏற்கனவே அவர் முன்பதிவு செய்யப்பட்ட வானூர்தியில் திரும்ப முடிவு செய்து, சலுகையை நிராகரித்திருந்தார். ஆனால் அவர் உடனடியாக நாடு திரும்பியிருக்க வேண்டுமென தெரிவுக்குழுவின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம)

## இராணுவத்தை...

அடித்து இழுத்துச் சென்று சிறையில் அடைத்தார்கள். இதுவா இராணுவத்தினர் மீது இவர்கள் வைத்துள்ள மரியாதை?. அப்படியானால் அந்த மதிப்பின் அடிப்படையிலா அன்று இராணுவத்தினர் கோத்தபாய ராஜபக்ஸ வீட்டு நாயை குளிப்பாட்டவும், பசில் வீட்டு தோட்ட வேலைக்கும், ராஜபக்ஸ வீட்டு பெண்களின் சேலையை கட்டுவதற்கும் பயன்படுத்தப்பட்டார்கள். நினைப்பதற்கே நகைப்பாக உள்ளது. கடந்த வருடம் நாம் வரவு செலவு திட்டத்தை முன்வைப்பதற்கு தயாராகும்போது பொதுமக்கள் முன்னணிக் கட்சியின் தலைவராக இருந்த முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ஸ அரசியல் சூழ்ச்சியின் மூலம் தலைமை அமைச்சராக அமர்ந்தார். நாம் நாட்டுக்கு நல்லது செய்ய முயற்சித்த அனைத்து தருணங்களிலும் எதிர்க்கட்சி என கூறிக்கொள்ளும் மகிந்த தரப்பினர் எமது காலில் பிடித்து இழுத்தார்கள்.

அதனை தொடர்ந்து நாம் இடைக்கால வரவு செலவு திட்டத்தையே முன்வைத்தோம். தற்போது அரச தலைவர் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் எதிர்வரும் 3 மாதங்களுக்காக நாம் இடைக்கால வரவு செலவு திட்டத்தை முன்வைத்துள்ளோம். அதனை தொடர்ந்து உயிர்த்த ஞாயிறு தாக்குதல், அதைப் போல இன்னுமொரு பிரச்சினை என்பவதற்குக்கு முகம் கொடுத்து மிகவும் கடினமாக மீண்டும் நாட்டை கட்டியெழுப்பியுள்ளோம். பாதிக்கப்பட்ட சுற்றுலாத்துறையை மேம்படுத்தியுள்ளோம் - என்றார். (ம)

## பாதுகாப்பு..

போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நல்லிணக்கம் மற்றும் சமூக ஒற்றுமையின் தேவை மிக முக்கியமாக இருக்கும் இந்த நேரத்தில், லெப்.ஜெனரல் சவேந்திர சில்வாவின் நியமனம், இலங்கையின் நற்பெயரையும், நீதி மற்றும் பொறுப்புக்கூறலை ஊக்குவிப்பதற்கான அதன் உறுதிப்பாட்டையும், குறைமதிப்புக்கு உட்படுத்துகிறது.

இராணுவத் தளபதியாக லெப்.ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு அளிக்கப்பட்டுள்ள பதவி உயர்வு அமெரிக்க சட்டத்தின் கீழ், இராணுவத்துடனான, இருதரப்பு ஒத்துழைப்பைக் கணிசமாகக் குறைக்கும் என்று, அரச தலைவரிடமும் ஏனைய மூத்த அதிகாரிகளிடமும் நாங்கள் தெளிவாகக் கூறியுள்ளோம்.

அதேவேளை, சவேந்திர சில்வா மற்றும் ஏனைய குற்றவாளிகளில் பொறுப்புக்கூறலானது, கட்டுப்பாடுகளை தளர்த்துவதற்கும், பெரியளவிலான இராணுவ ஒத்துழைப்புக்கும் வழிவகுக்கும்.

இலங்கையின் நீண்டகால அமைதி, செழிப்பு, மற்றும் உறுதிப்பாட்டுக்கு, மனித உரிமை பதிவுகளில் தொடர்ச்சியான முன்னேற்றம் என்பது மிக முக்கியமானதாகும். இலங்கை அடுத்த மாதம் அரச தலைவர் தேர்தலை எதிர்நோக்கியிருக்கிறது.

இலங்கையின் அடுத்த அரசு மனித உரிமைகள் மீதான தனது கவனத்தை அதிகரிக்கும் என்றும், வளர்ந்து வரும் நல்லிணக்க நிறுவனங்களை மேம்படுத்தும் என்றும், நிலைமாறு கால நீதிக்கான அனைத்து வழிமுறைகளையும் செயற்படுத்தும் என்றும் அமெரிக்கா நம்புகிறது. அத்துடன் ஊடகத்துறையின் சுதந்திரத்தையும் மதிப்பையும் உறுதி செய்ய வேண்டியது முக்கியமானது என்றும் அவர் கூறியுள்ளார். (ம-ஒ,5)

## நாடாளுமன்ற...

மூலம் சட்டமா அதிபரிடம் சமர்ப்பிக்க முடியும். உலகில் நிலவும் பயங்கரவாதத்துடன் எமது நாட்டில் நிலவும் சட்ட விதிகள் அதற்கு ஏற்ற வகையில் தயாரிக்கபட வேண்டும் என்றும் இந்த குழுவின் தலைவரும் பிரதி சபாநாயகருமான ஆனந்த குமாரசிறி தெரிவித்தார்.

எமது மக்கள் இது தொடர்பில் அறிந்து கொள்ள வேண்டும் என்பதனால் இந்த விசேட தெரிவுக்குழு அதற்கான நடவடிக்கை மேற்கொண்டது. எவருக்கும் தண்டனை விதிப்பது குழுவின் நோக்கமல்ல என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த குழுவின் உறுப்பினரான அமைச்சர் ரவூப் ஹக்கீம் கருத்து தெரிவிக்கையில், இந்த அறிக்கையை தயாரிக்கும் பொழுது எந்தவொரு விடயத்தையும் மறைப்பதற்கோ அல்லது அழுத்தத்தை மேற்கொள்வதற்கோ நாம் முயற்சிக்கவில்லை - என்று குறிப்பிட்டார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துருக்கியின் இராணுவ நடவடிக்கை நிலத்தை அபகரிப்பதற்கானது அல்ல!

## எர்டோகன் தெரிவிப்பு

அங்காரா,ஒக்.24

சிரியாவின் வடக்குப் பகுதியில் துருக்கி தாக்குதல் நடத்துவது சிரியாவின் நிலத்தை அபகரிப்பதற்காக அல்ல என்று துருக்கி அதிபர் எர்டோகன் தெரி வித்தார். சிரியாவின் வடக்குப் பகுதியில் துருக்கி தாக்குதல் நடத்துவதை உலக நாடுகள் பல ஆக்கிரமிப்பு நடவடிக்கை என்று விமர்சித்த. இந்த நிலையிலேயே இதற்கு மேற்கண்டவாறு பதிலளித்தார் துருக்கி அதிபர் எர்டோகன்.



இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

துருக்கிக்கு எந்த நாட்டின் நிலத்தின் மீதும் பார்வை கிடையாது.

இந்த மாதிரியான குற்றச்சாட்டுகளை மிகப் பெரிய அவமானமாகப் பார்க்கிறோம். சிரியாவின் வடக்குப் பகுதியில் எங்கள் இராணுவம் தாக்குதல் நடத்துவது நில அபகரிப்புக்காக அல்ல என்றார்.

**பின்னணி**

துருக்கி சிரியா எல்லையையொட்டிய சிரியாவில் குர்திஷ் ஆயுததாரிகள் நிலைகொண்டுள்ளனர்.

அவர்கள் தமது எல்லையோரப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளனர் என்று கூறி அவர்கள் மீது தாக்குதல் நடத்த துருக்கி அதிபர் எர்டோகன் உத்தரவிட்டார்.

அதுவரை அதே பகுதியில் குர்திஷ்களோடு இணைந்திருந்த அமெரிக்கப் படைகள் அங்கிருந்து வெளியேறிய நிலையில் சிரியாவில் துருக்கிப் படையினர் தாக்குதல் நடத்தி வருகின்றனர். துருக்கியின் தாக்குதல் காரணமாக சுமார் 4 லட்சம் மக்கள் சிரியாவின் வடக்குப் பகுதியிலிருந்து வெளியேறியுள்ளனர்.

பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டனர். துருக்கியின் இந்த இராணுவ நடவடிக்கைக்கு உலக நாடுகள் கண்டனம் தெரிவித்தன.

இதனைத் தொடர்ந்து போர் நிறுத்தத்துக்குத் துருக்கி சம்மதம் தெரிவித்தது.



# கலிபோர்னியாவில் காட்டுத் தீ

வோஷிங்டன்,ஒக்.24

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில், லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் காட்டுத் தீ ஏற்பட்டது. இந்தக் காட்டுத் தீயால் இருவர் காயமடைந்தனர். பல ஏக்கர் நிலங்கள் தீக்கிரையாகின. லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் மலைப் பகுதிகளில் கடந்த சில நாள்களாக இந்தக் காட்டுத் தீ பரவி வருகிறது. 40 ஏக்கர் அளவிலான நிலங்கள் இந்தத் தீக்கு இரையாகியுள்ளன.

மலைப் பகுதிகளைச் சுற்றியுள்ள நூற்றுக்கணக்கான வீடுகள் காட்டுத் தீயால் சேதம் அடைந்துள்ளன. காட்டுத் தீயை அணைக்க கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கலிபோர்னியா மாகாணத்தின் வடக்குப் பகுதியில் கடந்த வருடம் நவம்பர் மாதம் ஏற்பட்ட காட்டுத் தீயில் சிக்கி 84 பேர் சாவடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# ஆட்சியமைக்கும் வாய்ப்பை இழந்தார் நெதன்யாகு?

ஜெருசலோம்,ஒக்.24

இஸ்ரேலில் கடந்த மாதம் நடந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவில் அந்த நாட்டின் தற்போதைய தலைமை அமைச்சர் பெஞ்சமின் நெதன்யாகுவின் கட்சி ஆட்சியமைக்கும் வாய்ப்பை இழந்தது. லிகுட் கட்சி உட்பட எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. இதையடுத்து எதிர்க்கட்சியான புளூ அன்ட் வைட் கட்சியுடன் கூட்டணி வைத்து தேசிய அரசை அமைப்பதற்கு நெதன்யாகு முயற்சி செய்தார்.

ஆனால் அந்தக் கட்சியின் தலைவரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான பென்னி கான்ட்ஸ் கூட்டணி ஆட்சிக்கு மறுத்துவிட்டார். இந்த நிலையில் மற்றைய சிறிய கட்சிகளின் ஆதரவைப் பெறுவதற்குக் கடுமையாக முயற்சித்தார் நெதன்யாகு. எனினும் அவரால் 55 உறுப்பினர்களின் ஆதரவை மட்டுமே பெற முடிந்தது.

இதனால் அவர் ஆட்சியமைக்கும் வாய்ப்பை இழந்தார். ஆட்சியமைப்பதற்கான கால அவகாசம் முடிய இன்னும் 2 நாள்கள் இருக்கும் நிலையில் நெதன்யாகு தனது தோல்வியை ஏற்றுக்கொண்டார்.

**வாய்ப்பு வழங்கல்**

நெதன்யாகுவின் தோல்வியை அடுத்து ஆட்சியமைக்க வரும்படி புளூ அன்ட் வைட் கட்சியின் தலைவர் பென்னி கான்ட்சுக்கு அந்த நாட்டு அதிபர் ருவென் ரிவ்லின் அழைப்பு விடுப்பார். அவருக்கும் 28 நாள்கள் காலக்கெடு வழங்கப்படும். அவரும் ஆட்சியமைப்பதற்கான வாய்ப்பை இழக்கும் பட்சத்தில் பெரும்பான்மையைப் பெறுவார் என நினைக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை ஆட்சி அமைக்க அதிபர் அழைப்பார். 21 நாள்களுக்குள் அதுவும் நடக்கவில்லையென்றால் நாட்டில் புதிய பொதுத்தேர்தலை அதிபர் அறிவிப்பார் என்பது குறிப்பிடத்தக்கது.

# லொறிகள் மோதியதில் 8 பேர் சாவு


கம்பாலா,ஒக்.24

கரும்புகளை ஏற்றிச் சென்ற இரண்டு பாரவூர்திகள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் 8 பேர் சாவடைந்தனர்.

உகாண்டா நாட்டின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது ஜிஞ்ஜா மாவட்டத்தில் நேற்று இரவு இந்தச் சம்பவம் நடந்தது.

இந்த விபத்தில் பலர் படுகாயம் அடைந்தனர்.

உகாண்டாவில் இவ்வாறாக ஒவ்வொரு ஆண்டும் குறைந்தது 20 ஆயிரம் விபத்துக்கள் நடக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.



# குர்திஷ்கள் விவகாரம் எர்டோகன் - புடின் சந்திப்பு

மொஸ்கோ,ஒக்.24

துருக்கி இராணுவம் மற்றும் குர்திஷ் ஆயுத தாரிகள் இடையே போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டிருக்கும் நிலையில் துருக்கி அதிபர் எர்டோகன், ரஷ்ய அதிபர் புடினைச் சந்திக்க உள்ளார்.

இந்தச் சந்திப்பு ரஷ்யாவில் உள்ள சோச்சி நகரில் நடக்கிறது. சிரியாவின் வடக்குப் பகுதி நிலைமையை இயல்பு நிலைக்குக் கொண்டு வருவது தொடர்பாக எர்டோகனும், புடினும் பேச்சு நடத்த இருப்பதாக ரஷ்ய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

இந்தத் தலைவர்களின் சந்திப்புக் குறித்த மேலதிக தகவல் ஏதும் வெளியாகவில்லை.

## ஹொங்காங் விவகாரம்

# நிர்வாகத் தலைவரை மாற்றச் சீனா திட்டம்

ஹொங்கொங்,ஒக்.24

சீனாவின் தன்னாட்சிப் பிரதேசமான ஹொங்கொங்கில் நடைபெற்று வரும் தொடர் போராட்டங்கள் காரணமாகக் ஹொங்கொங்கின் நிர்வாகத் தலைவர் கேரி லொமை மாற்றுவதற்குச் சீனா திட்டமிட்டுள்ளதாகப் பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

ஹொங்கொங்கின் கைதிகளைச் சீனாவுக்கு நாடுகடத்தி விசாரணைக்கு உட்படுத்துகின்ற சட்டத் தீர்மானத்தைக் கொண்டுவந்தது ஹொங்கொங் நிர்வாகம். அதை நீக்கக்கோரி கடந்த 5 மாதங்களாகப் போராட்டம் நடந்து வருகிறது. பல்வேறு இடங்களில் போராட்டகளத்தில் வன்முறை வெடித்தது.



இது தொடர்பாக போராட்டக்காரர்களிடம் பேச்சு நடத்தியும் சுமூகமான முடிவு எட்டப்படவில்லை.

போராட்டத்தில் ஈடுபட்ட நூற்றுக்கும் மேற்பட்டவர்களை ஹாங்காங் அரசு சிறை வைத்தது. மக்கள் தொடர்ந்து போராடி வருகின்றனர். இந்நிலையிலேயே சீன அரசு, ஹாங்காங் தலைவர் கேரி லாமிற்குப் பதிலாக இடைக்கால தலைவரை நியமிக்க உள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடங்கியது 'பிரெக்ஸிட்'

## நெருக்கடிக்குள் போரிஸ் ஜோன்சன்



லண்டன்.ஒக்.24
ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறுவதான 'பிரெக்ஸிட்' ஒப்பந்தத்தை மூன்று நாள்களுக்குள் நிறைவேற்ற வேண்டும் என்ற பிரிட்டன் தலைமை அமைச்சர் போரிஸ் ஜோன்சனின் புதிய திட்டத்தைப் பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிராகரித்தனர். இதனால் பிரெக்சிட் மறுபடியும் முடங்கியது. இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

இந்த மாதம் 31ஆம் திகதிக்குள் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் விலகிக்கொள்ள வேண்டும் என்பது ஒப்பந்தம். இந்தக் கால அவகாசத்துக்குள் வெளியேறிவிடுவதற்குத் தேவையான சட்டங்களை இயேற்றி, ஐரோப்பிய ஒன்றியத்தை விட்டு பிரிட்டன் விலகுவது மிகவும் கடினம் என்று நாடாளுமன்ற பொது அவையின் தலைவர் ஜேக்கப் ரீஸ்தெரிவித்தார். ஆனால், போரிஸ் ஜோன்சனும், ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவரும் இணைந்து புதியதொரு தீர்மானத்தை உருவாக்கினர். இந்தத் தீர்மானம் பிரிட்டனுக்குப் பல சாதகங்களை வழங்குவதாக அமைந்துள்ளது என்று இருவரும் குறிப்பிட்டனர். இந்தத் தீர்மானம் மீதான வாக்கெடுப்பு பிரிட்டன் நாடாளுமன்றில் நடந்தது. இதற்கு முதலில் ஆதரவு தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், சற்று நேரத்துக்குப் பின்னர் அதற்கு எதிராக வாக்களித்தனர்.

இதனால் பிரெக்சிட்டை முன்னெடுத்துச் செல்வதில் முடக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில், பிரெக்சிட்டுக்கு இன்னும் 3 மாத காலம் நீடிப்புக் கோரி ஐரோப்பிய ஒன்றியத்துக்குக் கடிதம் எழுதிய போரிஸ் ஜோன்சன், பின்னர் அதில் கையெழுத்திடவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.








லெபனான் அரசு பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி ஆறாவது நாளாக அங்கு ஆயிரக்கணக்கானோர் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். லெபனானில் நிலவும் ஊழல் மற்றும் பொருளாதார நெருக்கடியைக் கண்டித்து வீதிகளில் டயர்களை எரித்தல் போன்ற வன்முறைச் சம்பவங்களில் அவர்கள் ஈடுபடுகின்றனர்.

# அமெரிக்கப் படைகள் மீது அழுகிய பழங்கள் வீசல்!

சிரியாவை விட்டு வெளியேறுகின்ற அமெரிக்கப் படைகள் மீது அழுகிய பழங்களை வீசித் தங்களது எதிர்ப்பைக் குர்து மக்கள் வெளிப்படுத்தினர்.

சிரியாவின் வடக்குப் பகுதியிலிருந்து கடந்த திங்கட்கிழமை ஈராக் செல்வதற்கு ஆயத்தமான 500 அமெரிக்கச் சிப்பாய்கள் மற்றும் அவர்கள் வாகனங்களைக் குறிவைத்தே குர்து இன மக்கள் அழுகிய பழங்களை வீசினர். ஐ.எஸ். ஆயுததாரிகளுக்கு எதிரான போரில் அமெரிக்காவுக்குக் குர்திஷ் ஆயுததாரிகள் ஆதரவளித்தனர். ஆனால் துருக்கியின் தாக்குதலைத் தொடர்ந்து அமெரிக்கப் படைகளை அங்கிருந்து திரும்பப் பெற்றார் ட்ரம்ப். இது குர்து படைகளிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்கது.



# இன்றைய நாள்

**மேடம்:** நிகழ்வுகள் மாறுபட்டதாக அமையலாம். செயலில் முன்யோசனை பின்பற்ற வேண்டும். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். பணவரவு மிதமான அளவில் இருக்கும். பெண்கள் நகை இரவல் கொடுக்க வேண்டாம்.

**இடபம்:** உறுதியான மனதுடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க அனுகூல காரணி பலம் பெறும். பண பரிவர்த்தனை திருப்திகரமாகும். பெண்கள் வீட்டு உபயோக பொருள் வாங்குவர்.

**மிதுனம்:** புதிய சிந்தனையுடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் சிறு தொந்தரவு ஏற்படலாம். பண பரிவர்த்தனையில் பாதுகாப்பு தவறாமல் பின்பற்றவும்.

**கடகம்:** மனதில் புத்துணர்வு பிறக்கும். அறிவு பூர்வமான செயல்களில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். தாராள பணவரவில் சேமிப்பு அதிகரிக்கும்.

**சிம்மம்:** பணிகள் நிறைவேற கூடுதல் முயற்சி வேண்டும். தொழில், வியாபாரத்தில் குறுக்கீடுகள் மாற்று உபாயத்தால் சரியாகும். அதிக நிபந்தனைகளுடன் பணக்கடன் பெற வேண்டாம்.

**கன்னி:** பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரம் நண்பரின் உதவியால் வளர்ச்சி பெறும். பண பரிவர்த்தனை அதிகரிக்கும். குடும்பத்தின் முக்கிய தேவையை நிறைவேற்றுவீர்கள்.

**துலாம்:** விலகிய உறவினர் சொந்தம் பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி பணி இலகுவாக நிறைவேறும். நிலுவை பணம் வசூலாகும்.

**விருச்சிகம்:** அனுபவசாலியின் ஆலோசனையால் பணி சிறப்பாக அமையும். தொழிலில் சராசரி உற்பத்தி, விற்பனை இருக்கும். பணவரவை சிக்கனமாக பயன்படுத்துவீர்கள்.

**தனுசு:** குடும்ப உறுப்பினர் ஆதரவாக நடந்து கொள்வர். தொழிலில் இடையூறுகளை சரி செய்வதால் உற்பத்தி, விற்பனை சீராகும். பணவரவு முக்கிய தேவைகளுக்கு பயன்படும்.

**மகரம்:** நண்பரின் அறிமுகமும் ஆலோசனையும் கிடைக்கும். தொழில், வியாபாரம் செழித்து அதிக நன்மை பெறுவீர்கள். தாராள பண வரவில் கொஞ்சம் சேமிப்பீர்கள்.

**கும்பம்:** நற்குணம் உள்ளவரின் நட்பு கிடைக்கும். தாமதமான செயல் அனுகூல பலன் தரும். தொழிலில் உற்பத்தி, விற்பனை தெய்வ அருளால் அதிகரிக்கும்.

**மீனம்:** உறவினர்களிடம் விவாதம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கான வாய்ப்பை பயன்படுத்துவது அவசியம். சேமிப்பு பணம் செலவுகளுக்கு பயன்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஒக்.24
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவ முதல்வர் சபை நடத்தும் பொன் விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான அழைக்கப்பட்ட 20 வயதுப் பிரிவு பாடசாலை கூடைப் பந்தாட்டத் தொடரின் ஆண், பெண் இருபாலருக்குமான ஆட்டங்கள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் இடம் பெற்று வருகின்றது. இதில் இன்று வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு இடம் பெறும் பெண்களுக்கான ஆட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதவுள்ளது.

பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறும் ஆண்களுக்கான ஆட்டத்தில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் சென்.பற்றீக்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது. பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி அணியை எதிர்த்து வேலணை மத்திய கல்லூரி அணி மோதவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி மோதவுள்ளது. (23)

---

யாழ்ப்பாணம் ஒக்.24
யாழ். கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியோடு கோண்டாவில் வடக்கு மத்திய சனசமூக நிலையத்தின் வைரவிழாவை முன்னிட்டு கோண்டாவில் வடக்கு மத்திய விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இதில் இன்று வியாழக்கிழமை. மாலை 4மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அண்ணா ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மணியம் தோட்டம் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 5மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் யாழ்.ஐக்கியம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வளர்மதி விளையாட்டுக் கழக அணி மோவுள்ளது. (23)

---

யாழ்ப்பாணம், ஒக்.24
வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மனோகரா விளையாயட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 11வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இதில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அல்வாய் நணபர்கள் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சிறி அம்பாள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கரணவாய் மத்திய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)


கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்


கிளிநொச்சி இந்துக் கல்லூரி

# வடக்கின் நீலங்களின் சமர் நாளை ஆரம்பம்

கொடிகாமம், ஒக்.24
வடக்கின் நீலங்களின் சமர் என வர்ணிக்கப்படும் கிளிநொச்சி இந்துக் கல்லூரிக்கும், கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்துக்கும் இடையிலான 10ஆவது கடினப்பந்து துடுப்பாட்டத் தொடர் நாளையும், நாளை மறுதினமும் கிளிநொச்சி இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தத் தொடரானது 2005ஆம் ஆம் ஆரம்பிக்கப்பட்டு 2008ஆம் ஆண்டு வரை இடம் பெற்றது. 2009 - 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் நாட்டில் ஏற்பட்ட போர் சூழ்நிலை காரணமாக போட்டி நடைபெறவில்லை. பின்னர் 2014 ஆம் ஆண்டிலிருந்து போட்டிகள் மீண்டும் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இதில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி 4 வெற்றிகளையும், கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம் 2 வெற்றிகளையும் பதிவு செய்துள்ளன. 3 போட்டிகள் சமநிலையில் முடிவடைந்தன.

முதல் நாள் நிகழ்வு காலை 9மணிக்கும், இரண்டாம் நாள் நிகழ்வு மாலை 4 மணிக்கும் இடம் பெறவுள்ளது. முதல் நாள் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலர் இ.இளங்கோவன், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மற்றும் வடமத்திய மாகாண மொபிடல் பிராந்திய பணிப்பாளர் சுகத் அபேசிங்க, கிளிநொச்சி இந்துக் கல்லூரி மற்றும் கிளிநொச்சி தருமபுரம் மத்திய கல்லூரிகளின் பழைய மாணவன் பிரதீப் குமார் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய பழைய மாணவரும், அபிவிருத்தி உத்தியோகத்தருமான ச.கோமேதகன், கிளிநொச்சி ம.ம.வி. பழைய மாணவரும், யாழ். பல்கலைக்கழக இலங்கை கொக்கிச் சங்க மத்தியஸ்தர் பயிற்றுவிப்பாளருமான பா.நேசரூபன், வடமாகாண துடுப்பாட்டச் சங்க பொருளாளரும், கிளிநொச்சி துடுப்பாட்டச் சங்க தலைவருமான அ.றெஜி அலோசியஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இரண்டாம் நாள் நிகழ்வின் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன் வடக்கு மற்றும் வடமத்திய மாகாண மொபிடல் பிராந்திய பணிப்பாளர் சுகத் அபேசிங்க கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய முன்னாள் துடுப்பாட்ட பொறுப்பாசிரியரும் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் உதவி அதிபருமான திரு.ஜெகன் கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் பழைய மாணவரும், மட்டக்களப்பு வேள்ட்விஷன் இணைப்பாளருமான அ.விஜயரூபன் கௌரவ விருந்தினர்களாக கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் பழைய மாணவரும் சாவகச்சேரி பிரதேச சபை மிருசுவில் பிராந்திய பொறுப்பதிகாரி செ.சரவிந்தன், கிளிநொச்சி மத்திய மகா வித்யாலய பழைய மாணவியும் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை நிர்வாக உத்தியோகத்தருமான திருமதி இ.அருள்மலர் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (159 - 23)

# கராத்தே மாணவர்கள் மதிப்பளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஒக்.24
சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற இலங்கை தேசிய கராத்தே தோ சம்மேளனத்தால் நடத்தப்பட்ட வடமாகாண கராத்தே சுற்றுப் போட்டியில் பங்கு பற்றி பதக்கங்கள் பெற்ற அக்கிடமி ஓவ் யாப்பனிஸ்றியு மாட்சல் ஆட்ஸ் மாணவர்கள் மதிப்பளிக்கப்பட்டனர். இந்த நிகழ்வு கடந்த வாரம் திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் இடம் பெற்றது.

மதிப்பளிக்கும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக பொ.ஐங்கரநேசன், சிறப்பு விருந்தினார்களாக சென்.சேய் மோகன் வின்சன், மற்றும் திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத் தலைவர் சி. றாஜ்குமார், மற்றும் சென்.சேய் ரமணிக்காந், ஜெகதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த மாணவர்கள் 14 தங்கப் பதக்கங்கள், 2 வெள்ளிப் பதக்கங்கள், 8 வெண்கலப் பதக்கங்கள் உட்பட மொத்தமாக 24 பதக்கங்களை சுவீகரித்தனர். (23)



# செந்தமிழ், மெசியா இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம்,ஒக்.24
கொடுக்குளாய் சக்திவேல் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்ட சுற்றுத் தொடரில் உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழக அணி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. கொடுக்குளாய் சக்திவேல் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வேரவில் கலைமகள் விளையாட்டுக் கழக அணி மோதியது.



இதில் உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழக அணி 2 : 1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. ஆட்டநாயகனாக உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழக அணியின் அகி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இரண்டாவதுஅரையிறுதியாட்டத்தில் வலைப்பாடு மெசியா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கம்பர் மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

இதில் வலைப்பாடு மெசியா விளையாட்டுக் கழக அணி 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. ஆட்டநாயகனாக வலைப்பாடு மெசியா விளையாட்டுக் கழக அணி வீரர் டட்லி தெரிவு செய்யப்பட்டார். (23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோக்லிக்கும், எனக்கும் இடையில் நெருக்கமான உறவு இருக்கும்

*கங்குலி தெரிவிப்பு*

அணித் தலைவர் கோக்லி இந்திய அணியின் முக்கியமான நபர். எனது முழு ஆதரவும் அவருக்கு உண்டு என பி.சி.சி.ஐ. தலைவராக பொறுப்பேற்ற கங்குலி தெரிவிப்பு.

இந்திய கிரிக்கெட் சபைத் தலைவராக தெரிவு செய்யப்பட்ட இந்திய அணியின் முன்னாள் அணித் தலைவர் கங்குலி, நேற்று பதவியை ஏற்ற பிறகு அவர் தெரிவிக்கையில்;

இந்திய அணியின் முக்கியமான நபர் கோக்லி. அவருக்கு எனது முழு ஆதரவும் உண்டு.

மேலும், நம்பகத்தன்மையில் எந்த சமரசமும் இல்லை. இந்திய அணித் தலைவராக எப்படி செயற்பட்டேனோ, அதேபோல் பிசிசிஐயை வழி நடத்துவேன். டெஸ்ட் கிரிக்கெட்டை பிரபலமாக்குவது எப்படி என்பது குறித்து ஆராய வேண்டும்.

கிரிக்கெட் போட்டியில் பல மாற்றங்களை கொண்டு வருவது சிறந்தது அல்ல. மாற்றங்களை கொண்டு வரும் போது போட்டியை புரிந்து கொள்ள கடினமாக உள்ளது. டோனியை சந்தித்தும் சில முடிவுகளை எடுக்க வேண்டியுள்ளது.

எனக்கும் கோக்லிக்கும் இடையிலான உறவு இணக்கமானதாக இருக்கும். அவர் இந்திய அணியை சிறந்த இடத்துக்கு கொண்டு சென்றுள்ளார். முதல்தர கிரிக்கெட் மீது அதிக கவனம் செலுத்தப்படு - என்றார்.




### தென்னாபிரிக்காவுக்கு எதிரான வெற்றி

# கூட்டு முயற்சிக்கு கிடைத்த வெற்றி

### ரவிசாஸ்திரி விளக்கம்




தென்னாபிரிக்கா அணிக்கு எதிரான தொடர் வெற்றி, கூட்டு முயற்சிக்கு கிடைத்த பயன் என இந்திய கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளர் ரவிசாஸ்திரி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

உலகின் எந்த இடத்தில் விளையாடினாலும் ஆடுகளம் பற்றி கவலைப்படுவதில்லை. இரண்டு இன்னிங்சையும் சேர்த்து எதிரணியின் 20 இலக்குகளை வீழ்த்துவது தான் தேவை. அதில் தான் எப்போதும் கவனம் செலுத்துகிறோம். நம்மிடம் உள்ள துடுப்பாட்டம் சிறப்பாகவும், பந்து வீச்சாளர்களும் 20 இலக்குகளை வீழ்த்தும் போது வெற்றி இலகுவில் கிடைக்கும்.

தென்னாபிரிக்கா அணிக்கு எதிரான தொடர் வெற்றி, கூட்டு முயற்சிக்கு கிடைத்த பயன். வழக்கமாக இந்தியாவில் நடக்கும் தொடர்களில் ஒன்றிரண்டு வீரர்கள் தாக்கத்தை ஏற்படுத்துவார்கள். இந்த தொடரில் எல்லா வீரர்களும் பிரகாசித்துள்ளனர். ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் இருவரும் இரட்டை சதம் அடித்துள்ளனர். மத்திய தர வரிசையில் ரஹானே சதம் போட்டார். புஜாரா, ஜடேஜா தங்களது பங்களிப்பை அளித்தனர். வேகப்பந்து வீச்சாளர்கள் அசத்தினர். இந்த மாதிரி ஒருங்கிணைந்த பங்களிப்பு தான் இந்த வெற்றிக்குக் காரணம் - என்றார்.



## 10 ஆண்டுகளின் பின்னர் பாக். புறப்படும் சங்கக்கார

லாகூரில் இலங்கை கிரிக்கெட் அணி மீது பயங்கரவாதத் தாக்குதல் இடம்பெற்று பத்து ஆண்டுகளின் பின்னர் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும் தற்போதைய எம்.சி.சி.யின் தலைவருமான குமார் சங்கக்கார பாகிஸ்தானுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

கடந்த 2009ஆம் ஆண்டு லாகூர் தாக்குதலுக்குள்ளானவர்களில் ஒருவரான குமார் சங்கக்கார கிரிக்கெட் விளையாட்டிலிருந்து ஓய்வு பெறும் வரை பாகிஸ்தானுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளவில்லை.

இந்த நிலையில் எம்.சி.சி.யின் தலைமைப் பதவியை ஏற்றதையடுத்து, பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொள்ளத் தயாராகி வருகின்றார்.

கடந்த மாதம் பாகிஸ்தானுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்ட இலங்கை அணி வெற்றி பெற்று நாடு திரும்பியது.

இதன்போது பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அளித்த பாதுகாப்பு மற்றும் வசதிகள் குறித்து மகிழ்ச்சி தெரிவித்த சங்கக்கார, பாகிஸ்தானுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு அங்கு ஐ.சி.சி. போட்டிகளை நடத்துவதற்கான வாய்ப்புக்களை ஆராயவுள்ளார்.

எவ்வாறெறினும் எம்.சி.சி. நிர்வாகம் பாகிஸ்தானுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் உத்தியோகபூர்வ அறிவிப்பை இன்னும் வெளியிடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் அணிக்கு திரும்பமாட்டேன்

*அம்லா திட்டவட்டம்*


இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் தென்னாபிரிக்க அணி படுதோல்வி அடைந்தது. இதனால் முன்னாள் வீரர்கள் மீண்டும் அணிக்கு திரும்ப இருப்பதாக செய்திகள் உலா வருகின்றன.

தென்னாபிரிக்கா அணியின் முன்னணி வீரர்களான டி வில்லியர்ஸ், ஹசிம் அம்லா, ஸ்டெயின் போன்ற முன்னணி வீரர்கள் ஓய்வுக்குப் பிறகு அந்த அணி தத்தளித்து வருகிறது.

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை படுமோசமாக இழந்தது. இதனால் ஹசிம் அம்லா ஓய்வு முடிவை திரும்பப் பெற்று மீண்டும் பன்னாட்டுப் போட்டிக்கு திரும்புகிறார் என செய்தி வந்தது. ஆனால், அம்லா இந்த செய்தியை முற்றிலும் மறுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவிக்கையில்;

தென்னாபிரிக்கா அணிக்கு நான் மீண்டும் திரும்பவதற்கான வழியே இல்லை. 15 வருடங்கள் அணிக்காக விளையாடிய பின்னர், ஓய்வு முடிவை அறிவித்தேன் - என்றார்.



## பி.சி.சி.ஐயின் புதிய தலைவராக கங்குலி பதவிப் பிரமாணம்

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் 39ஆவது தலைவராக முன்னாள் இந்திய அணித் தலைவர் கங்குலி பொறுப்பேற்றார்.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை மும்பையை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. 2016ஆம் ஆண்டு இந்திய கிரிக்கெட் சபை மீது முறைகேடு வழக்கு பதிவானது. அதனை சீரமைப்பதற்காக நீதிபதி லோதா தலைமையிலான குழு ஒன்றை அமைத்தது. அந்தக் குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றாததால் புதிய தலைவருக்கான தேர்தல் நடத்தப்பட்டு புதிய தலைவராக கங்குலி தெரிவு செய்யப்பட்டார்.

## குருநகர் பாடும்மீன் அடுத்த சுற்றுக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஒக்.24

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் எவ்.ஏ. கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் [illegible] விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி மோதியது.

இதில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி 4:1 என்ற கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. அணி சார்பில் விசோத், மயூரன், கெயின்ஸ்,டனியஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பதிவு செய்தனர். (23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதினொராம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 05 . 03 . 1932



மறைவு 24 . 10 . 2008

மீசாலை
### அமரர் சோமசுந்தரம் கணேசலிங்கம்
B.A, Dip.in Edu, M.A.
(இளைப்பாறிய கொத்தணி அதிபர்)
திதி : அபரபக்க ஏகாதசி

ஆண்டுகள் பதினொன்றாகிப் போனாலும்
போகாதே நின் நிழலாடும் நினைவுகள்
பேசியமொழிகள் அடி மனதின் அந்தகாரமாய்
ஏகாந்த தனிமையில் சுரம் வடிக்குதே
எம் விழிநீரும் நிதம் சொரியுதே
உம் கனிவு கொண்ட நிஜங்கள்
இங்கு நிஜமற்றுப் போகவில்லை
நிஜமாகி எமையென்றும் வழிப்படுத்தும்
நாள்கள் நடந்தபடி கடந்துமிங்கு - உம் நினைவுகளை
நெஞ்சத்தில் சுமந்தபடி நாமிங்கு வாழ்ந்திடுவோம்.

குடும்பத்தினர்.

35/1A, குமாரசாமி வீதி, கந்தர்மடம்.
" சிவகிரி " மீசாலை வடக்கு, மீசாலை.
72/27, பனிக்கர் ஒழுங்கை, திருநெல்வேலி.

(CS 28883)(4.17)

## மரண அறிவித்தல்

மண்ணில் 15 . 05 . 1948



விண்ணில் 20 . 10 . 2019

### திருமதி இரத்தினாவதி (சின்ராசு) கந்தசாமி

இல.33, மலர்மகள் வீதி, அரியாலையைப் பிறப்பிடமாகவும் இல.72 இப்பாவத்தை கொழும்பு - 15ஐ தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சின்ராசு என்று அன்பாக அழைக்கப்படும் இரத்தினாவதி கந்தசாமி கடந்த (20.10.2019) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சிதம்பரி சேதுப்பிள்ளை தம்பதியினரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற கந்தசாமியின் ஆருயிர் துணைவியும் சரோஜினி தேவி, மல்லிகாதேவி (வவா), ரவித்திரன் (பெரியதம்பி), தெய்வநாதன் (சின்னத்தம்பி), சந்திரபோஸ், இராஜேஸ்வரி (கிளி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் செல்லையா, அரசரட்ணம், சகுந்தலாதேவி, செல்வராணி (ராணி), மனோராணி, உருத்திரா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆனந்தி, பிரபாகர், வசந்தி, ஜெயந்தி, கிரிஜா, மனோகர் (மனோ) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பாஸ்கரன் (கரன்), வினோதினி, கருணாநிதி, சுதாகரன், பிரியந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும் றோஹினி, நந்தினி ஆகியோரின் சின்னம்மாவும் சுபா, சுதன், சபீனா, சஜீவன் ஆகியோரின் பெரியம்மாவும் கௌசல்யா, றொசானி, அபிராமி, அபிராஜ், அங்கஜன், அங்கையா ஆகியோரின் மாமியும் கலைவாணி, கலைச்செல்வி, கீர்த்தனன், கஸ்தூரி, துளசி, துசானா, தனுஷன், சாயிதா, சஹானா, லிந்தியா, அஜீஷ், ஜெஸ்ஷினி, சாயிஸ்ஷா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.10.2019) வெள்ளிக்கிழமை இல.33, மலர்மகள் வீதி, அரியாலையில் உள்ள அவரது இல்லத்தில் மு.ப 10.00 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் அரியாலை சித்துப்பாத்தி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

இல.33, மலர்மகள் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்

தகவல்: குடும்பத்தினர்
கரன் (மருமகன்)

077 864 0825, 021 221 5132



## பி.வி. சிந்து வெற்றி

பிரெஞ்ச் பகிரங்க பன்னாட்டு பூப்பந்தாட்டப் போட்டியில் இந்திய வீராங்கனை பி.வி.சிந்து வெற்றி பெற்றார். பிரெஞ்ச் பகிரங்க பன்னாட்டு பூப்பந்தாட்டப் போட்டி பாரிஸ் நகரில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியது. இதில் பெண்கள் பிரிவில் நடந்த ஒற்றையர் பிரிவு ஆட்டம் ஒன்றில் இந்திய வீராங்கனை பி.வி.சிந்து கனடா நாட்டு வீராங்கனை மிட்செல் லீயை 21:15, 21:13 என்ற நேர் செட் கணக்கில் வீழ்த்தி வெற்றி பெற்றார்.

அமெரிக்க லொத்தர் இலவச விசா
பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன
2021ல் நீங்களும் அமெரிக்காவில்..
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
0768226241
V2 Travels
யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240
நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242
திருகோணமலை 0768226237 | மானிப்பாய் 0768226238
சுன்னாகம் 0764550670 | கொடிகாமம் 0764550675
புதுக்குடியிருப்பு 0764550673 | மருதங்கேணி 0764550671
பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960

மணமகன் தேவை
30 வயதுடைய பெண்ணிற்கு படித்த உத்தியோகமுள்ள கிறிஸ்தவ சபையிலுள்ள மணமகன் தேவை.
078 992 6800

## மரண அறிவித்தல்

தாய் மடியில் 19 . 01 . 1951



இறைவன் அடியில் 21 . 10 . 2019

### அமரர் லயன். க.ம.இராஜேந்திரன் JP
(ஓய்வுபெற்ற கணக்காளர்)

**முன்னாள் கணக்காளர்** : மாவட்ட அபிவிருத்தி சபை யாழ் கச்சேரி (மாவட்டசெயலகம்),மாநகர சபை - மட்டக்களப்பு, இலங்கைசெஞ்சிலுவைச்சங்கம் யாழ்ப்பாணம், NECORD - முல்லைத்தீவு, கிளிநொச்சி,

**முன்னாள் தலைவர்** : யாழ். பலநோக்கு கூட்டுறவுச்சங்கம்,கோண்டாவில் ஞானவீர சனசமூக நிலையம், கோண்டாவில் அரிமாகழகம்.

**முன்னாள் உபதலைவர்** : யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை பழையமாணவர் சங்கம்.

**முன்னாள் பொருளாளர்** : கோண்டாவில் - ஞானவீர சிக்கன கடனுதவு கூட்டுறவுச்சங்கம்.

**பொருளாளர்** : கோண்டாவில் செம்மாந்தோட்ட ஞானவைரவர் ஆலயம்,வடமாகாண இந்து அமைப்புக்களின் ஒன்றியம்.

**மத்தியஸ்தர்** : மத்தியஸ்த சபை,யாழ்ப்பாணம்.

மானிப்பாய், சங்குவேலியை பிறப்பிடமாகவும் கோண்டாவில், புகையிரத நிலைய வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட லயன். க.ம.இராஜேந்திரன் JP 2019.10.21 அன்று இறைவனின் பாதங்களைச் சரணடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - இரத்தினம் தம்பதியினரின் மூத்தமகனும் செல்லையா - பாக்கியம் தம்பதியினரின் மருமகனும் வசந்தாவின் அன்புக் கணவரும் ஆர்த்திகன் (ஜேர்மனி),தர்ஷிகா (பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம் நிர்வாகம், வடமாகாணம்), அஜந்தன் (கட்டடங்கள் திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஞானமணி (திருகோணமலை), தேவராசா (சோசலிச சமத்துவக் கட்சி, ஹற்றன்), தவமணி, ரவீந்திரன், பாலேந்திரன் (ஈழநாடு, வலம்புரி முன்னாள் ஊழியர்), செல்வச்சந்திரன் (பிரான்ஸ்), பாஸ்கரன் (இலங்கை மின்சார சபை - சுன்னாகம்), இராகினி (ஜேர்மனி), விவேகச்சந்திரன் (கிருபா - இத்தாலி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பாக்கியதுரை (அமரர்), தனலட்சுமி, பரராஜசிங்கம், ரஜனி, வேணி, தயாநிதி, சர்வானந்தம், சாந்தினி, நடராசா (அமரர்), இராஜதுரை (மட்டக்களப்பு), தர்மலிங்கம், மகேசன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் பிரவீனா (ஜேர்மன்),அமர்நாத் (மாகாணத் திறைசேரி-வடமாகாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆருஜன், ஆரபி, சித்திக், ஆத்மிகா, ஆதவன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 2019.10.25ஆம்திகதிவெள்ளிக்கிழமைகாலை 9 மணியளவில் கோண்டாவில், புகையிரத நிலைய வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக அன்னாரின் பூதவுடல் கோண்டாவில் கிழக்கு, கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

(cs.24105)(13.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.10.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.